கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–13, இதழ் – 5	சித்திரைத் திங்கள்	விலை ரூ. 20/–	ஆண்டு சந்தா ரூ. 200/–	தமிழ் மாத இதழ்
Volume - 13, Issue - 5	April 2022	Price Rs. 20/-	Annual Subscription Rs. 200/-	Tamil Monthly

இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துகள்

"Delivered by India Post"

www.indiapost.gov.in

Dr. R.PRAVEEN BABU,
M.D.(Gen.Med),DNB(Cardio)
Cardiologist (Reg. No.87024)

Dr.A.MANJULA DEVI,
M.B.B.S., D.A., FIC(Cardio)
Physician & Heart Specialist
(Reg. No.88222)

Dr. பிரவீன்

இருதய சிகிச்சை மையம்

சிறப்பம்சங்கள்	FACILITIES
இருதய நோய் சிகிச்சை	CARDIAC CARE
சர்க்கரை நோய் சிகிச்சை	DIABETIC CARE
ஆஸ்துமா நோய் சிகிச்சை	ASTHMA CARE
எக்கோ	ECHO
டி.எம்.டி.	TMT (TREAD MILL TEST)
இ.சி.ஜி.	ECG
ஹோல்டர் மானிட்டர்	HOLTER MONITOR
சிறப்பு இதய பரிசோதனை	SPECIAL CARDIAC TESTS
லேப் (ஆய்வகம்)	LAB
மருந்தகம்	PHARMACY

| 58/32 | Mahadhana Street |
| MAYILADUTHURAI | 609001|
For APPOINTMENT : 90037 36150 ; 63834 59838

| Hotel Noble Nest Building | 23 | Bharathiyar Street |
| Thala Theru | KARAIKAL | 609602 |
For APPOINTMENT : 90878 36150 ; 91235 69279

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM

SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

தென்பாதி P. சிவகுமார் - கல்யாணி .T
கோமாளூர் A. தர்மலிங்கம் - D. நீலா
இவர்களின் இல்லத் திருமண விழா நன்றி அறிவிப்பு

மணமக்கள்

S. பாலமுருகன், B.Tech., - D. நித்யா, B.E.,



ஸ்ரீ பிலவ வருடம் தை மாதம் 25ந் தேதி, 07.02.2022, திங்கட்கிழமை, சென்னை, போரூர், ஸ்ரீ கிருஷ்ணவேணி மஹாலில் நடைபெற்ற திருமண விழாவிற்கு வருகைதந்து, மணமக்களை வாழ்த்திய அனைத்து உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், காலத்தின் சூழலில் நேரில் வரமுடியாமல் வீட்டிலிருந்தே வாழ்த்திய பெரியோர்களுக்கும் மற்றும் இணைய வழியில் கண்டுகளித்து, வாழ்த்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் உள்ளம் நிறைந்த நன்றியினை தெரிவித்து மகிழ்கிறோம். இத்திருமணம் 'கார்காத்தார் ஒப்புரவு' மூலம் உறுதியாயிற்று என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

arcnjewellers | www.arcnjewellers.com

ARC
Natesa Chettiar & Co.
Jewellers

ARC
நடேச செட்டியார்
& கோ ஜுவல்லர்ஸ்

MITHRRA Wedding COLLECTION
MITHRRA DIAMONDS
MITHRRA Kids Collection

63,பட்டமங்கல தெரு,
மயிலாடுதுறை.
04364 222 336
+91 98944 28249

அன்றும்... இன்றும்... என்றும்...!

வாழ்க மணமக்கள்

B.S.இல்ல திருமண வரவேற்பு விழா

மயிலாடுதுறை, சின்னகண்ணாரத்தெரு, திரு.**B.**சுவாமிநாதன் - திருமதி. **S.** தமிழ்ச்செல்வி இவர்களது அன்புச்செல்வன் **S.பாலாஜி,** திரு.ஷ்ரதானந்த் - திருமதி.மீனா இவர்களது அன்புச்செல்வி.**A. நேஹா** இவர்களது திருமணம் முத்துக்களின் நகரம் என்று அழைக்கப்படும் ஹைதராபாத்தில் 06.02.2022 அன்று மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. அதனை முன்னிட்டு 18.02.2022 அன்று மாலை மயிலாடுதுறை, மகாதானத்தெரு ***ஸ்ரீ விமலாம்பிகை திருமண மஹாலில்*** மணமக்களின் திருமண வரவேற்பு விழாவானது சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அவ்விழாவிற்கு தங்களது மேலான வருகையை புரிந்து மணமக்களை வாழ்த்திய எமது உளமகிழ் உறவினர், உயிரான இருபால் நண்பர்கள், வழக்கம்போல் தமது செம்மையான சேவையை நல்கிய மயிலாடுதுறை நகர கார்காத்த வேளாளர் சங்க முன்னாள், இந்நாள் பொறுப்பாளர்கள். மதிப்பிற்குரிய கார்குல முன்னோடிகள், மகளிரணி, இளைஞரணி நட்புகளுக்கும் எங்கள் குடும்ப சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் அன்புடன்,

Ln.**B. சுவாமிநாதன்**
Ln.**S. தமிழ்ச்செல்வி**
மயிலாடுதுறை.

வாழ்க மணமக்கள்

மில்மோர் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குநர், சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேனாள் தலைவர் மற்றும் மேனாள் கார்காத்தார் ஒப்புரவு வெளியீட்டாளர் தெய்வத்திரு. தெ.சு. கணபதி மற்றும் நலமுடன் திருமதி ஆண்டாள் கணபதி ஆகியோரது மகன் செல்வன் **சுந்தர்** (எ) **சண்முகசுந்தரத்திற்கும்,** திரு. கேசவராவ் – திருமதி தேவகி ஆகியோரது மகள் செல்வி **ராஜாஸாவுக்கும்** 06.03.2022 அன்று காலை சென்னை, பெசன்ட் நகர், அறுபடை வீடு முருகன் கோவிலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்திற்கும் 05.03.2022 அன்று மாலை சென்னை கன்னிமாரா ஹோட்டலில் நடைபெற்ற திருமண வரவேற்பு விழாவிலும் கலந்து கொண்டு வாழ்த்திய கார்குல சொந்தங்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தேவிகலா மளிகை

இல்ல சஷ்டியப்த பூர்த்தி விழா



மயிலாடுதுறை, மயூரநாதர் தெற்குவீதி,
தெய்வத்திரு.**G.**வெங்கடாஜலம் பிள்ளை – நலமுடன்.**V.**சரோஜா அவர்களின் குமாரர்,
கீழப்பெரும்பள்ளம், தெய்வத்திரு.**K.**பாலசுப்ரமணியன் பிள்ளை – நலமுடன்.**B.**தையல்நாயகி
மற்றும் தெய்வத்திரு.**M.**மருதவாணன் பிள்ளை–நலமுடன்.**M.**சாவித்திரி ஆகியோரின் குமாரத்தியும்,
எங்களது பெற்றோருமாகிய திரு. **V. குணசேகரன்** – திருமதி. **G. சித்ரா**
இவர்களது சஷ்டியப்த பூர்த்தி விழா மயிலாடுதுறை, மகாதானத்தெரு
ஸ்ரீ விமலாம்பிகை திருமண மஹாலில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. அவ்விழாவிற்கு
தங்களது மேலான வருகையை புரிந்து தம்பதியரை வாழ்த்திய எமது உளமகிழ் உறவினர்கள்,
இருபால் நண்பர்கள், செம்மையான சேவையை நல்கிய மயிலாடுதுறை நகர கார்காத்த
வேளாளர் சங்க முன்னாள், இந்நாள் பொறுப்பாளர்கள். மதிப்பிற்குரிய வணிக பெருமக்கள்
அனைவருக்கும் எங்கள் குடும்பம் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்கள்,

R.குணசேகரன் - தேவிகா
G.V.மனோகரன் - கலைச்செல்வி
சிவகாமசுந்தரி சிவகுருநாதன்

Er.**G.சிவராம்-அபிநயா**
Dr.**S.ராஜேஷ்கன்னா-கவிதா**
Er.**S.சுதர்சன் - சிவப்பிரியா**

பேரன், பேத்திகள் : R.K.சித்தார்த் B.E., S.சைந்தவி, S.ஆதிரன்

இதழின் உள்ளே....

கோவையில் தொழில் வளர்த்த வரலாறு..... 13
அன்றாட வாழ்வில் சட்டங்கள் 16
சக்தி பீடங்கள் – ஓர் பயணம் 18
சங்கப் பலகை.....22
மணமகன் / மணமகள் தேவை..... 26–30
தோல் எனும் பாதுகாப்பு பெட்டகம் 53
வியப்பூட்டும் பிரபஞ்சம்.....55
சிறுவர் பகுதி..... 57–61
சங்க நிகழ்வுகள்.....66

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 1500/-
ஆண்டு சந்தா ரூ. 200/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

கோடையும் சவால்களும்

ஏப்ரல் மாதம் வந்து விட்டது. பிலவ ஆண்டு முடிந்து புதிய தமிழ்ப் புத்தாண்டு சுபகிருது பிறந்ததோடு அல்லாமல் கோடை காலமும் தொடங்கி விட்டது. நம்முடைய கோடை வெயிலுக்கு பயந்து ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலை வாச ஸ்தலங்களுக்குச் செல்பவர்கள் சிலர் இருந்தாலும் கோடை காலத்தை விரும்பி வரவேற்பவர்களும் உள்ளார்கள் அவர்கள் கோடையை வரவேற்கக் காரணம் அந்தக் கோடை காலத்தில் தான் அவர்கள் விரும்பி உண்ணும் மாம்பழம் தர் பூசணி போன்ற பழ வகைகளும் ஐஸ்க்ரீம் போன்ற குளிர் பானங்களும் நிறைய கிடைக்கும் ஆனால் இதே கோடை காலங்களில் அடிக்கடி நாம் சந்திக்கும் தண்ணீர் தட்டுப்பாடு மின்வெட்டு போன்ற பொதுவான பிரச்சினைகளோடு இதர சவால்களையும் நாம் சந்திக்க வேண்டி இருக்கும்

அதாவது இத்தகைய கோடை காலங்களில் வெப்பம் மற்றும் காற்றில் உள்ள ஈரப் பதம் காரணமாக நம்முடைய நோய் எதிர்ப்பு சக்தி பாதிக்க வாய்ப்புள்ளது இந்த கால கட்டத்தில்தான் மக்கள் தங்களுடைய ஜீரணசக்தி மற்றும் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஃப்ளு போன்றவற்றுக்கும் ஆளாக நேரிடும் அவற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் இதே போல் கீழே சொல்லப்படும் இதர இன்னல்களுக்கும் ஆளாக நேரிடலாம்

இப்படிப்பட்ட கோடை காலங்களில் மக்கள் அடிக்கடி சந்திக்க நேரிடுவது கண்களில் நீர் வடிதல், கண் எரிச்சல், மூக்கு தொண்டை இவற்றில் ஒவ்வாமையால் வரும் துன்பங்கள். இக் காலங்களில் ஈ கொசு போன்றவை அதிகரித்து அவற்றால் மலேரியா வயிற்றுப் போக்கு போன்ற வியாதிகள் அதிகரிக்கும் வாய்ப்புகளும் இருக்கும். அதே போல் கோடை காலங்களில் தலைவலி, காது, மூக்குகளில் அடைப்பு அதனால் வாயினால் மூச்சு விடுதல் மற்றும் தூக்கமின்மை போன்றவற்றுக்கும் ஆளாக நேரிடும் அதே போல் கோடை காலங்களில் சன் ஸ்ட் ரோக் என்னும் சூரிய வெப்பத்தாக்குதலுக்குப் பலர் உள்ளாவதுண்டு.

கோடை காலம் பாக்டீரியாக்கள் பல மடங்காகப் பெருக உதவிகரமாக இருக்கும் அதனால் சமைக்கப்பட்ட உணவு வெளியில் வைக்கப்பட்டால் அவற்றில் பாக்டீரியாக்கள் பெருக வாய்ப்பளிக்கும் அதன் காரணமாக ஃபுட் பாய்ஸன் என்னும் உணவு விஷமாகக் கூடும் எனவே சமைக்கப்பட்ட உணவு ஃப்ரிஜ் என்னும் குளிர் சாதனப் பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்படவேண்டும் அல்லது சமைத்தவுடன் உண்டு விட வேண்டும்.

வெயில் காலங்களில் தோலில் ரேஷஸ் என்னும் தடிப்புகள் உண்டாக வாய்ப்புகள் அதிகம் இத்தகைய கோடை கால வியாதிகளில் இருந்து தப்பிக்க மெலிதான குறிப்பாக பருத்தி ஆடைகளை அணிவது நல்லது. மீசில்ஸ் என்னும் தட்டம்மை அதிகமாகப் பரவுவது இந்தக் கோடை காலங்களில்தான். இத்தகைய விஷக் கிருமி தாக்குதலைத் தவிர்க்க எம்.எம்.ஆர் தடுப்பூசி போட்டுக் கொள்வது நல்லது அதே போல் டைஃபாயிடு நோய் பரவுவதும் கோடை காலங்களில்தான்

மேற்சொன்ன வியாதிகளுக்குத் தக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு கோடைகாலத்தை வரவேற்போம் எந்த சவாலையும் சமாளிப்போம்.

தகவல் துளிகள்

1. வாழை இலையில் இயற்கையாகவே "பினாளக்ஸ்" எனும் இயற்கை சத்து உள்ளது. ஆகவே இலையில் சாப்பிடுபவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி ஏற்படும்.

2. விருப்பத்திற்கும் நேசத்திற்கும் வேறுபாடு உண்டு, பூக்களை விரும்புபவர்கள் பறித்து சூடுகிறார்கள். பூக்களை நேசிப்பவர்கள் செடிக்கு தண்ணீர் ஊற்றுகிறார்கள்.

3. கற்றுகொள்வதை ஒரு போதும் நிறுத்தாதே.... காரணம் கற்று தருவதை வாழ்க்கை ஒரு போதும் நிறுத்துவதில்லை.

4. இருக்கும் இடம் தேடிச் சென்று கொடுத்தால் அது தர்மமாகும். யாரெனத் தெரியாமல், கொடுத்தால் அது தானமாகும்.

5. எல்லா எதிர்பார்ப்புகளிலும் ஏமாற்றம் என்ற பரிசும், எல்லா ஏமாற்றத்திற்கும் பிறகு பக்குவம் என்ற பரிசும் கிடைப்பதற்கு பெயர்தான் வாழ்க்கை.

6. நேரமும் வாய்ப்பும் ஒரு போதும் காத்திருக்காது. தன்னம்பிக்கை இருப்பவரிடம்... அது வழியையும் நேரத்தையும் தானாக ஏற்படுத்திக் கொடுக்கும்.

-L. பாபு (எ) ராமலிங்கம், விசலூர்.
9750806991

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவிற்கு அனுப்பபடும் சங்க செய்திகள், கட்டுரைகள், விளம்பரங்கள் போன்றவைகளை ஒவ்வொருமாதமும் 25ம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதற்கு பிறகு பெறப்படும் தகவல்கள் அடுத்துவரும் இதழ்களில் தான் பிரசுரிக்கப்படும்.

- **சங்க செய்திகள் / கட்டுரைகள் வெள்ளைதாளில் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக, இடைவெளி விட்டு, கையெழுத்து புரியும்படி (தட்டச்சு செய்தால் நல்லது) சுருக்கமாக எழுதி அனுப்பவும்.**
- **சங்க செய்திகள் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்கமுத்திரையுடன் அனுப்ப படவேண்டும்.**
- **செய்திகள் மற்றும் கட்டுரைகளை கூட்டவோ / குறைக்கவோ, நிராகரிக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆசிரியரின் முடிவே இறுதியானது.**
- **E-mail-ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.**
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் மட்டுமே அனுப்பப்படவேண்டும். (வங்கி கணக்கில் பணம் செலுத்துவது ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.)**
- **செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.**

அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,**
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

ஆன்மீக குறிப்புகள்

தினசரி காலையும், மாலையும் தூய மனதுடன் சில நிமிடங்களாவது கடவுள் பெயரை உச்சரித்தல் வேண்டும்.

தினசரி காலை எழுந்தவுடன் நமது வலது உள்ளங்கையை பார்க்க வேண்டும். மகாலட்சுமி இருப்பதால் இது துவாதசன தரிசனம் எனப்படும்.

நம் வீட்டின் கிழக்குப் பக்கம் துளசிச்செடி, வேப்பமரம் இருக்க வேண்டும். அதனால் எந்நதவித நோயும் வராது. விஷ ஜந்துக்களும் நம்மை அண்டாது. தூய்மையான காற்றும் கிடைக்கும்.

சிவன், பார்வதி, விநாயகர், முருகர் உள்ள படம் ஒன்றை கிழக்குப் பார்த்து மாட்டி வைத்தால், அது வீட்டில் உள்ள வாஸ்து குறைபாடுகளை சிறிது சிறிதாக நீக்கும்.

பொதுவாக நெற்றிக்கு திலகமிடாமல் பூஜை செய்யக்கூடாது.

அமாவாசை, திவசம் ஆகிய நாட்களில் வாசலில் கோலம் போடக்கூடாது.

வீட்டின் நிலையில் குங்குமம், மஞ்சள் வைக்க வேண்டும். இதனால் தீய சக்திகளும், விஷப்பூச்சிகளும் வீட்டிற்குள் வராது.

அதிகாலை நாலரை மணி முதல் ஆறு மணிக்குள் தீபம் ஏற்றுவதாலும், மாலை ஐந்தரை மணி முதல் ஆறு மணிக்குள் தீபம் ஏற்றுவதாலும் நிறைவான வளமும், பலன்களும் நிச்சயம் கிடைக்கும்.

வீட்டு பூஜையில் கற்பூர தீபம் தானே குளிர்ந்து விடுவது தான் நல்லது. நாம் அணைக்கக் கூடாது.

ஏற்றிய விளக்கில் இருந்து கற்பூரத்தையோ ஊதுபத்தியையோ ஏற்றக் கூடாது.

சாமி படங்களுக்கு வாசனை இல்லாத பூக்களைச் சூடக்கூடாது.

கர்ப்பிணி பெண்கள் தேங்காய் உடைத்தல், பூசணிக்காய் உடைத்தல் கூடாது.

வீட்டின் பூஜை அறையில் தெய்வப்படங்களுடன் மறைந்த மூதாதையர் படத்தை சேர்க்காமல் தனியாக வைத்து வணங்கினால், சிறந்த பலன் கிடைக்கும்.

விளக்கேற்றும் போது மற்றவர்கள் ஏற்றி வைத்த விளக்கின் மூலமாக தம் விளக்கை ஏற்றக்கூடாது. தீப்பெட்டி மூலமாக தான் விளக்கேற்ற வேண்டும்.

நாம் வீட்டில் கடவுளை வணங்கும்போது நின்றவாரே தொழுதல் குற்றமாகும். அமர்ந்தபடி தான் தொழுதல் வேண்டும்.

விளக்கை ஏற்றும் போது வீட்டில் பின்வாசல் இருந்தால் அதன் கதவை சாத்தி விட வேண்டும்.

தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யும் போது வெற்றிலை மற்றும் பாக்குகளை இரட்டைப்படை எண்ணிக்கையில் (2, 4, 6, 8, 10) வைக்க வேண்டும்.

உறவினர்களை வெளியூர் செல்ல வழியனுப்பிய பிறகு பூஜை, எண்ணெய் ஸ்நானம் முதலியவைகளை செய்யக்கூடாது.

பெண்கள் வகிடு ஆரம்பத்தில் குங்குமம் கட்டாயம் வைக்க வேண்டும். ஸ்ரீ மகாலட்சுமியும், அம்பாளும் வகிட்டில்தான் நிரந்தர வாசம் செய்வதால் சுமங்கலிகளுக்கு சகல சௌபாக்கியங்களையும், மங்கலத்தையும் அளிப்பார்கள்.

மாலையில் விளக்கு ஏற்றவதற்கு முன் தான தருமம் செய்வதென்றால் செய்து விடுங்கள். விளக்கு ஏற்றிய பின் தான தருமம் செய்யாதீர்கள்.

குழந்தைகளுக்கு ஆன்மீக வழிகாட்டும் ஸ்லோகங்களும், நமது நீதி நூல்களில் உள்ள நல்ல பழக்க வழக்கங்களும் கற்றுத் தர வேண்டும்.

தனது வீட்டில் கோலம் போடாமலும் விளக்கேற்றாமலும் ஆலயங்களுக்கு செல்லக்கூடாது.

புழுங்கல் அரிசியால் சமைக்கப்பட்ட உணவை தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யக்கூடாது.

ருத்ரம், சகமம் போன்றவற்றை வீட்டில் காலையில் தினமும் கேட்பது நல்லது.

நெய், விளக்கு எண்ணெய், வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய், இலுப்பை எண்ணெய், தேங்காய் எண்ணெய் இவை ஐந்தும் கலந்து ஊற்றி 48 நாட்கள் விளக்கேற்றி பூஜை செய்தால், தேவியின் அருளும், சகல பாக்கியங்களும் கிடைக்கும்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை–90. 9943702054

வாழ்த்துகிறோம்

சென்னை கார்காத்தார் சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. USSR G. நடராஜன் அவர்களுக்கு நீண்டகால சர்வதேச உறவுகள் மேம்பாட்டு பணிகளை பாராட்டி சர்வதேச தமிழ்ப் பல்கலைக்கழகம் 26.03.2022 அன்று "மதிப்புறு முனைவர் பட்டம்" (Doctor of Letters) வழங்கி சிறப்பித்துள்ளது. அவரை சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் வாழ்த்தி மகிழ்கிறது.

வாழ்த்துகிறோம்

நெய்வாசல் சங்க உறுப்பினர் திரு. R. சிவராமனின் மருமகளும் உறுப்பினர் S. சண்முகசுந்தரத்தின் மனைவியுமான திருமதி. S. கல்பனா M.C.A. அவர்கள் சிதம்பரம் நகர மன்ற 15–வது வார்டு உறுப்பினராக வெற்றி பெற்றுள்ளார்கள். அவர்களை பாராட்டி நெய்வாசல் சங்கத்தலைவர் நெ.ஆ. சிவகுருநாதன், செயலர் S. திருமுருகன், பொருளாளர் A. வேணுகோபால், உறுப்பினர் T. ரத்தின சபாபதி ஆகியோர் பொன்னாடை போற்றி கௌரவித்தார்கள்.

நிறம் மாறும் மனிதன்

Dr. D. Kalyanakumar, Trichy-18.

மனிதர்களிடம் நுகர்வு எண்ணம் மேலோங்கிவிட்டது அனைத்தையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையில் சுயநலவாதிகளாக மாறிவிட்டனர். முன்னோர் நமக்கு வகுத்துக்கொடுத்த பாதையில் இருந்து நாம் விலகி நடக்கிறோம். சுயநலம் இருக்கும் இடத்தில் கண்டிப்பாக ஒழுக்கமின்மையும் குடிகொண்டுவிடும் சுயநலவாதிகள் பாவத்தின் படிக்கட்டுகளில் பயணிக்கிறார்கள். எவற்றையெல்லாம் இன்பம் என்று நினைக்கிறோமோ, அவையெல்லாம் துன்பத்தையே நமக்கு தருகின்றன. வேக வேகமாக இன்பத்தை நுகர ஆசைப்பட்டு, துன்பத்துக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்கிறோம்.

அத்வைதத்தில் ஆதிசங்கரர் இறைவனும் மனிதனும் ஒன்று என்கிறார். ஜீவாத்மாவாகிய மனிதன் தனதுமுயற்சியின்மூலம்பரமாத்மா ஆகிறான் என்கிறது அத்வைதம். ராமானுஜரோ அத்வைதத்துக்கும் ஒரு படி மேலே விசிஸ்டாத்வைதத்தை அருளினார். விசிஸ்டாத்வைதம் என்பது, மிகச்சிறந்த அத்வைதம் அடிபட்டு ஒருவன் கிடக்கிறான்; உடலில் ரத்தம் வழிகிறது என்றால், தனது ரத்தமாக எவன் நினைக்கிறானோ அவனே வைணவன் என்கிறார். உதவும் எண்ணம் இல்லாதவர்கள் மண்ணில் உலவினாலும், உலவாவிடினும் வீண்தான்.

நமக்கு பணம் தேவையாக இருந்தாலும், பணம் குறித்த புரிதல் இல்லாமல், அதுதான் வாழ்க்கை என, வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எவ்வளவுதான் சம்பாதித்தாலும், சாதாரண மனிதன் முதல் அரசியல்வாதிகள் வரை பணத்தின் மீதுள்ள பேராசை மட்டும் விலகுவதில்லை. அதற்காக உறவுகள், நண்பர்கள், பணிபுரியும் இடங்கள் என, எல்லோரையும் நோகடித்து, சுகமான வாழ்வை இழக்கிறோம். பணம், உயிரை பறித்த சம்பவங்களும், நம்மை சுற்றி அரங்கேறி கொண்டிருக்கின்றன.

மனித இனம் ஆறறிவைப்பெற்ற இனமாக இருந்தாலும் குணத்தால் ஒவ்வொருவரும் சற்று இயல்பு நிலையிலிருந்து மாறுபட்டுத்தான் இருப்பார்கள். அப்படி குணத்தால் மாறுபட்டு இருந்தாலும் அனைத்து செயல்பாடுகள் நடவடிக்கைகள் யாவும் மனசாட்சிக்கு உட்பட்டே இருக்கும். அப்படி இருந்தால்தான் அம்மனிதன் ஆறறிவைப் பெற்றவனாக முழுமை அடைந்தவனாக இருக்க முடியும். சிந்தித்துச் செயல்படும் பகுத்தறிவைப் பெறாத யாவரும் முழுமனிதனாக இருக்க முடியாது. ஆனால் ஒரு சிலர் இதற்கு விதி விலக்காக நிறம் மாறும் குணமுடையோர்களாக தனது நிலைபாட்டில் சரியாக இருக்க மாட்டார்கள். தனக்கு சாதகமாக எப்படி உள்ளதோ அப்படி தன்னை மாற்றிக்கொள்வார்கள்.

இவ்வுலக வாழ்வில் எதிலும் நேர்மையுடன் மனசாட்சியுடன் செயல்பட வேண்டும். தாம் கொண்ட கொள்கையில் உறுதியாய் இருக்க வேண்டும். எதிலும் ஒரு பிடிப்பினை வேண்டும். அப்படியல்லாது மனம் போன போக்கில் நேரத்திற்கு ஒரு நிறமாக மாறிக்கொண்டு சென்றால் அவப்பெயரையே சுமக்க நேரிடும். ஆகவே உணராதவர்களுக்கு உணர்த்தாதவரை தனது தவறான போக்கு ஒருபோதும் தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. உணர்வதும் உணர்த்துவதும் இந்த இரண்டுமே மனிதனின் கடமையாகிறது. ஆகவே நாம் இந்த விஷயத்தில் கவனமுடன் கையாண்டு யார்மனதையும் நோகடித்து இலாபம் தேடிக்கொள்ளாமல் நிறம் மாறா மனிதர்களாக வாழ்ந்து மற்றவர்களையும் மகிழ்ச்சியுற வாழச் செய்வோமாக !!

கார்காத்தார் திருமண சேவையில் 18 ஆண்டுகள்!

SHRIRAM MATRIMONY SERVICES

ஸ்ரீராம் திருமண தகவல் நிலையம்

SMS Service available

76/1, வ.உ.சி. தெரு, சிதம்பரம்- 608001. Mob: 94862 23030



இப்போது இணையத்தில் உங்கள் SHRIRAM MATRIMONY

www.shriramматrimony.org

e-mail: matrimonycdm@gmail.com

ஒரு முறை பதிவுக்கட்டணம் மட்டும் - திருமணம் முடியும் வரை இணையதளத்தில் வரன்களை பார்வையிடலாம், கட்டுப்பாடுகள் இல்லை

SMS Service-க்கு தனிக்கட்டணம்.

கோவையில் தொழில் வளர்த்த வரலாறு.

A. RAJARETHINAM, PORUR,
CHENNAI. PH : 9444224366

இந்திய அளவிலும், உலக அளவிலும் தனது தொழில் வளத்தில் சரித்திரம் படைத்தது கோவை. இது தமிழ்நாட்டில் சென்னை நகரத்துக்கு அடுத்த பெரிய தொழில் நகரம். நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை எல்லாப் பகுதிகளையும் போலவே அடிப்படையில் விவசாயத்தை சார்ந்திருந்த பகுதியாகத்தான் இருந்தது கோவை. எனது சொந்த ஊர் தஞ்சை ஜில்லா. வளர்ந்த ஊர் திருச்சி. கோவையில் 5 வருடங்கள் நான் இஞ்சீனியரிங் படித்தேன். 5 வருடங்கள் கோவை ஜில்லாவில் சர்க்கரை ஆலையில் பணி புரிந்தேன். கடந்த 150 ஆண்டுகளில் கோவை முன்னேறிய விதம் பற்றி அறியும் போது, அந்த நகரம் என்னைக் கவர்ந்தது. அந்த நகரம் முன்னேற்றமடைந்த விதத்தை இங்கு எழுதுகிறேன்.

தற்போது, பஞ்சாலைகளும், அதற்கான இயந்திரங்கள், பம்ப், மோட்டார், ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள், பவுண்டரிகள், பல வகையான சிறு தொழிற்சாலைகளைக் கொண்ட குறிப்பிடும்படியான தொழில் நகரமாக வளர்ந்திருக்கிறது. தரமான தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள், தொழில் வளர்ச்சிக்கு உதவும் தொழில் வணிக அமைப்புகள் ஆகியன வளர்ந்துள்ளன. இன்று உலகில் கிடைக்கும் எந்த ஒரு பொருளையும் கோவையில் உருவாக்கிவிடக் கூடிய அளவு தொழில் நுட்ப அறிவும், ஆற்றலும் இங்கு வளர்ந்துள்ளது. மின்வெட்டு, நிதிப்பற்றாக்குறை போன்ற தடைகளையும் தாண்டி இந்த சாதனை நடந்திருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி பல மாற்றங்களை ஏற்படுத்தியது. பிரிட்டீஷ் இந்திய அரசு, விவசாயத்திலும், தொழிலிலும் அக்கறை காட்டியது. விவசாயத்தில் நிலக்கடலை, பருத்தி, கரும்பு போன்ற புதிய வகைப்பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பின்னர் பஞ்சாலைகள் உண்டாயின. பிரிட்டீஷார் உண்டாக்கிய ரயில் பாதையும், நீலகிரி காபித்தோட்டங்களும், கோவைக்கு புதிய தொழில் வணிக வாய்ப்புகளை உருவாக்கின. பைகாராவிலிருந்து மின்சாரம் கிடைத்தது. அதனால் பஞ்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்தன. மோட்டார்கள், பம்ப் தயாரிப்பு தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்தது. இதற்குத் தேவையான உதிரி பாகங்கள் செய்யும் தொழிற்சாலைகள் நிறையத் தோன்றின. இங்கு வளர்ந்த தொழில் நுட்பக் கல்வியும் பெரிய அளவில் வளர்ச்சிக்கு வழிகாட்டின.

பிரிட்டீஷ் ஆட்சிக்காலத்தில் கிடைத்த அனைத்து தொழில் வணிக வாய்ப்புக்களையும் மற்ற எல்லா பகுதிகளையும் விட கோயம்புத்தூர் துணிந்து நன்கு பயன்படுத்திக் கொண்டது. பஞ்சாலைத் தொழில் தான் கோயம்புத்தூர் தொழில் வளர்ச்சியின் ஆதாரம். தொழில் புரட்சியின் தாக்கத்தால் இந்தியாவில் நவீன முறை தொழில்கள் மெல்ல வளரத் தொடங்கின. கோவையின் இருபுறமும் நீலகிரியிலும், ஆனைமலையிலும் காபி மற்றும் தேயிலைத் தோட்டங்கள் உருவான பிறகு கோயம்புத்தூரின் தொழில் வணிக நடவடிக்கைகளில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. 1872–ம் ஆண்டு மேற்கு கடற்கரையும், கிழக்கு கடற்கரையையும் இணைக்கும்படி அமைக்கப்பட்ட ரயில்பாதை, கோவையின் தொழில் வளர்ச்சிக்கு சாதகமான அம்சமாக அமைந்தது. இதனால் கோயம்புத்தூரில் இருந்து மற்ற ஊர்களுக்கு உற்பத்தியான பொருட்களை அனுப்புவது சுலபமாக மாறியது. கொச்சின் துறைமுகத்துக்கும், சென்னை துறைமுகத்துக்கும் பொருட்கள் விரைவில் வந்து சேர்ந்தன.

ரயில்பாதை வசதி இருந்ததால் ராபர்ட் ஸ்டேன்ஸ் தனது காபி கியூரிங் தொழில்சாலையை கோயம்புத்தூரில் நிறுவினார். அதைத் தொடர்ந்து பல தொழில்கள் கோவையில் தொடங்கப்பட்டன. 19–ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வாழ்ந்த கோவையின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான எஸ்.பி. நரசிம்மலு பம்பாயில் இயங்கி வந்த ஒரு பஞ்சாலையைப் பார்த்துவிட்டு, அதைப்போலவே கோயம்புத்தூரிலும் பல பிரமுகர்களின் முதலீட்டுடன் கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்ட் வீலிங்மில்ஸ் 1890–ம் ஆண்டு ஆரம்பித்தார். ஸ்டேன்ஸ் மில்லைத் தொடர்ந்து சோமசுந்தரம் மில்ஸ், காளீஸ்வரா மில்ஸ் ஆகிய நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

வேளாண் துறையிலிருந்து பஞ்சாலைத் தொழிலில் துணிந்து இறங்கியவர்களில் கங்கா டெக்ஸ்டைல்ஸ் தொடங்கிய பி.ஸ்.ஜி குடும்பம், ராதாகிருஷ்ணா மில் தொடங்கிய வி. நாராயணசாமி அவர்களின் குடும்பம், லட்சுமி மில் தொடங்கிய ஜி. குப்புசாமி அவர்களின் குடும்பம் ஆகியன குறிப்பிடத்தக்கவை. 1930–ம் ஆண்டு பருத்தி நிறையப் பயிரிடப்பட்டது. அதனால் விவசாயமும் சிறந்து விளங்கியது. 1932–ம் ஆண்டிலிருந்து 1939–ம் ஆண்டிற்குள் கோவையில் 22 மில்கள் தொடங்கப்பட்டன. கோவையில் சில பகுதிகளில் கதரும் ஒரு தொழிலாக மாறியது.

பஞ்சாலை இயந்திர தயாரிப்பு நிறுவனங்களான டெக்ஸ்டூல், லட்சுமி மிஷின் ஒர்க்ஸ், சவுத் இந்தியா விஸ்கோஸ் ஆகிய மூன்றும் இப்பகுதியில் தொழில் வளத்தை உயர்த்தியது. கோவையில் அறுநூறுக்கும் மேற்பட்ட பவுண்டரிகள் உள்ளன. அதில் பலர் வேலை செய்கிறார்கள். இரும்பு மட்டும் இன்றி, அலுமினியம் உள்ளிட்ட பல உலோகங்களை உருக்கி தேவையான உதிரி பாகங்களைச் செய்யும் தொழிற்சாலைகளும் இங்குள்ளன. பவுண்டரி தொழிலில் அனுபவமுள்ள நிபுணர்கள் பலர் கோவையில் இருக்கிறார்கள்.

மோட்டார், பம்ப் செய்யும் சிறிய, பெரிய தொழிற்சாலைகள் இங்கு அமைந்துள்ளன. சாதாரண மோனோ பிளாக் பம்ப், சப்மெர்சிபிள் பம்ப், ஜெட் பம்ப் தொழிற்சாலைக்கானவை, வீடுகளுக்கானவை, குறிப்பிட்ட வகை ஸ்பெஷல் பம்ப்கள் என்று பல வகையான பம்ப்கள், மோட்டார்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியா சுதந்திரம் பெற்ற போது பி.ஸ்.ஜி, டி.பி.எப் என்ற இரண்டு நிறுவனங்களும் பம்ப், மோட்டார்களை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தன.

அதே நேரத்தில், காலத்துக்கேற்ப மாற்றங்களை செய்வதிலும், புதிய சந்தை வாய்ப்புகளைத் தேடி வெற்றி அடைவதிலும் பெரும் கவனம் செலுத்தினர். இதற்கு எடுத்துக்காட்டாக டெக்ஸ்மோ, ஷார்ப், சி.ஆர்.ஐ போன்ற கம்பெனிகளின் பம்ப்கள் பிரசித்திப் பெற்றன. ஒரு தொழில் துறையில் தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாக உற்பத்தியில் முதலிடத்தைக் தக்க வைத்துக் கொண்டிருப்பது எவ்வளவு கடினம்? அதற்கான முயற்சிகளை கோயம்புத்தூர் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது என்பது பாராட்டுக்குரியது. கோவையில் வெட்கிரைண்டர்கள் செய்யப்படுகின்றன. ஸ்டீல் பர்னிச்சர் உற்பத்தி நன்றாக நடைபெறுகிறது. இங்கு தங்க நகைத் தொழிலும் சிறந்து விளங்குகிறது.

கோவையின் பொறியியல் கல்லூரிகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. இங்கு மிகச் சிறந்த வேளாண்மை கல்லூரி, ஹோம் சயின்ஸ், வனவியல் மற்றும் மருத்துவ கல்லூரிகளும் உள்ளன.

கோவையின் வழிகளைப் பின்பற்றி மற்ற நகரங்களும் பாடுபட்டால், நம் நாடு மிகவும் முன்னேறும். இந்த கட்டுரை எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின் தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலை ஓசை, Spoken English for your Success என்ற புத்தகங்களைப் படித்தால் திறன் மேன்பாடும், வெற்றியும் அடையலாம்.

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRASEKAR, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

Office : **CS TEXTILE PROCESS**
NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **Kasipalayam, Tirupur**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. LIFESTYLE (INDIA)

"QUALITY IS OUR LIFE"

தி. கார்காத்தார் சங்கம் (மெட்ராஸ்)

சூளைமேடு, சென்னை – 600 094.

2021 2022ம் ஆண்டு கல்வி உதவி தொகை வழங்கிய விவரம்

எண்	மாணவ / மாணவி பெயர்	பெற்றோர்	ஊர்	படிப்பு	கல்விஉதவித்தொகை ரூபாய்
1.	A. குருசரண்	V. ஆழ்வார்	உசுப்பூர் (சிதம்பரம்)	MBBS Vth year உக்ரைன்	25000
2.	M. வெங்கடேசன்	R. முத்துக்குமார்	உசுப்பூர் (சிதம்பரம்)	PHARM -D IIIrd year	25000
3.	S. கதிர்வேல்	G. சிவக்குமார்	புதுச்சேரி	B.Tech IVth year	20000
4.	R. ஜகத்	ராஜசேகர்	ஸ்ரீ முஷ்ணம் (விருத்தாசலம்)	B.Tech IVth year	20000
5.	K. சம்பத்நடேசன்	S. கல்யாணகுமார் (Late)	மயிலாடுதுறை	B.Tech IInd year	20000
6.	V. ஐஸ்வர்யா	S. வேல்முருகன்	கீழஅதங்குடி (சிதம்பரம்)	B.Sc Agri IIIrd year	20000
7.	S. சௌமியா	V. சபேசன் பிள்ளை	தர்மநல்லூர் (விருத்தாசலம்)	B.Sc Agri IIIrd year	20000
8.	K. சுவாதி	காளிதாஸ்	சிவபுரி (சிதம்பரம்)	B.E. Com Sci) IIIrd year	20000
9.	S. சுவாதி	சுந்தரவடிவேல்	பேரூர் (சிதம்பரம்)	B.E. (Com Sci) Ist year	20000
10.	P. சந்தோஷினி	B. பிரகாஷ்	சிதம்பரம்	B.E. (Info Tech) IIIrd year	20000
11.	P. லாவண்யா	B. பிரகாஷ்	சிதம்பரம்	B.E. (ECE) IIIrd year	20000
12.	V. சிவரஞ்சனி	T. வைத்தியநாதன்	சாத்துக்கூடல் (சிதம்பரம்)	B.E ((ECE) Ist year	20000
13.	M. பிரித்திவி	முருகானந்தம்	பேரூர் (சிதம்பரம்)	B.E.	20000
14.	A. செல்வக்குமார்	பொன்னையா	சிவபுரி (சிதம்பரம்)	B.E. (Com Sci) IInd year	20000
15.	J. சரத்சந்திரன்	ஜெயச்சந்திரன்	மயிலாடுதுறை	B.E. (mechanical) Ist year	20000
16.	E. சதீஷ்	இளங்கோ	சிவபுரி (சிதம்பரம்)	B.E. (Civil) Ist year	20000
17.	V. ஹரிஹரன்	வெங்கடேசன்	உசுப்பூர் (சிதம்பரம்)	B.E. (Mechanical) IInd year	20000
18.	K. சிவபாலன்	கார்த்திகேயன்	குணமங்கலம்	B.E. Ist year	20000
19.	A. சூர்யபிரகாஷ்	T. ஆறுமுகம்	கடலூர்	B.E. Automobile	20000
20.	N. கிரிஜா	T. நேரு	திருவேற்காடு (சென்னை)	MBA IInd year	15000
21.	S. கோபிநாத்	M. செந்தில்	சிதம்பரம்	MBA Ist year	15000
22.	S. ஹரிபிரகாஷ்	A. சுரேஷ்	மணிக்கிராமம்	M.Com Ist year	15000
23.	S. சிந்துஜா	சுந்தரமூர்த்தி	பேரூர் (சிதம்பரம்)	B.Com Ist year	10000
24.	S. கங்கா	T. சங்கர்	நெய்வேலி	B.Com IInd year	10000
25.	S. கௌரி	T. சங்கர்	நெய்வேலி	B.Com IInd year	10000
26.	G. ஜெயப்பிரதா	D. கணபதி	உசுப்பூர் (சிதம்பரம்)	B.Com IInd year	10000
27.	V. பிரபாகரன்	K. விநாயகம்	உசுப்பூர் (சிதம்பரம்)	B.Com IInd year	10000
28.	S. மணிநாதன்	K. சுவாமிநாதன்	பெரம்பூர் (சென்னை)	B.Com Ist Year	10000
29.	D. நிஷாந்தினி	துரைபாலன்	மாடம்பாக்கம் (சென்னை)	B.Sc IIIrd year	10000
30.	K. ஜீவிதா	கண்ணன்	திம்மாவரம் (செங்கல்பட்டு)	B.Sc IIIrd year	10000
31.	R. ஜோதி	ரமேஷ்குமார்	வேப்பத்தூர் (கும்பகோணம்)	B.Sc IIIrd year	10000
32.	K. மணிமோகன்	கல்யாணசுந்தரம்	மணிக்கிராமம்	B.Sc (Phs) Ist year	10000
33.	R. சூர்யா	S. ரமேஷ்	அம்மாபேட்டை (சிதம்பரம்)	Diploma in Machanical	10000
34.	T. ஆகாஷ்	V. தில்லைகோவிந்தன்	சிதம்பரம்	XIIth Std	6000
35.	M.A. ஜெயக்கீர்த்தி	R. முத்தையன்	பெரம்பூர் (சென்னை)	XIIth Std	6000
				மொத்தம் :	5, 57,000 /–

S. ஞானசேகரன், பொருளாளர் **கைலை சண்முகம்,** செயலாளர் **S. சிவக்குமார்,** தலைவர்

அன்றாட வாழ்வில் சட்டங்கள் பகுதி 2

LAWS IN DAY TO DAY LIFE – Part - 2

இந்த தலைப்பின் முதல் பகுதியைப் படித்த பலர் அதில் கூறப்பட்ட தகவல்களில் பல அவர்களுக்கு இது வரையில் தெரியாததாகவும் மிகவும் பயனுள்ள கட்டுரையாகவும் இருந்தது என்றும் கூறி இருந்தார்கள். இன்னும் சிலர் கட்டுரை நன்றாக இருந்தது. இருந்தாலும் அதில் கூறப்பட்ட விஷயங்களை அவை சம்பந்தப்பட்ட பொருளுக்கு ஏற்றவாறு பிரித்துக் கொடுத்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்றும் கூறினார்கள். அதை எழுத ஆரம்பிக்கும் போது இத்தனை பொருள்கள் வரும் என்று நான் எதிர் பார்க்காததால் பொருள் வாரியாகப் பிரிப்பதைப் பற்றி நான் நினைக்கவில்லை. இந்தக் கட்டுரையில் அதனை ஓரளவு சரி செய்ய முயற்சிக்கிறேன். சரி இனி நம்முடைய அன்றாட வாழ்வில் வரும் மீதமுள்ள பலவகைச் சட்டங்கள் பற்றிப் பார்ப்போம்.

1. பெண்கள் சம்பந்தப்பட்டவை

1. குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டப்படி சி.ஆர்.பி.சி பெண் போலீஸ் அதிகாரிகள்தான் மிகவும் கண்ணியமான முறையில் கைது செய்யப்பட்ட பெண் கைதிகளை காலை 6 –00 மணி முதல் மாலை 6–00 மணிக்குள் சோதனை செய்ய வேண்டும்.

2. உச்ச நீதி மன்ற தீர்ப்பு ஒன்றின்படி காவலர் ஒரு பெண்ணை ஏன் கைது செய்கிறார்கள் என்பதற்கான எழுத்து மூல ஆவணம் ஏதும் இல்லை என்றால் சூரிய உதயத்துக்கு முன்பும் சூரிய அஸ்தமனத்துக்குப் பின்பும் கைது செய்யக்கூடாது.

3. இந்திய தண்டனைச் சட்டம் (இ.பி.கோ) பிரிவு 39A யின் படி வேலை செய்யும் இடங்களில் ஒரே மாதிரியான வேலைக்கு ஆண் பெண் இருவருக்கும் ஒரே மாதிரியான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்

4. இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 228A யின் படி பாலியல் வன்முறைக்கு ஆளான பாதிக்கப்பட்ட நபர் தனித்து இருக்க உரிமை உண்டு. பொது இடங்களில் ஊடகங்களோ, காவலரோ அவர் யாரென்று கூறும்படி நிர்பந்திக்ககூடாது.

5. 2013 ஆம் ஆண்டில் டில்லி காவல்துறை ஒரு அறிவிப்பில் பெண்களைப் பொறுத்தவரை ஒரு குற்றம் எந்த காவல் நிலையத்தின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் நடந்தாலும் அவர்கள் எந்த காவல் நிலையத்தில் வேண்டுமானாலும் முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்யலாம் என்றும், காவலர் அவர் சொல்லுவதை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும், அவர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலேயே புலன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. மகப்பேறு நன்மைச் சட்டம் 1961 ன்படி தாய்மை அடைந்துள்ள எந்தப் பெண்ணையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலையை விட்டு நீக்க இயலாது.

7. குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 160 ன்படி எந்தப் பெண்ணையும் அவரது வீட்டில் பெண் போலீஸ் முன்னிலையில் தான் விசாரணை செய்யலாம்.

8. கற்பழிப்புக்கு உள்ளான பெண்மணி ஒரு மருத்துவரை அணுகி தன்னை மருத்துவப் பரிசோதனை செய்யச் சொன்னால் குற்றவியல் நடை முறைச் சட்டப்படி அந்த மருத்துவர் அதனைச் செய்தாக வேண்டும்.

9. சட்ட சேவை அதிகாரிச் சட்டம் 1987 ன் படி கற்பழிப்புக்கு ஆளான பெண்மணிக்கு இலவச சட்ட உதவி பெறும் உரிமை உள்ளது. சட்டப்படி காவல் நிலைய அதிகாரி தரத்தில் உள்ள சட்ட சேவை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்து அப்பெண்மணிக்கு உதவ ஒரு வழக்கறிஞரை அனுப்பக் கோர வேண்டும்.

10. கற்பழித்தலுக்கு உள்ளான பெண்ணை போலிஸில் புகார் கொடுக்க காவல் நிலையத்துக்கு வரச் சொல்லி கட்டாயப் படுத்தக்கூடாது.

11. இந்து மரபுரிமை திருத்தச் சட்டம் 2005 ன் படி தந்தையின் சொத்தில் ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சம உரிமை உண்டு.

2. காவலர், கைது செய்தல் சம்பந்தப்பட்டவை

1. தடுப்புக் காவல் சட்டப் பிரிவு 221 மற்றும் 222 ன் படி கைது செய்யப்பட்ட எந்த ஒரு நபரையும் கைது செய்யப்பட்டதிலிருந்து 24 மணி நேரத்துக்குள்ளாக ஒரு நீதிபதி முன்பு ஆஜர் படுத்தப்படவேண்டும்.

2. காவலர் அவரால் கைது செய்யப்பட்ட நபர் கொடுக்கும் ஒப்புதல் வாக்கு மூலத்தை அவருக்கு எதிராக நீதி மன்றத்தில் பயன் படுத்தலாகாது.

3. போலீசால் கைது செய்யப்படும் அல்லது விசாரணைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு நபரும் பிபுல்ஸ் ஆஃப் ரைட்ஸ் சட்டப் பிரிவு 23 ன் படி என்ன காரணத்துக்காக அவர் அவ்வாறு அழைக்கப்படுகிறார் அல்லது கைது செய்யப்படுகிறார் என்ற காரணத்தைத் தெரிந்து கொள்ளவும், ஒரு வேளை வாரண்ட் என்னும் பிடி ஆணை கொடுக்கப்பட்டிருந்தால் அதன் செல்லுபடியாகும் தன்மை பற்றி அறிந்து கொள்ளவும் உரிமை படைத்தவர் ஆவார்.

4. வாகனம் ஓட்டும் ஒருவர் மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுகிறார் என்று ஒரு காவலர் சந்தேகப்பட்டு அவர் குடித்திருக்கிறாரா என சோதனை செய்ய அவரை வாயை ஊதச் சொல்லி அதனைச் செய்ய அந்த நபர் மறுத்தால் மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185 படி

வாரண்ட் என்னும் பிடி ஆணை இல்லாமலே அவரைக் கைது செய்ய அந்தக் காவலருக்கு அதிகாரம் உள்ளது.

5. ஒரு காவல் நிலையத்துக்குச் சென்று ஒரு புகார் கொடுக்கும் போது அதனைப் பதிவு செய்ய மறுக்கும் காவலர் 2007 ஆம் ஆண்டின் உச்ச நீதி மன்ற ஆணைப்படி பதவி இடை நீக்கம் செய்யப்படுவார். அத்துடன் அவருக்கு சிறைத் தண்டனையும் விதிக்கப்படக்கூடும்.

6. ஒரு நபரை விசாரணை செய்யும் அல்லது கைது செய்யும் காவல் அதிகாரியின் பெயர் மற்றும் இதர விபரங்கள் காவல் நிலையப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டியது சட்ட பூர்வத் தேவையாகும்.

7. மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 185 படி வாகனம் ஓட்டிக் கொண்டிருந்த ஒருவரின் ரத்தத்தில் 100 மில்லி சாராயம் கலந்திருப்பதைக் கண்டு பிடித்தால் அவரைக் குடி போதையில் வாகனம் ஓட்டிய காரணத்துக்காக கைது செய்ய முடியும்.

3. மகவேற்பு என்னும் தத்து எடுத்தல்

1. பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சக விதிகளின் படி தனியே இருக்கும் ஒரு ஆண் மகன் பெண் குழந்தையை தத்து எடுப்பதை அனுமதிக்காது.

2. இந்து மகவேற்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் 1956 ன் படி திருமணமான தம்பதிகள் ஆண் அல்லது பெண் என்ற ஒரே வகையைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளைத் தத்து எடுப்பதைத் தடை செய்கிறது.

4. திருமண முறிவு

இந்து திருமணச் சட்டம் 1955 பிரிவு 14 ன்படி திருமணமான தம்பதிகள் திருமணம் ஆன ஒரு ஆண்டுக்குள் விவாஹ ரத்து என்னும் திருமண முறிவுக்கு மனு செய்யக் கூடாது, ஆனால் விவாஹ ரத்துக்கு மனு செய்துள்ள மனுதாரார் அளவு கடந்த துன்பம் அனுபவித்து வருகிறார் என்று உயர் நீதி மன்றம் கருதினால் அந்த மனுதாரரை விவாஹ ரத்துக்கு மனு செய்ய அனுமதிக்கலாம்

5. உணவு விடுதிகள்

1. இந்தியன் சராய்ஸ் சட்டம் 1867 ன் படி எந்த ஒரு நபராவது எந்த நேரத்திலும் ஒரு உணவு விடுதியில் தனக்கோ அல்லது தனது வளர்ப்புப் பிராணிக்கோ தண்ணீர் கேட்டால் விடுதிக்காரர் இலவசமாகத் தண்ணீர் கொடுக்க வேண்டும். மேலும் அவர் அந்த விடுதியில் உள்ள கழிப்பறையையும் இலவசமாகப் பயன் படுத்தலாம் அதை யாரும் தடுக்க முடியாது அது ஹோட்டலில் அவருக்கு உள்ள உரிமையாகும்.

2. ஏறத்தாழ 280 ஹோட்டல்களை நிர்வகிக்கும் ஹோட்டல் அசோசியேஷன் ஆஃப் இந்தியா இந்தியாவில் உள்ள ஹோட்டல்களில் திருமணம் ஆகாதவர்களுக்கு அனுமதி மறுக்கப்படும் எந்த வித விதிகளும் இல்லை என்று கூறுகிறது.

வரி செலுத்தும் கடமை

1. அனைத்து குடி மக்களும் தங்களுக்கு உள்ள வரி செலுத்தும் கடமையை நினைவு கூற வேண்டும். சிறிய வணிக நிறுவனங்கள் நடத்தும் பலருக்குத் தங்கள் பொறுப்புக்களும் வருமான வரி செலுத்தும் கடமை இருப்பதும் தெரிவதில்லை. வேலைக்கு செல்பவர்களுக்கு அவர்களுக்கு வேலை கொடுத்துள்ளவர்கள் வருமான வரி பிடித்தம் செய்யக்கூடும்.

இந்திய வருமான வரிச் சட்டம் 1961 எந்த வருமானங்களுக்கு வருமானவரி உண்டு, அவை எந்த விகிதத்தில் கட்டப்பட வேண்டும், எப்போதுக்குள் கட்ட வேண்டும், தாமதமாகக் கட்டினால் அபராதம் எவ்வளவு, எந்த வருமானத்துக்கு வரி விலக்குக் கோரலாம் என்பதை எல்லாம் விளக்கமாகக்கூறும்.

வணிகம் மட்டும் அல்லாமல் மக்களுக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் வருமான வரி வளையத்துக்குள்கொண்டு வரப்பட்டுள்ளன. நீங்கள் சிறிய வணிக நிறுவனம் நடத்திக் கொண்டிருந்தால் அதனைப் பதிவு செய்யவும், வரி கட்டவும் தேவைப்படலாம். தற்போதுள்ள நிலவரபடி மிகக் குறைந்த சேவை நிறுவனங்களே சேவை வரியிலிருந்து விலக்கு பெற்றுள்ளன.

2. பலர் சேர்ந்த சங்கம் போன்ற அமைப்புக்கள்.

20 க்கும் மேற்பட்ட நபர்கள் ஒன்று சேர்ந்து சங்கமோ அல்லது அது போன்ற அமைப்போ அமைத்துக் கொண்டு வணிகமோ அல்லது வேறு வகையான செயல்களையோ செய்து வந்தால் அவர்கள் பதிவு செய்யப்படாமல் இயங்க இயலாது. அத்தகைய அமைப்புக்கள் 1956 ஆம் வருடத்திய கம்பெனிச் சட்டத்தின் கீழோ அல்லது அவர்களுக்கு பொருந்தக்கூடிய சங்கங்களின் சட்டங்களின் கீழோ பதிவு செய்யப்பட வேண்டும் அவ்வாறு பதிவு செய்யப்படாமல் இயங்கும் / செயல்படும் சங்கம் / அமைப்புக்கள் சட்ட விரோதமானவையாகும்.

நம்முடைய அன்றாட வாழ்வில் சம்பந்தப்பட்ட சட்டங்களைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப்பட்ட கட்டுரை. மேற் கொண்டு விபரம் தேவைப்படுபவர்களும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க விரும்புபவர்களும் வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ளதாக இருக்கும்

சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஸ்கூப் ஊப்.காம், மற்றும் கோரா.காம் ரிவியூ மந்த்ரா.காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை –97. போன் 98413 73184.

சக்தி பீடங்கள் - ஓர் பயணம்

திருமதி வனஜா இளங்கோவன், சென்னை
செல் : 63692 91286

மார்ச் மாதம் 6–ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை இரவு தலைநகரிலிருந்து புறப்படும் ஏர் இந்தியா விமானம் மூலம் அமிர்தசரஸ் அடைந்தோம். மறுநாள் காலை, நாங்கள் முப்பத்திருவர் முக்கண்ணனின் தரிசனத்திற்குப் பின் சீக்கியர்களின் பொற்கோவிலைக் காணச் சென்றோம். ஈசனின் கோவிலில் வில்வம், பால் போன்றவைகளை நமக்கு அளித்து பூஜை செய்யுமாறு கூறியது மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. பொதுவாக வடஇந்தியாவில் அனைத்துக் கோவில்களிலுமே அம்மன், ஆஞ்சநேயர், பைரவர் சந்நிதிகள் உள்ளன. அம்மன் எனில், பல தேவிகளின் தரிசனம் கிடைக்கப்பெற்றோம். (உ–ம்) பத்ரகாளி, வைஷ்ணவி தேவி, சீதளா தேவி, ஜ்வாலா தேவி, சாமுண்டா தேவி என பற்பல. பொற்கோவிலின் நுழைவு வாயிலைக் கடந்து, திருக்குளத்தினைக் கடந்து பொற்கோவிலின் வரிசையில் சேர்ந்தோம். என்ன ஒரு கூட்டம்! சுமார் மூன்று மணி நேர காத்திருப்புக்குப் பின், பொற்கோயிலின் கருவறைக்குள் நுழைந்தோம். பலர் அமர்ந்து கிரந்தம் ஓத, ஆதி கிரந்தம் ஒரு மேடையின் மீது பட்டுத்துணியில் வைக்கப்பட்டு பூஜிக்கப்படுகிறது. மேலே உள்ள தலத்திலும் அது போன்றே ஆதிகிரந்தம் வைக்கப்பட்டுள்ளது. மேல் தளத்திற்குச் சென்று அழகிய திருக்குளத்தினையும் அதனைச் சுற்றியுள்ள பல கோவில் போன்ற அமைப்புகளையும் கண்டு ரசித்து கீழிறங்கினோம். அச் சிறிய கோவில்களிலும் ஆதிகிரந்தமே வைக்கப்பட்டு பூஜிக்கப்படுவதாக அறிந்தோம். அங்கிருந்து வெளியேறி நேரே சிறிது தொலைவு நடந்தால், வலது புறம் ஜாலியன்வாலாபாக் படுகொலை நடந்த மைதானத்தை அடையலாம். உள்ளே ஒன்பது காலரிகள் (அறைகள்) தனித்தனியே அமைந்துள்ளன. அவைகளில் சுதந்திர போராட்ட காட்சிகளும், ஜாலியன் வாலாபாக் படுகொலையின் காட்சிகளும் இடம் பெற்றிருந்தன. ஜெனரல் டயரின் சிலையும் ஒரு அறையில் இருந்தது. இரண்டு சுவர்களில் துப்பாக்கி குண்டுகள் துளைத்த ஓட்டைகள் இருந்தன. ஐந்தாம் அறைக்கு வெளியே மக்கள் விழுந்து இறந்த கிணற்றினைக் கண்டோம். மைதானத்தின் நடுவே வீரர்களின் நினைவுத்தூண் எழுப்பப்பட்டிருந்தது. ஓரிடத்தில் அமரஜோதியும் எரிந்து கொண்டிருந்தது. அவ்விடத்தினைக் சுற்றி வரும்போது நமக்குள் ஓர் உணர்வு நமது நாட்டுப்பற்றினை உணர்த்துகிறது எனில் அது மிகையல்ல.

மாலை வாகாபார்டரில் இராணுவத்தின் அணிவகுப்பு காணச் சென்றோம். தினந்தோறும் சுமார் 5.45 மணிக்குத் தொடங்கி 6.30 மணி வரையில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சி. நாங்கள் சுமார் 4.30 மணிக்கே சென்று படிகளில் அமர்ந்ததால், நமது நாட்டின் அணி வகுப்பு, பாகிஸ்தானின் அணி வகுப்பு இரண்டினையும் நன்கு காண முடிந்தது. இருபுறமும் இரு நாடுகளின் தேசியக்கொடிகளும் பட்டொளி வீசி பறந்து கொண்டிருந்தன. முதலில் நமது படையின் மகளிரணி வீர நடைபோட்டு வந்தனர். அங்கிருந்த ஒரு அதிகாரி கைகளை வீசியும், குதித்தும் நமக்குள் ஓர் பரவசத்தை ஏற்படுத்தி, நமது தாய் மண்ணிற்கு வணக்கம் தெரிவிக்கும் முகமாக 'வந்தே மாதரம், 'பாரத் மாதா கி ஜெய்' என வீர முழக்கமிட, குழுமியிருந்த மக்களும் உணர்ச்சி வசப்பட்டு வீர முழக்கமிட்டனர். இரு புறத்திலும் இரு நாட்டு கொடிகளும் இறக்கப்பட, அதே சமயம் இருநாட்டிற்குமிடையே இருந்த தடுப்பு திறக்கப்பட்டு இருபுறமும் கைகுலுக்கி வந்தனம் தெரிவித்தும் அணி வகுப்பு முடிவடைந்து அனைவரும் கலைந்து சென்றனர். இவ்வணி வகுப்பை காண கையில் மொபைலைத் தவிர வேறு எதுவும் எடுத்துச் செல்ல அனுமதி இல்லை. எடுத்துச் சென்றால், அங்கிருந்தும் பாதுகாப்பு பெட்டகத்தில் ஒரு பைக்கு ரூ. 100 கட்டணம் செலுத்தி வைத்துச் செல்ல வேண்டும்.

அடுத்த நாள் காலை வைஷ்ணவி தேவியின் தரிசனத்திற்காக கட்ரா கிளம்பினோம். வழியில் ஜம்முவிற்கு முன்பாக சம்பல் எனுமிடத்தில் சீச்சி தேவி கோவிலைத் தரிசித்தோம். இக்கோவில் ராபி நதிக்கரையில் அமைந்துள்ளது. அம்மனை மனம் குளிர தரிசித்து, அடுத்து அறைக்குள் நுழையின், சுவற்றில் அக்கோவிலின் தல வரலாறு சித்திரங்களாகத் தீட்டப்பட்டிருந்தன. அக்கதை இங்கே; ஒரு விவசாயியின் மகளாக தேவி பிறந்து வளரும் சமயம், தந்தையும் மகளும் வயலுக்குச் செல்கின்றனர். குழந்தையைத் தனியே விடுத்து, வயலில் வேலை செய்ய தந்தை சென்று விட, அக்குழந்தை அங்குள்ள ஓடையில் விழுந்து விடுகிறாள். தந்தை குழந்தையைத் தேட, அவளின் சுட்டு விரல் மட்டும் நீண்டு, நீருக்கு வெளியே தெரிய, இறந்த குழந்தையுடன், குலதெய்வத்தை வேண்டி, தீயில் குதித்து தன்னுயிரை மாய்த்துக் கொள்வதாக கதை. அக்குழந்தையே இந்த சீச்சி தேவி. அவளை வணங்கும்போது, நம் குலதெய்வத்தை மனதில் நினைத்து வணங்க வேண்டுமென்பது ஐதீகம். அங்கிருந்து நவதுர்க்கை ஆலயம் சென்றோம். அங்கு துர்க்கை, காளி, மகிஷாசுரமர்த்தனி என நவசக்திகளுக்கும் சந்நிதிகள், சுவாமி சித்தானந்தர் என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கோவிலில் வணங்கி, அச்சுவாமிஜியின் சமாதி எங்குள்ளது என கேட்டறிந்து ஹரிஜிபௌரி எனும் அக்கோவிலுக்குச் சென்றோம். இக்கோவில்கள் இரண்டிலும் பாதுகாப்பு படை வீரர்கள் நம்மை சோதனை செய்கின்றனர். இக்கோவிலில் லிங்கம், அம்மன், ஆஞ்சநேயர்,

விநாயகர், சாயிபாபா, விட்டல் ரகுமாயி, பத்ரகாளி, நாகதேவதை, சூர்யபுத்திரி, கங்கா மாதா, பெரிய அனுமன் சிலை, கிருஷ்ணரைக் கூடையில் தூக்கிச் செல்லும் பெரிய வசுதேவரின் சிலை, கிருஷ்ணா, பலராமா, சுபத்ரா சிலைகள், சிரவண்குமார் தனது பெற்றோரை தூக்கிச் செல்லும் சிற்பங்கள், திருப்பதி பாலாஜி, கேதார்நாத் லிங்கம் நடுவிலும், சுற்றியும் சிறிய லிங்கங்கள், சனீஸ்வரர், அன்னபூரணி, பிட்சாடனர், சித்ரகுப்தன், எமதர்ம ராஜா, சந்தோஷி மாதா, சாய்ந்த நிலையில் சாமுண்டா தேவி போன்ற மிக அழகான விக்கிரகங்கள் மூன்று கோயில்களில் காட்சியளிக்கின்றன. இக்கோவிலை மினி ஹரித்துவார் எனவும் சோட்டா (சிறிய) சார் தாம் (Chardham) எனவும் கூறுகின்றனர். சுவாமியின் ஜீவசமாதி முதல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து படிகள் இறங்கினால் ராபிநதியை அடையலாம்.

அடுத்ததாக, ஷாலிமரில் இருக்கும் ரன்பிரேஷ்வரர் கோவில் சென்றோம். பலபடிகளேறிச் சென்று, கருவறையில் 11 அடி உயர கருப்பு நிற சலவைக்கல்லினாலான சிவலிங்கத்தினையும், அதனைச் சுற்றி அமைந்திருந்த 12 ஜோதிர்லிங்கங்களையும், மற்றும் பல ஸ்படிக லிங்கங்களையும் கதவுக்கு வெளியே நின்று தரிசித்தோம். உள்ளே கோடி சிறிய பாண லிங்கங்கள் குகைகளில் இருப்பதாக அக்கோவிலின் உரிமையாளர்கள் கூறினர். மேலும் கதவு நான்கு மணிக்குத் தான் திறக்கப்படும் என்றனர். கருவறைக்கு வெளியில் ஒரு இடத்தில் அநேக பாண லிங்கங்களைக் கண்டோம். பிறகு இந்திரா சதுக்கத்திலிருந்த ரகுநாதர் கோவில் சென்றோம். அங்கு கருவறையின் நடுவில் ஒரு பெரிய ஸ்படிக லிங்கம், அதன் பின்னால் எரியும் விளக்கு மிகவும் அழகாக ஸ்படிகத்தினூடே தெரிந்தது. அங்கு பெரிய நடராஜர், ரகுநாத் (ராமர், சீதை), ஆஞ்சநேயர் முக்கிய கருவறைகளில் ஆசி புரிந்தனர். சுற்றிலும் பிரகாரத்திலிருந்த பல அறைகளில் மொத்தமாக கோடி சாளக்கிராமங்கள் இருக்கக் கூடுமென நினைத்தோம். அறைகளின் சுவற்றிலிருந்த மாடங்களில் ஜீவாத்மா, பரமாத்மா, ஞானாத்மா சிலைகள், சுக்ரீவன், ஜாம்பவான், ஆஞ்சநேயர், மற்றும் பல வானரங்களின் சிலைகள், வால்மீகி, பரத்வாஜ், வசிஷ்டர், சனத்குமாரர்கள், நாரதர், வைசம்பாயனர், லட்சுமி நாராயணன், லட்சுமி தாமோதரன், ராம, லட்சுமணர், சீதை, தசரதர், பரதன், விபிஷணன், சித்ரகுப்தர், எமதர்மராஜா, தர்மராஜா மற்றும் பலரின் சிலைகளைக் காண முடிந்தது. எங்களின் யாத்திரையில் இணைக்கப்படாத இக்கோவில்களின் தரிசனத்தை முடித்து, சுமார் 6½ மணிக்கு கட்ரா அடைந்தோம்.

...தொடரும்

R R PHARMACY
R R பார்மஸி

155, East Car Street, Chidambaram - 1.
155, கீழரத வீதி, சிதம்பரம் – 1.
₹ 750/-க்கு மேல் 15% தள்ளுபடி
15% DISCOUNT*
ON PURCHASE OF MEDICINES ABOVE ₹ 750/-
"பார்மஸியில் அனுபவமுள்ள பெண்கள் / ஆண்கள் தேவை"
10% தள்ளுபடி வழக்கம்போல்
10% DISCOUNT on Normal Purchase
Free Door Delivery
Ph : 04144 - 222099, 94871 41258

நட்சத்திரங்களும் மரங்களும்

அக்ரி. கு. சேதுசுப்ரமணியன், சிதம்பரம்.

அலைபேசி : 9443665642

நம்முடைய வாழ்வியல் கூறுகளான குணநலன்கள், பொருள்வளம், கல்விச் சிறப்பு, நன்மை, தீமைகள் போன்ற அனைத்தும் முன்னரே இறைவனால் நிர்ணயிக்கப்பட்டவை. நம் பிறப்பின் போது அமைந்த நவக்கிரகங்களின் பலம், பிறந்த நட்சத்திரம் போன்றவைகளால் நம் வாழ்க்கைப் பாதை அமைகிறது. நவக்கிரகங்கள் மூலமாகவே இறைவன் நம்முடைய வாழ்க்கையை இயக்குகிறான். அதனால்தான் நாம் நமக்கு இன்னல்கள் வரும்போது திருக்கோயில்களை நாடிச்சென்று வழிபடுகின்றோம்.

ஒவ்வொருவருடைய பிறந்த நாள் கணிதத்தின்படி (ஜாதகம்), லக்கினம் என்று குறிப்பிடப்படுவது உயிராகும். எந்த நட்சத்திரத்தின் பாதத்தில் சந்திரன் நிற்கிறதோ அதுவே ஒருவரின் பிறந்த நட்சத்திரமாகும். ஒரு நட்சத்திரத்திற்கு நான்கு பாதங்கள். எந்த நட்சத்திரத்தின் பாதத்தில் சந்திரன் நிற்கிறதோ அதன்படி இராசி அமையும். இராசி என்பது உடலாகும். பிறந்த நட்சத்திரத்தின் அதிபதியான கிரகத்தின் தசையே ஆரம்ப தசையாக அமைந்து, வரிசைப்படி வாழ்நாள் பூராவும் கிரகங்களின் தசாபுத்திகள் நடைபெறுகின்றன.

ஒரு நட்சத்திரத்தில் பிறந்தவருக்கு அந்த நட்சத்திரத்தின் பாதிப்பும், அதற்கேற்றவாறு தசாபுத்திகள் அமைந்தும் குணாதிசியங்கள், வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகள், கல்வி, பொருள்வளம், பணி, மக்கட்பேறு போன்றவைகள் நிகழ்கின்றன. ஒருவருக்குப் பிறந்த நட்சத்திரம் முக்கியமான ஒன்றாக உள்ளது என்பதை அறிய முடிகிறது. ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் விருட்சமும் (மரமும்) அதிதேவதையும் அதன் ஆளுமை அமைந்த கோயில்களும் இருப்பதால், அவைகளே அந்த நட்சத்திரம் கொண்டவர்களுக்கு புகலிடமாய் விளங்குகின்றன. வாழ்க்கையில் வளம் பெற்றிட ஒவ்வொருவரும் தங்கள் பிறந்த நட்சத்திரத்துக்குரிய கோயில்களுக்குச் சென்று வழிபடுவதும், அதற்குரிய மரத்தை உரிய இடங்களில் வளர்ப்பதும், பாதுகாப்பதும், வணங்குவதும் நல்ல பலன்களை நல்கும் என்பதில் ஐயமில்லை.

ஏன் மரங்களை வழிபட வேண்டும் ?

சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, நஞ்சினைத் தான் உண்டு, அமிர்தத்தைத் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் வழங்கினார் என்ற புராணக்கதையை நாம் அறிவோம். அது போல தாவரங்கள் நஞ்சாகிய கரிய மில வாயுவைத் (Carbondi-oxide) தான் உள்ளிழுத்துக் கொண்டு உயிர்வளியாகிய ஆக்சிஜனை நமக்கு அளிக்கின்றது.

நஞ்சாகிய கரியமில வாயுவுடன் நீர், சூரிய ஒளி மூலம் ஒளிச்சேர்க்கை (Photosynifesis) செய்து நமக்கு அமிர்தமாகிய மலர்கள், காய்கள், கனிகளைத் தருகின்றன. இறைவன் எவ்வாறு ஆன்மாக்களின் பிறவிப் பிணியைப் போக்குகிறானோ அது போல உடல் பிணியைப் போக்கும் மருந்தாகவும் மரங்கள் விளங்குகின்றன. ஆகவே, விருட்சங்களைத் தெய்வமாக வணங்குவதில்தான் வியப்பேது ?

மரங்களின் மகத்தான சேவைகள் :

1. ஒரு ஹெக்டேரில் (2.5 ஏக்) உள்ள மரங்கள் ஆண்டொன்றுக்கு 3.7 மெ.டன். கரியமில வாயு உட்கொண்டு, 2 மெ.டன். பிராண வாயுவை வெளியிடுகின்றன.

2. ஒரு வீட்டின் சுற்றுப்புறத்தில் மூன்று மரங்கள் இருந்தால் 70% சூரிய ஒளி வீட்டுக்குள் புகாமல் தடுக்கப்படுகிறது. அதனால் 10-20% குளிர்சாதனப் பெட்டி (ஏர்கண்டிஷன்) செலவு குறைகிறது.

3. மரங்கள் மேகக் கூட்டங்களை ஈர்த்து மழை பொழியச் செய்கின்றன.

4. மரங்களின் வேர்கள் மண் துகள்களைப் பிணைத்து, மண் அரிமானம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன.

5. மரங்கள் மண்ணின் ஈரத்தன்மையைப் பாதுகாத்து நிலத்தடி நீர் நிலைக்க உதவுகின்றன.

6. மரங்களிலிருந்து உதிரும் தழைகள், கனிகள், நாளடைவில் மக்கி, மண்ணின் வளத்தைப் பெருக்குகின்றன.

7. பறவையினங்களுக்கும், விலங்குகளுக்கும் புகலிடமாகவும், உணவுத் தேவையைப் பூர்த்தி செய்பவனவாகவும் மரங்கள் விளங்குகின்றன.

8. வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் (Furniture etc) செய்யவும், விறகாக எரிக்கவும் மரங்கள் பயன்படுகின்றன.

9. நறுமணப் பொருள்கள், மருந்துகள் ஆகியவை மரங்களிலிருந்து கிடைக்கின்றன.

10. நச்சு வாயுக்கள், தூசு, புகை ஆகியவற்றை வடிகட்டும் திறன் மரங்களுக்கு உண்டு. எனவே சுற்றுச் சூழலைப் பாதுகாக்க உதவுகின்றன.

11. காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும் மிகுதியான ஒலி, ஒளி, வெப்பம் ஊடுறுவலைத் தடுக்கவும் மரங்கள் உதவுகின்றன. சுனாமி போன்ற பேரிடர்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றன.

12. மரம் அடர்ந்த காடுகள் சுற்றுலா இடமாகவும், பொழுது போக்கிற்கான இடமாகவும் இருக்கின்றன.

13. ரேயான் உற்பத்தி, காகிதம், ரப்பர் உற்பத்திக்கு மூலப் பொருளாய் விளங்கி, வேலை வாய்ப்பை வழங்குகின்றன.

14. ஒரு மரம் 50 ஆண்டு காலம் இருந்தால் மனிதனுக்குச் செய்யும் உதவிகளின் மதிப்பு ரூ. 15.90 லட்சம் ஆகும் என்று கொல்கத்தா வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டி.எம்.தாஸ் குறிப்பிடுகிறார்.

ஆதிகால மனிதன் மரத்தடியில்தான் தெய்வ வடிவங்களை வைத்து வழிபாடு செய்யத்துவங்கி, காலப்போக்கில், மரங்களே தலவிருட்சமாகி, கோயில்களும் உருவாகின.

பல புராணக் கதைகளின் மூலம் இறைவன் மரத்தடியில் சுயம்புவாக எழுந்தருளியதாகவோ, பக்தனுக்குக் காட்சி கொடுத்ததாகவோ அறிகிறோம். திருமந்திரம் அருளிய திருமூல நாயனார் அரச மரத்தடியில் தவக்கோலத்தில் இருந்து 3000 பாடல்கள் அருளினார் என்றெல்லாம் அறிகிறோம். பல பெருமைகள் கொண்ட மரங்கள் மனிதனின் வாழ்வில் நட்சத்திரங்கள் மூலம் பல நன்மைகளை வழங்குவதில் வியப்பேது ?

எனவே நாம் பிறந்த நட்சத்திரத்தின்படி நமக்கு ஏற்படும் இடர்கள் குறைய, வாழ்க்கை வளம் பெற எந்தெந்த கோயில்களுக்குச் சென்று வழிபடலாம் என்பதையும், எந்த விருட்சத்தைப்போற்றி வணங்கலாம் என்பதையும், இனிவரும் தொடர்களில் காண்போம். 27 நட்சத்திரங்களில் முதலாவதாக வரும் அசுவனி நட்சத்திரத்தைப் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

– (பயணிப்போம்)

வாழ்த்துகிறோம்

சென்னை துரைப்பாக்கம் Er. திரு. அ. குமரன் – திருமதி Dr. சுஜாதா குமரன் தம்பதியரின் மூத்த புதல்வன் ஆகாஷ்க்கும், மயிலாடுதுறை, Dr. உ. மனோகர் – திருமதி. ம. சுமதி தம்பதியரின் புதல்வி செல்வி கர்பகரக்ஷாக்கும் 20.02.2022 அன்று மயிலாடுதுறை சிகினேச்சர் திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களை சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் வாழ்த்தி மகிழ்கிறது.

முகூர்த்த ஓலை விழா வாழ்த்து

மயிலாடுதுறை, சித்தர்காடு, தங்கம் நகர், திரு. C. முத்துகுமரன் – ஜெயந்தி இவர்களது புதல்வி **M. அபிநயா,** B.E., பெண்ணாடம், மேலபெருமாள் கோயில் தெரு, திரு. R. முல்லைநாதன் – பானுமதி இவர்களது புதல்வன் **M. சண்முகராஜ்,** M.E., (Engineer, Powergrid Corporation of India, Bangalore) இவர்களது திருமண முகூர்த்த ஓலை எழுதும் விழா மயிலாடுதுறை நகர கார்காத்தார் சங்க கட்டிடத்தில் 04.03.2022 மாலை அன்று இனிதே நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

R. முல்லை நாதன்
(Retd. TVS Chakra Tyres, Madurai)

C. முத்துகுமரன், B.E.,
(Formerly Elect. Engr. SASL, Kumbakonam)

M. பானுமதி
பெண்ணாடம்

K. ஜெயந்தி
தலைமை ஆசிரியை, ஊ.ஒ.து. பள்ளி குச்சிபாளையம்

சங்கப் பலகை

B. **மிருணாளினி** – சென்னை.

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
07–12–1951

மறைவு :
08–02–2022

நா. மல்லிகா (எ) செந்தாமரை

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம் மணிக்கிராமம் தெற்குத்தெரு திரு. பொன் நாகராஜன் அவர்களின் துணைவியாரும் எங்களது தாயாருமாகிய திருமதி. **மல்லிகா (எ) செந்தாமரை** அவர்கள் 08–02–2022 செவ்வாய்கிழமை அன்று இறைவன் திருவடி இணைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

திரு. **பொன் நாகராஜன்**, **கணவர்**

மகன் / மருமகள்

திரு. **நா. வாஞ்சிநாதன்**

திருமதி. **வனிதா வாஞ்சிநாதன்**

திரு. **நா. சத்தியமூர்த்தி**

திருமதி. **துர்க்கா சத்தியமூர்த்தி**

மகள் / மருமகன்

திருமதி. **இந்திரா விஸ்வநாதன்**

திரு. **ஆ. விஸ்வநாதன்**

பேத்திகள்

வி. கவிபிரியா, வா. நாதஸ்ரீ, ச. பிரித்தியங்கிரா, ச. மாதங்கி

தோல் எனும் பாதுகாப்பு பெட்டகத்தின் ஆரோக்கியம் காப்போம்!

''காயமே இது பொய்யடா – வெறும்
காற்ற டைத்த பையடா'' – என்று
சித்தர்கள் கூறினார்கள்.

பின்னாளில் வந்த மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை

''காயமே இது மெய்யடா – இதில்
கண்ணும் கருத்தும் வையடா...!
நோய் இல்லாமல் காத்து
நூறு ஆண்டுகள் உய்யடா....!'' – என்று உடம்பின் மேன்மையை அக்கறையோடு விளக்கியுள்ளார்.

ஒருவருடைய புற அழகானது ஆரோக்கியமான மிருதுவான வசீகரிக்கும் தன்மையுடன் மிளிரும் தோலையும் அதனைப் பெற்றுள்ள முகம், கை, கால்கள் ஆகியவற்றை பொறுத்துதான் அமைகிறது. தோல் நமது உடலில் தோராயமாக 20 சதுர அடி அளவைக் கொண்டுள்ளது. நமது உடல் உறுப்புகளை அழுக்கு, கிருமிகள், தூசி, குளிர், வெப்பம், அதிர்வு ஆகியவற்றிலிருந்து ஒரு போர்வைபோல் மூடி பாதுகாக்கிறது. தோல் நம் உடலின் பாதுகாப்பு அமைச்சகம் போல் விளங்குகிறது. ஆனால் நாம் நம் தோலை எவ்வளவு அலட்சியப்படுத்த முடியுமோ அவ்வளவு அலட்சியப்படுத்துகிறோம்.

உடல் உறுப்புகளின் தாய் : தோல் நமது உடலின் அனைத்து உறுப்புகளையும் பாதுகாக்கிறது. நம் உடலின் மிக மெல்லிய உறுதியான உறுப்பு தோல்தான் தோலுக்கு உறுதியையும் வலிமையையும் அளிப்பது ''கொலாஜன்'' என்ற புரதம். வலிமையான நம் தோல் வளைந்து கொடுக்கும் தன்மையும் உடையது. ''எலாஸ்டின்'' என்ற புரதம் இந்த இசைவுத் தன்மையை அளிக்கிறது. நம் ஒவ்வொரு அசைவுக்கும் ஏற்றவாறு பொறுமையுடன் இசைந்து கொடுக்கும் நம் தோலே நம் உடல் உறுப்புகளில் தாய் போன்றது. புறச்சூழலில் வெப்பம், பனி மிகுதி ஆகும் போதும் நம்மை காக்கிறது. நம் உடலின் முக்கிய உறுப்புகள் அதிக வெப்பத்தால் வெந்து போகாமலும் அதிக பனியால் உறைந்து போகாமலும் பாதுகாக்கிறது. புறச்சூழலில் வெப்பம் மிகுதியாகும் போது தோலின் ரத்த நாளங்கள் சுருங்கி அதிக சூட்டை தணிக்கிறது. அதே போல் புறச்சூழலில் பனி மிகுதியாகும் போது தோலின் ரத்தநாளங்கள் விரிவடைந்து உடல் வெப்பத்தை அதிகரிக்கிறது. நம் தோல் முழுவதும் பரவியுள்ள வியர்வை சுரப்பிகள் ஓய்வில்லாமல், அனுதினமும் உழைக்கும் நுண்ணிய குளிர்சாதன கருவிகள் போன்று செயல்படுகிறது.

தோலின் அமைப்பு : தோல் மூன்று அடுக்குகள் கொண்டது.

(i) வெளிப்புற அடுக்கு – உடலின் நிறத்தை நிர்ணயிக்கும் மேலனோசைட்ஸில் ''மெலனின்'' என்ற நிறமி செல்கள் பொதிந்தது.

(ii) இரண்டாம் அடுக்கு – முடியின் வேர்க்கால்கள், வியர்வை மற்றும் எண்ணெய் சுரப்பிகளைக் கொண்டு 75% கொலாஜென் என்ற வெளிசெல் புரதத்தால் அமைந்துள்ளது.

(iii) கீழ் அடுக்கு – ஹைப்போரெட்மின் கொழுப்பு மற்றும் சேர்ப்புத் திசுக்களால் உருவாக்கப்பட்டு வெப்பம் மற்றும் குளிர் ஆகியவற்றிலிருந்து உடலை பாதுகாக்கிறது.

நாம் அன்றாட வாழ்வில் சரும பாதுகாப்பு குறித்து அதிக அளவு விளம்பரங்களைப் பார்க்கிறோம். சோப்புகள், கிரீம்கள், லோஷன் என வித விதமாய் வருகிறது. சில வகைகளில் உள்ள வேதிப்பொருள் காரணமாக அலர்ஜி ஏற்பட்டு தோல் பாதிக்கப்படுகிறது. சிலவகை சத்துகள் நிறைந்த உணவுப்பொருட்களை உட்கொண்டாலே தோல் ஆரோக்கியத்துடனும் மிருதுவாகவும் இருக்கும். சரிவிகித உணவு அனைத்து சத்துக்களை அளிக்கிறது என்றாலும் தோலின் ஆரோக்கியத்திற்கு சில முக்கிய சத்துகள் உதவுகின்றன.

தோலின் ஆரோக்கியத்திற்கு உதவும் சத்துகள் :

* வைட்டமின் 'ஏ' மற்றும் பீட்டா கரோட்டின் :–

அடர்ப்பச்சை நிற கீரை வகைகள், ஆரஞ்சு நிறமுடைய காய்கள் மற்றும் பழங்கள், சர்க்கரை வள்ளிக்கிழங்கு, முட்டை மற்றும் ஆட்டு ஈரலில் இச் சத்து மிகுதியாக உள்ளது. அகத்திக்கீரை, முருங்கைக்கீரை மற்றும் வெந்தயக்கீரையில் பீட்டா கரோட்டின் அதிகமாக உள்ளது.

உலர்ந்த மற்றும் செதில் செதிலாக இருக்கும் சருமம் வைட்டமின் A சத்து குறைபாட்டை உணர்த்துகிறது.

* வைட்டமின் சி :– ஆற்றல் வாய்ந்த ஆன்டி ஆக்ஸிடென்டான வைட்டமின் சி சத்து தோலுக்கு மிகவும் முக்கியமான ''கொலாய்ஜன்'' என்ற புரதத்தின் உற்பத்திக்கு உதவுகிறது.

கொய்யா, நெல்லி, ஆரஞ்சு, எலுமிச்சை பழங்களிலும் பச்சை கொத்தமல்லி முருங்கைகீரை, முட்டைகோஸ் ஆகியவற்றிலும் இச்சத்து உள்ளது.

* வைட்டமின் ஈ :– இச்சத்து வைட்டமின் ஏ யுடன் சேர்ந்து செயல்படும்போது அதன் ஆற்றல் அதிகரிக்கிறது. வழவழப்பான மிளிர்ந்த சருமத்தை அளித்து அழகை கூட்டச்செய்யும் தன்மை இந்த இரு சத்துக்களுக்கும் உண்டு.

பாதாம், வால்நட், பசலைக்கீரை, ஓட்ஸ், ஆலிவ் கொட்டைகளில் வைட்டமின் ஈ அதிகம் உள்ளது.

* செலினியம் :– தோலின் மிருதுத் தன்மையையும் நெகிழ்வுத் தன்மையையும் பாதுகாக்கிறது. முகப்பருக்கள், அக்னி எனப்படும் தழும்புகள் மற்றும் தோல் புற்றுநோய் வராமல் தடுக்கும் திறன் செலினியத்திற்கு உண்டு.

வால்நட், கொட்டைகள், கடல் உயிரின உணவுகள், தோலுடன் கூடிய முழுதானிய வகைகள் கைக்குத்தல் அரிசி ஆகியவற்றில் செலினியம் சத்து அதிகம் உள்ளது.

ஒமேகா 3 கொழுப்பு அமிலம் : தோல் சுருக்கம், தோல் அழற்சி, சிறங்கு போன்றவை வராமல் தடுப்பதுடன் தோலின் ஈரப்பதத்தை தக்கவைத்து பொலிவு கூட்டுகிறது. காயங்கள், சிராய்ப்புகள் ஆகியவை சரியாகப் பெரிதும் துணைபுரிகிறது.

வால் நட், ஆளிவிதை, பாதாம், மீன்கள், மீன் எண்ணெய் ஆகியவற்றில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் உள்ளது.

* துத்தநாகம் :– இறந்த செல்களை நீக்கி, காயமடைந்த செல்களை சரி செய்வதுடன் புறஊதா கதிர்களிடமிருந்து தோலை பாதுகாக்கிறது. எண்ணெய் சுரப்பிகளை ஒழுங்குபடுத்தும் முக்கிய வேலையைத் துத்தநாக சத்து செய்கிறது.

பரங்கிவிதை, இஞ்சி, பருப்பு வகைகள், கடல் உணவுகள், காளான், முழுதானிய வகைகளில் இச்சத்து நிறைந்துள்ளது.

நாம் ஒரு நபரை அடையாளம் காட்டும்போது சிவப்பு, கருப்பு, மாநிறம், வெள்ளை என்று தோலின் நிறத்தைக் குறிப்பிடுவது வழக்கம் ஆனால் தோலின் பணிகளை நாம் ஆராய்ந்தால் அது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

தோலின் பணிகள் :

1. பாதுகாப்பு :– நம் உடலுக்கு மிகவும் அத்தியாவசியமான நீர் மற்றும் தாதுக்கள் நம் உடலைவிட்டு வெளியேறாமல் காக்கும் பெருந்தடுப்புச் சுவராக தோல் விளங்குகிறது. நம் உடலுக்குத் தேவையான காற்றிலுள்ள ஈரம், மிருதுத்தன்மையைத் தக்க வைக்கும் எண்ணெய் மற்றும் தோலில் தடவும் களிம்புகள் போன்றவற்றை பரிசோதித்து தோலின் உட்செல்ல அனுமதிக்கும் சோதனை சாவடி பணியையும் செய்கிறது. அதனால் தான் தீங்கு விளைவிக்கும் எந்த பொருளும் நம் உடலுக்குள் புகாமல் இருக்கிறது.

2. நோய் எதிர்ப்பு :– நோய்க்கிருமிகள், விலங்குகள், மற்ற மனிதர்களின் தாக்குதல், தட்ப வெப்பநிலை மாற்றங்கள் போன்ற எல்லா எதிரிகள் பற்றிய முதல் தகவலறிக்கையை உடலுக்கு சமர்ப்பிப்பது தோல்தான். தோலெங்கும் பரவியுள்ள ''லேங்கர்ஹான்ஸ்'' செல்கள் கிருமிகளை இனங்கண்டு நம் உடலின் எதிர்ப்பு சக்தி மண்டலத்திற்கு உடனுக்குடன் செல்வதோடு அவற்றை நினைவில் கொண்டு மீண்டும் அவை நம்மை நெருங்காதவாறு உடலை காக்கிறது இதனால் 90% நோய்கள் முன்கூட்டியே தடுக்கப்படுகிறது.

3. உணர்வு :– தோலின் உணர்வு நரம்புகள் தொடு உணர்வு வெப்பம், குளிர், அதிர்வு, அழுத்தம், வலிகள் முதலியவற்றை மூளைக்கு கடத்துகிறது.

4. வெப்ப ஒருங்கமைவு :– வியர்வை சுரப்பிகளால் உடல் வெப்பத்தை ஒரே சீராக வைத்துக்கொள்ள துணை புரிகிறது. உடல் நீராவியாதலை தடுத்து கட்டுப்படுத்துகிறது.

5. அழகியல் தொடர்பு :– மனநிலை, உடல்நிலை, தோலின் நிறம் வனப்பின் மூலம் கவரும் திறன் அறிய உதவுகிறது.

6. சேமிப்பு தொகுப்பு :– உடலுக்கு தேவையான நீர் மற்றும் கொழுப்புகளின் சேமிப்பு பகுதியாகவும் தோல் விளங்குகிறது.

7. கழிவு நீக்கம் :– உடலின் வெப்பம் வியர்வை போன்ற கழிவுகளால் வெளியேற்ற தோல் உதவுகிறது.

8. வைட்டமின் D உற்பத்தி :– சூரிய ஒளியிலிருந்து வைட்டமின் D யை உற்பத்தி செய்ய தோல் உதவுகிறது மேலும் வைட்டமின் B யை பாதுகாக்கிறது.

மனித உடலில் அதிக அளவில் உள்ள உறுப்பு தோல். ஆனால் தோலை நாம் ஒரு உறுப்பு மண்டலமாக நினைப்பதே இல்லை அலட்சியம் காட்டுகிறோம். அதிவெப்ப சூரிய ஒளி, தொழிற்சாலை மாசு, வாகன மாசு உள்ளிட்டவை மட்டுமன்றி மன அழுத்தத்தாலும் தோல் பாதிக்கப்படுகிறது. ''புறத்தூய்மை நீரால் அமையும்'' என்பார் வள்ளுவர் எனவே தோலை நாம் நீரினால் கழுவி புழுதிகளை நீக்க வேண்டும். தோல் பற்றிய விழிப்புணர்வு நமக்கு தேவை. தோலில் ஏதேனும் பாதிப்பு அல்லது நோய் ஏற்பட்டால் இவற்றை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை பெறாவிட்டால் தோல் நோயால் அவதியுற நேரிடும்.

திருமூலரும் ''உள்ளம் பெருங்கோயில்–
ஊனுடம்பு ஆலயம்
ஜீவன் சிவன் புலனைந்தும் சுடர்மணி'' – என்பார்.

ஆலயம் போன்ற இந்த உடலை மூடி பாதுகாக்கும் பாதுகாப்பு பெட்டகமாக தோல் விளங்குகிறது. எனவே நாம் தோலின் ஆரோக்கியத்திற்கு உதவும் சத்துகள் நிறைந்த உணவு வகைகளை எடுத்துக்கொள்ளுவதாலும், தூய்மையான தோலுக்கு மாசுகளை கழுவி சுத்தம் செய்தல், தேங்காய் எண்ணெயை தடவுதல், வெப்பநிலைக்கு ஏற்ற ஆடைகளை அணிதல் போன்ற செயல்களால் நமது தோலை பாதுகாக்கலாம். தோற்ற பொலிவைத் தரும் தோலினை பாதுகாப்போம்! விழிப்புணர்வுடன் செயல்படுவோம்.

- C. உமா ரவி,
கழுக்காணிமுட்டம்.
Cell: 6381710230

வியப்பூட்டும் பிரபஞ்சம்
குறுங்கோள்கள் 5 – (Dwarf Planets)
செரிஸ், ஹவ்மியா, மேக்மேக், மற்றும் எரிஸ்

அக்ரி த. இராமலிங்கம் முன்னாள் கூடுதல் இயக்குநர்,
சென்னை–91 – செல் : 9445102249

வான் பொருட்கள் போதுமான பருமன் மற்றும் எடையுடன் (Mass) உருண்டையாக இருந்து, சூரியனைச் சுற்றி வந்து, பிற வான் பொருட்களை தன் அருகே அண்டவிடாமல் இருந்தால் அவை கோள்கள் என்றும், மேற்கண்ட மூன்றாவது விதிக்கு உட்படாமல் அதாவது பிற வான் பொருட்களை தன் அருகே அண்டவிடாமல் இருக்கும் தன்மை இல்லாத வான்பொருட்கள் குறுங்கோள்கள் அல்லது குள்ள கிரகங்கள் (Dwarf Planets) என்று அழைக்கப்படுகின்றன என்றும், அப்படிப்பட்ட குறுங்கோள்கள் ஐந்து உள்ளன என்றும் கடந்த மாத இதழில் தெரிவிக்கப்பட்டது. ஐந்து குறுங்கோள்களில், மிகவும் பெரிய அளவைக் கொண்ட ''புளூட்டோ'' என்ற குறுங்கோள் பற்றிய முழு தகவல்களும் சென்ற இதழில் தெரிவிக்கப்பட்டன. மற்ற நான்கு குறுங்கோள்களான ''செரிஸ், ஹவ்மியா, மேக்மேக் மற்றும் எரிஸ்'' பற்றி தகவல்களை இந்த இதழில் காண்போம்.

1. செரிஸ் என்ற குறுங்கோள் :

செரிஸ் என்ற குறுங்கோள் மட்டும் செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடையே உள்ள ''அஸ்டிராய்டு'' மண்டலத்தில் உள்ளது. மற்ற நான்கு குறுங்கோள்களும் எட்டாவது கிரகமான நெப்டியூனுக்கு அடுத்து உள்ள ''குயிபேர்'' மண்டலத்தில் உள்ளன. அஸ்டிராய்டு மண்டலத்தில் அஸ்டிராய்டுகள் எனப்படும் பாறைகளும், மீட்டியோராய்டுகளும் எனப்படும் சிறு வான்கற்களும் உள்ளன என்று முந்தைய கட்டுரையில் பார்த்தோம். மேற்கண்ட அஸ்டிராய்டு மண்டலத்திலுள்ள மிகப் பெரிய வான்பொருள் ''செரிஸ்'' என்ற குறுங்கோளாகும். பியாசி என்ற வானியல் வல்லுநரால் 1801– ஆம் கண்டறியப்பட்டு, ரோமன் தேவதையின் பெயரால் ''செரிஸ்'' என்றழைக்கப்படுகிறது.

செரிஸ் என்ற குறுங்கோளின் விட்டம் 952 கி.மீ ஆகும். செரிஸ் குறுங்கோள் தன்னைத்தானே, ஒரு முறை சுற்றிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் நேரம், அதாவது ஒரு நாள் என்பது 9 மணிநேரம் ஆகும். செரிஸ் குறுங்கோள் ஒரு முறை சூரியனைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலம், அதாவது ஒரு ஆண்டு என்பது 4.6 புவி ஆண்டுகள் ஆகும். செரிஸ் குறுங்கோளின் தன்மைகளை அறிய Dawn என்ற விண்கலம் 2015–ஆம் ஆண்டு அனுப்பப்பட்டு சில தகவல்கள் பெறப்பட்டன. மேற்கண்ட ஆய்வின்படி செரிஸ் குறுங்கோளுக்கு காற்று மண்டலம், நிலாக்கள் மற்றும் வளையல்கள் இல்லை என்று கண்டறியப்பட்டது. மேலும் செரிஸ் குறுங்கோளில் நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றும் அதனால் உயிரினங்கள் வாழ வழியில்லை என்றும் அறியப்பட்டது.

2. மேக்மேக் என்ற குறுங்கோள் :

பாலமோர் விண்வெளி ஆய்வு மையத்திலுள்ள தொலைநோக்கி கருவி மூலம் (Ground Telescope) 2005–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ந் தேதி, பிரவன், ட்ரூஜில்லோ மற்றும் ராபிநோவிட்ஸ் என்ற மூன்று வானியல் வல்லுநர்களின் கூட்டு முயற்சியால் கண்டறியப்பட்டது. குயிபேர் மண்டலத்திலுள்ள இரண்டாவது பிரகாசமான (Second Brightest Object) வான்பொருளாகும். இதைவிட பிரகாசமான வான்பொருள் ''புளூட்டோ'' என்ற குறுங்கோளாகும். இதனுடைய விட்டம் 1430 கி.மீ ஆகும். இக்குறுங்கோள் ஒரு முறை தன்னைத்தானே சுற்றிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் கால அளவு, அதாவது ''மேக்மேக்'' இல் ஒரு நாள் என்பது 22.49 மணிநேரம் ஆகும். இக்குறுங்கோள் ஒரு முறை சூரியனைச் சுற்றிவர ஆகும் காலம், அதாவது ஒரு வருடம் என்பது 305 புவி ஆண்டுகள். இக்குறுங்கோள், சூரியனிலிருந்து 45.8 AU தூரத்தில் உள்ளது (ஒரு AU தூரம் என்பது 15 கோடி கி.மீ ஆகும்). ஆகவே சூரிய ஒளி இக்குறுங்கோளை சென்றடைய 6 மணி 20 மணித்துளிகள் ஆகின்றன என்று அறியப்பட்டுள்ளது. இக்குறுங்கோளின் வெளிப்புறத்தில் மீத்தேன் வாயு உறைந்த நிலையில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மெல்லிய வளி மண்டலத்தில் நைட்ரஜன் வாயு நிறைந்துள்ளது. மீத்தேன் வாயு உறைந்த நிலையில் இருப்பதாலும், வளி மண்டலத்தில் ஆக்சிஜன் இல்லாததாலும், உயிரினங்கள் வாழ முடியாது. இக்குறுங்கோளுக்கு MK_2 என்ற பெயரில் ஒரே ஒரு நிலா, 13,000 மைல்கள் தூரத்தில் உள்ளது. அதன் விட்டம் 160 கி.மீ. இக்குறுங்கோளுக்கு வளையங்கள் (Rings) கிடையாது.

3. ஹவ்மியா என்ற குறுங்கோள் :

இக்குறுங்கோளை முதன் முதலில் கண்டறிந்தவர் பெயர் வெளியிடப்படவில்லை, வானியல் வல்லுநர் குழு, 2004–ஆம் ஆண்டு கண்டறிந்ததாக செய்திகள் உள்ளன. அகில உலக வானியல் கூட்டமைப்பு 2008–ஆம் ஆண்டு,

இக்குறுங்கோளை பட்டியலில் சேர்த்து, ''ஹவ்மியா'' என்று பெயரிடப்பட்டதாக செய்திகள் உள்ளன. ''ஹவ்மியா'' பற்றிய தகவல்கள் அனைத்தும், வானியல் ஆய்வகங்களில் உள்ள தொலைநோக்கி கருவி மூலம் கண்டறியப்பட்டவை. இக்குறுங்கோள் ஆய்வுக்காக எந்த ஒரு விண்கலமும் வானில் செலுத்தப்படவில்லை. இக்குறுங்கோள் தன்னைத்தானே ஒரு முறை சுற்றிக்கொள்ள ஆகும் நேரம், அதாவது ஹவ்மியாவில் ஒரு நாள் என்பது 4 மணிநேரம் ஆகும். இக்குறுங்கோள் ஒரு முறை சூரியனைச் சுற்றிவர எடுத்துக்கொள்ளும் கால அளவு, அதாவது ஒரு வருடம் என்பது 285 புவி ஆண்டுகள் ஆகும். இதனுடைய விட்டம் 1240 கி.மீ ஆகும். கோள்கள் மற்றும் குறுங்கோள்களில், மிகவும் அதிவேகமாக தன்னைத்தானே சுற்றிக்கொள்ளும் ஒரே ஒரு வான்பொருள் ''ஹவ்மியா'' ஆகும். அதனால்தான் ஹவ்மியாவில் ஒரு நாள் என்பது 4 மணி நேரம். இக்குறுங்கோள் சூரியனிலிருந்து 43 AU தூரத்தில் (15 கோடி X 43 கி.மீ) உள்ளது. சூரிய ஒளி இக்கோளை சென்றடைய 6 மணி நேரம் ஆகிறது. இதனுடைய அமைப்பு பாறைகளால் ஆனது. வெளிப்புறம் முழுவதும் பனிக்கட்டிகளால் மூடப்பட்டுள்ளது. ஆகவே உயிரினங்கள் வாழ முடியாது.

ஹவ்மியாவின் நிலாக்களும் வளையங்களும் :

2005–ஆம் ஆண்டு, ஹவ்மியா குறுங்கோளுக்கு இரண்டு நிலாக்கள் இருப்பதாக கண்டறியப்பட்டது. உட்புற நிலாவுக்கு ''நமாக்கா'' என்றும் வெளிப்புற நிலாவுக்கு ''கியாக்கா'' என்றும் பெரியடப்பட்டுள்ளது. 2017–ஆம் ஆண்டில் ஹவ்மியாவுக்கு வளையங்கள் உண்டு என்று கண்டறியப்பட்டது.

எரிஸ் என்ற குறுங்கோள் :

2003–ஆம் ஆண்டு அக்டோபர் 21–ந் தேதி, பாலமோர் விண்வெளி ஆய்வு மையத்திலுள்ள, பிரவுன் ட்ரூஜில்லோ மற்றும் ராபிநோவிட்ஸ் என்ற மூன்று வல்லுநர்கள் கொண்ட குழு, இக்குறுங்கோளை கண்டறிந்தது. புளூட்டோ குறுங்கோளைப் போன்று பெரியது பூமியை விட சற்றே சிறியது. சூரியனிலிருந்து வெகு தூரத்தில் அதாவது 68 AU (68 x 15 கோடி கி.மீ) தூரத்தில் உள்ளது. ஆகவே சூரிய ஒளி இக்குறுங்கோளை சென்றடைய 9 மணி நேரம் ஆகிறது. இக்குறுங்கோள், தன்னைத்தானே ஒரு முறை சுற்றிக்கொள்ள எடுத்துக்கொள்ளும் நேரம் அதாவது ''எரிஸ்'' குறுங்கோளில் ஒரு நாள் என்பது 25.9 மணி நேரம் கொண்டது. பூமியைவிட சற்றே கூடுதல் நேரம். இக்குறுங்கோள் ஒரு முறை சூரியனைச் சுற்றி வர ஆகும் காலம், அதாவது ஒரு ஆண்டு என்பது, 557 புவி ஆண்டுகள். காரணம், சூரியனிலிருந்து இக்குறுங்கோள் மிகமிக அதிக தூரத்தில் உள்ளது. இக்குறுங்கோளின் விட்டம் 2326 கி.மீ. ஆகும். உட்புறத்தில் பாறைகளும், வெளிப்புறத்தில் பனிப்பொழிவும் கொண்டது. ஆகவே இதனுடைய வெளிப்புற வெப்பம் மைனஸ் 217° செல்சியஸ் முதல் மைனஸ் 243° செல்சியஸ் வரை உள்ளது. இக்குறுங்கோள் தன் சுற்றுப் பாதையில், சூரியனை நெருங்கி வரும்பொழுது, உறைபனிக்கட்டி உருகிவிடும். வெப்பம் மிக மிக குறைவாக உள்ளதால், உயிரினங்கள் வாழ முடியாது. டிஸ்னோமியா என்ற நிலா இக்குறுங்கோளை 16 நாட்களுக்கு ஒரு முறை சுற்றி வருகிறது. இக்குறுங்கோளுக்கு வளையங்கள் கிடையாது.

– (தொடரும்)

ஆதாரம் : நாசா மற்றும் விக்கிபீடியோ இணையதளம்.



வாழ்த்துகிறோம்

முன்னாள் ஒப்புரவு துணை ஆசிரியர்
மற்றும் பொருளாளர்
சோவியத் தூதரக மேனாள் அதிகாரி

திரு. **USSR G.நடராஜன்** அவர்களுக்கு

அவர்களது நீண்ட கால பெருமைமிகு சர்வதேச உறவுகள் மேம்பாட்டுப் பணிகளைப் பாராட்டி (FOR HIS OUTSTANDING CONTRIBUTIONS IN THE FIELD OF INTERNATIONAL RELATIONS) 26–3–2022 அன்று சர்வதேச தமிழ்ப் பல்கலைக் கழகம் (THE UNIVERSAL TAMIL UNIVERSITY) **மதிப்புறு முனைவர் பட்டம் (DOCTOR OF LETTERS)** வழங்கி சிறப்பித்துள்ளது!

– அன்புடன் **R. உதயகுமார்**

சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
தொ.பேசி: 044–26532182
Email: thiagu1943@gmail.com

நீயாருக்காக வாழ்கிறாயோ அவருக்காக சிலவற்றை விட்டுக்கொடு.
உனக்கென யார்வாழ்கிறார்களோ அவரை எப்போதும் விட்டுக்கொடுக்காதே!

சொந்தக்காலில் நில்லுங்கள்

அம்மா! என் பனியன் எங்கே? துண்டு எங்கே? என்று பனியனுக்கும் துண்டிற்கும் அம்மாவை எதிர் பார்க்கும் இருபது வயது பாப்பாக்களாக இளைஞர்கள் இருக்கலாமா? எதற்கெடுத்தாலும் அம்மாவைச் சார்ந்திருப்பவர்கள் திருமணத்திற்குப் பின்னர் தன் மனைவியைச் சார்ந்து விடுவார்கள். அதுதான் பிரச்சனை. அதனால் அம்மாவை ஓரம் கட்டுவார்கள். பிற்காலப் பிரச்சனைகளுக்கு இந்த அம்மா சார்பு ஒரு முக்கிய காரணம். தொலைக்காட்சி விளம்பரங்கள் வேறு இந்த மனோபாவத்தை வளர்க்கின்றன. படிப்பிலும் கம்ப்யூட்டரிலும் மூழ்கி இருக்கும் பிள்ளைகளுக்கு விவாவும் காம்ப்ளானும் கொண்டுவந்து கையில் நீட்டும் விளம்பரத் தாய்மார்கள் எதிர்காலத் தலைமுறையை மெல்ல மெல்ல நாசமாக்குகிறார்கள். நமக்கு எல்லாமே பிறர்தான் செய்ய வேண்டும் என்கிற சார்பு மனோபாவம் இளைய தலைமுறையினரிடம் வளரக்கூடாது. அன்பும் உபசரிப்பும் குற்றம் அல்ல. ஆனால் சாக்ஸை துவைத்துப் போடுவது .... தேடும் போது எடுத்துக் கொடுப்பது யூனிஃபார்ம் அயர்ன் செய்து ஞாபகமாகத் தருவது புத்தகங்களையும், தொலைந்த பொருட்களையும் தேடித் தேடி எடுத்துக் கொடுப்பது . இவை யாவும் அம்மா, அக்கா, அண்ணன், அப்பா இவர்களுடைய வேலைகள் என்று பிறரைச் சார்ந்து வளரும் பண்பு மாணவர்களுக்கு வளரக்கூடாது. நாம் நமது காலில் நிற்க முடியாமல் போனால் ஊனம் என்கிறோம். வாழக்கையில் பிறரைச் சார்ந்திருப்பதுவும் ஒருவகை ஊனமே. இந்த ஊனம் வெற்றியின் விரோதி. எனவே இதை விட்டு விலகிச் சொந்தக்காலில் நில்லுங்கள். இல்லையேல் நொந்து நூலாகிவிடுவீர்கள்.

– நன்றி – சுகி சிவம்

உறவுகள் தேவைதானா?

எந்த ஒரு உறவும் இல்லாது நீங்கள் உங்களை யார் என அறிமுகப்படுத்தி சொல்லுங்கள் பார்ப்போம்! நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க, ஆனந்தமாக இருக்க ஆசைப்படுவதால்தான், உறவுகளை தேடுகிறீர்கள் அடுத்தவரை உங்களது மகிழ்ச்சிக்கு உபயோகப்படுத்த முயற்சி செய்கிறீர்கள். நமது மகிழ்ச்சி நமது கையில் இல்லை என்பதையே இது காட்டுகிறது. உறவுகள் என்றாலே அது எதிர்பார்க்கிற கூட்டம்தான். உடலால் மெனக்கிடல், வாய் வார்த்தைகளால் ஆறுதல், செல்வாக்கைப் பயன்படுத்தி உதவுதல். பொருளாதாரத்தில் உதவுதல் என நான்கு வகை உதவிகளில் முடிந்தவரை நமக்கு பாதிப்பின்றி எதைச் செய்ய இயலும் எனப் பார்க்க வேண்டும்.

உறவினர் வீட்டு நல்லது கெட்டதுகளில் சம்பிரதாயங்கள் பாராது,தவறாமல் கலந்து கொள்வதுடன், மிகுந்த ஈடுபாடுகாட்டி,பொறுப்புகளை எடுத்துத் தோளில் போட்டுச் செய்தல் வேண்டும். உறவினர்கள் பலரும் ஆழ்ந்த சம்பிரதாயங்களில் ஊறிப்போனவர்கள் என்பதால் இந்த விஷயத்தில் அவர்கள் எதிர்பார்க்குமளவிற்கு இறங்கிப் போகவேண்டும்.

உழவினை சிறப்பிக்கும் திருக்குறள்

உழவு எனும் தலைப்பின் கீழ்உள்ள குறள்தான் உன்னைக் கவர்கின்றது! திருவள்ளுவர் காலத்தில் உழவுத்தொழில் செய்பவர்கள்தான் மிக்க அளவில் போற்றப்பட்டிருக்கிறார்கள். தம் கையால் உழுது உண்பவர்கள் எந்த நிலையிலும் பிறரிடம் பிச்சை கேட்கமாட்டார்கள். அதுமட்டுமல்ல...தம்மிடம் கேட்டுவருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் , உடனே அவர்கள் கொடுப்பார்கள்! (இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் கரவது கைசெய்து ஊன் மாலையவர்)

பயன் இல் பாராட்டு வானை மகன் எனல்
மக்கள் பதடி உனல்

பயனில்லாத சொற்களைத் திரும்பத் திரும்ப பல தரமும்
சொல்பவனை மனிதன் என் சொல்லற்க மனிதருக்குள்ளே பதர் என்று சொல்க.

அநாதை ஆக்காதீர்கள்!



அது ஒரு கிராமம். அந்த கிராமத்துக்குப் பக்கத்தில் ஒரு காடு. அந்தக் காட்டில் ஒரு ஆப்பிள் மரம். தினமும் இந்த ஆப்பிள் மரத்தைத் தேடி சிறுவன் ஒருவன் வருவான். அந்த மரத்தின் உச்சிக்குப் போய் உட்கார்ந்து கொண்டு பாட்டுப்பாடுவான். அந்த மரத்தின் நிழலில் மணல் வீடு கட்டி விளையாடு வான். அவன் வந்தாலே இந்த மரத்துக்கு சந்தோஷம் பொங்கும். திடீரென்று ஒரு நாள் அந்தச் சிறுவன் வரவில்லை. சரி நாளைக்கு வருவான் என்று நினைத்து மனதைத் தேற்றிக் கொண்டது. ஆனால் அந்தச்சிறுவன் அடுத்த நாளும் வரவில்லை. அடுத்த வாரமும் வரவில்லை. மரம் அந்தச் சிறுவனை நாளெல்லாம் எதிர்பார்த்து ஏமாந்துபோனது.

சில வாரங்கள் கழித்து ஒரு நாள் அவன் அந்த மரத்தைத் தேடி வந்தான். அவனைப் பார்த்ததும் அந்த மரத்துக்குத் தலைகால் புரியாத சந்தோஷம். ஆனால் சிறுவனோ உம்மென்று இருந்தான். என்ன பிரச்சனை ? ஏன் கவலையாக இருக்கிறாய் ? என்று கேட்டது மரம் என்னோடு படிக்கும் சிறுவர்களெல்லாம் அழகழகாக பொம்மைகள் வைத்து விளையாடுகிறார்கள். அது போன்று பொம்மை வாங்க எனக்கு காசு வேண்டும் என்றான் சிறுவன் ஐயோ.. என்னிடம் காசு எல்லாம் இல்லையே. உனக்கு எப்படி நான் உதவி செய்வேன் ? என்று அந்த மரம் நொந்து அழ ஆரம்பித்தது. அப்போது அதற்கு ஒரு ஐடியா பளிச்சிட்டது. இதோ பார் என்னுடைய கிளைகளில் இருக்கும் ஆப்பிள்களைப் பறித்துக் கொண்டுபோய் கடைகளில் விற்றால் காசு கிடைக்கும். உனக்குத் தேவையான பொம்மைகளை வாங்கிக்கொள் என்றது. சிறுவனும் அப்படியே ஆப்பிள்களைப் பறித்துக் கொண்டு கிளம்பினான். அப்போது அந்தமரம் சிறுவனிடம் கூறியது. நீ முன்புபோல் தினமும் வரவேண்டாம் வாரம் ஒருமுறை வந்து பார்த்தால் போதும் என்று சொல்லி அனுப்பியது. ஆனால் அடுத்தவாரம் அவன் வரவில்லை. மாதங்கள் பல கடந்தன. மாதங்களும் பல ஓடின. அவன் வரவில்லை. மரம் ஏமாற்றமடைந்தது. ஆனாலும் ஒரு நாள் சிறுவன் வருவான் என்று நம்பிக்கையோடு இருந்தது. பல வருடங்களுக்குப் பின்னர் ஒரு நாள் அவன் அந்த ஆப்பிள் மரத்தைத் தேடிவந்தான்.

அவனைப்பார்த்ததும் மரத்துக்கு இருப்பு கொள்ளவில்லை. சந்தோஷம்வா வா என்னோடு விளையாடு. என்கிளைகளில் ஏறி விளையாடு. என் மீது உட்கார்ந்து கொண்டு பாட்டு பாடு என்றது. உன்னோடு விளையாடுவதற்கு நான் சிறுவன் இல்லை. எனக்குத் திருமணமாகி விட்டது. குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற அவன் சோகமாக இருப்பதைப் பார்த்து உனக்கு என்ன பிரச்சனை ? என்றது மரம். மழைக்காலம் வருகிறது. நாங்கள் வசிக்கும் வீடு மிகப்பழசாகி விட்டது. எப்போது இடிந்து தலையில் விழும் என்று தெரியவில்லை. புது வீடு கட்டவேண்டும் அதுதான் கவலையாய் இருக்கிறேன் என்றான். இதைக் கேட்டதும் கொஞ்சமும் தாமதியாமல் அந்த ஆப்பிள் மரம் சொன்னது. என்னிடம் பணம் காசில்லை. என்னிடம் உள்ள கிளைகளை வெட்டிக் கொண்டு போய் உனக்கு ஒரு வீடு கட்டிக்கொள் என்றது மரம். உடனே அவன் கோடாரியை எடுத்து மரத்தை வெட்டத் துவங்கினான். அப்போது மரம் அவனைப்பார்த்து வாரம், மாதம் என்ற கணக்கெல்லாம் கூட வேண்டாம். குறைந்த பட்சம் வருடத்துக்கு ஒரு முறையேனும் என்னைப் பார்த்துச் செல் எனக்கு ஆறுதலாக இருக்கும் என்றது மரம்.

மரக்கிளைகளை வெட்டிச்சென்றவன் பல வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் காட்டுக்கு வந்தான். மரம் சந்தோஷத்தில் ஆனந்தக் கூத்தாடியது. ஆனால் அவனோ வழக்கம்போல் முகத்தை சோகமாக வைத்திருந்தான். இப்போது என்ன பிரச்சனை என்று மரம் கேட்டது ? என் மீன்பிடிப் படகு பழசாகி சேதமடைந்து விட்டது. உளுத்துப்போய் உடைந்துவிட்டது. படகு இல்லாமல் கஷ்டப்படுகின்றேன் என்றான். இதைக்கேட்ட மரம் கவலைப்படாதே ! என் அடிமரத்தை வெட்டிக் கொண்டுபோய் பெரிய படகு செய்து கொள் என்றது மரம். அடி மரத்தை வெட்டி எடுத்துச் சென்றவனைப் மரம் கூறியது. வருடத்திற் ஒரு முறை என்றில்லாவிட்டாலும் எப்போதாவது ஒரு முறை என்னைப் பார்க்க வா ! என்றது. ஆனால பல ஆண்டுகள் ஆகியும் அவன் வரவேயில்லை. இனி அவன் வருவான் என்ற நம்பிக்கையும் மரத்துக்கு மெள்ள மறைய ஆரம்பித்து. அப்போது ஒரு நாள் அவன் வந்தான் மிகவும் வயதாகி தளர்ந்து போயிருந்த அவனைப் பார்த்ததும் மரத்துக்கு அழுகை வந்துவிட்டது உனக்குத் தர என்னிடம் இப்போது ஆப்பிள்கள் இல்லை. நீ என்னைக் கட்டிக்கொள்ள கிளைகள் இல்லை. நீ

படகு செய்து கொள்வதற்கு என்னிடம் இப்போது அடிமரமும் இல்லை. என்றது. அதற்கு அவன் நீ ஆப்பிளைக் கொடுத்தால் கடித்து சாப்பிட எனக்குப் பற்கள் இல்லை. வீடு கட்டவும் படகு செய்யவும் என் உடம்பில் சக்தி இல்லை. எனக்குத் தேவை ஓய்வு மட்டுமே என்றான். அப்படியா ... இதோ தரையில் கிடக்கிறதே என்னுடைய வேர்கள். இவற்றில் தலைவைத்துப் படுத்துக்கொள். சௌகரியமாக இருக்கும் என்றது மரம். அவன் அந்த மரத்தின் வேர்களில் தலையை வைத்து படுத்துக் கொண்டான். இந்த சுகத்துக்காகத்தானே அந்த மரம் பல வருடம் ஏங்கித் தவித்தது. இப்போது அதன் ஏக்கம் நிறைவேறியது. சந்தோஷத்தில் ஆனந்தக் கண்ணீர் விட்டது மரம்.

இது ஏதோ ஒரு ஆப்பிள் மரத்தின் கதை அல்ல. இது பெற்றோர்களின் கதை. இக்கதையில் வரும் சிறுவனைப் போலத்தான் நம்மில் பலர் சிறு வயதில் அப்பாஅம்மாவோடு விளையாடுகிறோம். வளர்ந்து பெரியவனானதும் நமக்கென்று குடும்பம், குழந்தை என்று செட்டிலாகி விடுகிறோம். இதன்பின் ஏதாவது தேவை என்றால்தான் அப்பா அம்மாவைப் பார்க்கச் செல்கின்றோம். அல்லது நமக்குப் பிரச்சனை என்றால் மட்டுமே அவர்களின் ஆலோசனைளை நாடிச்செல்கின்றோம்.

நம்மிடம் இருப்பது எல்லாம் அவர்கள் கொடுத்ததுதான். ஆனால் அவர்களுக்கு நாம் எதையும் கொடுப்பதில்லை. கொடுக்கவும் முடியாது. ஒன்றைத்தவிர. அது நம்முடைய நேரம். அவர்கள் விரும்புவது எல்லாம் வாரத்துக்கு ஒரு முறை அவர்களோடு தங்கும் சில மணி நேரம். அதைக் கூடவா நம்மால் அவர்களுக்காக கொடுக்கமுடியாது ?...

நன்றி: சுவாமி மித்ரானந்தா

நீதி தவறாத சிற்றரசன்



அவன் ஒரு நீதி தவறாத சிற்றரசன். தனக்குப்பிறகு பிள்ளைகள்தான் என்றில்லை... நீதி தவறாத ஒருவன்தான் நாட்டின் மன்னனாக வரவேண்டும் என்று நினைத்தான். அதற்காக அவன் ஒரு வினோதமான போட்டியை நடத்தினான். சில சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து அழைத்து, அவர்கள் அனைவரிடமும் ஒரு செடியின் விதையைக் கொடுத்து, இதை நன்றாக வளர்த்து, ஆறுமாதத்துக்குப் பிறகு என்னிடம் கொண்டுவாருங்கள்! என்று சொன்னான். அவர்களில் லிங்கு என்ற சிறுவனும் ஒருவன். லிங்கு மன்னன் கொடுத்த விதையை ஒரு மண்தொட்டியில் புதைத்து தினமும் தண்ணீர் ஊற்றிப் பராமறித்தான். மற்ற சிறுவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விதைகள் எல்லாம் துளிர்விட்டு முளைக்க ஆரம்பித்தன. ஆனால் லிங்குவின் விதை மட்டும் முளைக்கவே இல்லை. இதனால் வருத்தமடைந்த லிங்கு என்னென்னவோ முயற்சி செய்து பார்த்தும் விதை முளைப்பதற்கான அறிகுறியும் தென்படவில்லை. மன்னன் கொடுத்த காலமும் முடிவடைந்தது. குறிப்பிட்ட நாளன்று அத்தனைச் சிறுவர்களும் தங்களிடம் கொடுக்கப்பட்ட விதைகளைச் செடிகளாக்கிக் கொண்டு வந்து மன்னனிடம் காட்டினார்கள். எல்லோருடைய ஜாடிகளைய்ம் பார்த்துக்கொண்டே வந்த மன்னன் லீங்குவின் அருகே வந்ததும் அவன் உடம்பே நடுங்கியது.

நான் கொடுத்த விதையை ஏன் பாழடித்தாய் ? எனக் கேட்டு மன்னன் தனக்குத் தண்டனை கொடுத்துவிடுவானோ என்று லிங்கு பயந்தான். ஆனால் மன்னனோ, லிங்கு கொண்டு வந்த ஜாடி வெறுமையாக இருப்தைக் கண்டு, உன் பெயர் என்ன ? என்று கேட்டான். லிங்கு என்று பதற்றத்தோடு சிறுவன் பதில் சொல்ல மன்னன் உரத்த குரலில் அறிவித்தான் எனக்குப் பின்னே லிங்குதான் இந்த நாட்டின் மன்னன். ஏன் ... ? என்பதைப் போல அங்கே கூடியிருந்தவர்கள் புருவம் உயர்த்தினார்கள். நான் எல்லா சிறுவர்களுக்கும் வேகவைக்கப்பட்ட விதைகளைத்தான் கொடுத்தேன். ஆனால் அத்தனை பேரும் வேறு ஏதோ ஒரு விதையை வைத்துச் செடிவளர்த்துக் கொண்டுவந்து என்னிடம் காட்டினார்கள். லிங்கு ஒருவன் மட்டும்தான் தில்லுமுல்லு எதுவும் செய்யாமல் நேர்மையாக நடந்துகொண்டான். அதனால் அவன்தான் எனக்குப்பிறகு மன்னனாகும் தகுதி பெற்றவன் என்று மன்னன் அறிவித்தான்.

கடுமையான உழைப்பு பதுமையான ,புத்திசாலித்தனமான சிந்தனைகள்.. இவை இரண்டும்தான் முன்னேற்றத்திற்கான முக்கிய சாவிகள்.

விடுகதைகள்

1. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது. அது என்ன ?
2. கடித்தால் துவர்ப்பு தண்ணீர் குடித்தால் இனிப்பு. அது என்ன ?
3. குழந்தைக்கு பலமான கை எது ?
4. விதையின்றி முளைக்கும், வேறின்றி வளரும். அது என்ன ?
5. நல்லதை அனுப்பிவிட்டு கெட்டதை வைத்துக்கொள்வாள். அவள் யார் ?
6. நல்லவர் கொள்ளும் தானம், நாலுபேருக்கு தராத தானம்.அது என்ன ?
7. பார்க்க கல்லானவன், கடிக்க இனிமையானவன். அவன் யார் ?
8. சின்ன மச்சான். குனிய வச்சான். அது என்ன ?
9. ஒரெழுத்து பறக்கும். அது என்ன ?
10. ஓராண்டு உழுதவனுக்கு ஒரு வார அறுவடை. அது என்ன ?

பொன்மொழிகள்

1. ஆசிரியர்கள் சொல்லித்தருவதால் மாணவர்கள் கற்றுக்கொள்வதில்லை. ஆசிரியர்களைப் பார்த்து அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். – முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்
2. வளமானகாலத்தில் நண்பர்கள் நம்மைத்தெரிந்து கொள்கிறார்கள்.வறுமைக்காலத்தில் நண்பர்களை நாம் தெரிந்து கொள்கிறோம்! – இங்கர்சால்
3. நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது எளிது. ஆனால் உயிரைக்கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பது அரிது. – நெப்போலியன்
4. ஒரு நல்ல நூலைப்போல சிறந்த நண்பனைக்காட்டிலும் நெருங்கிய உறவினர் எவருமில்லை! – அறிஞர் அண்ணா
5. நட்பு கொள்வதில் நிதானமாகச் செல்!நட்பு கொண்டபின் உறுதியாய் நில்! – சாக்ரட்டீஸ்
6. உங்களுடைய குற்றங்களை எடுத்துக்காட்டும் மனிதர்களிடம் நீங்கள் நன்றி உள்ளவர்களாக இருக்கவேண்டும். – சிவானந்தர்
7. வெற்றி பல நண்பர்களைப்பெற்றிருக்கிறது. – கிரேக்கப்பழமொழி
8. ஏழைகள் உணவைத் தேடுகின்றனர்.செல்வந்தர்கள் பசியைத் தேடுகின்றனர். – பழமொழி
9. உழைக்கும் கரங்கள் வழிபடும் கரங்களைவிட வலிமை மிக்கவை. – ஸரகஸ்திரர்
10. நமது விதிப்படி வாய்த்தவர்கள் பெற்றோர்கள்.நமது மதிப்புப்படி வாய்த்தவர்கள் நண்பர்கள். – டில்லிஸ்னி

சிரிப்பதற்கு சில

1. ஆசிரியர் :நீ என்ன ஆகவேண்டும் என விரும்புகின்றாய் ?
   மாணவன்: நான் எனது அப்பா போன்றே டாக்டராகவேண்டும் என்று விரும்புகிறேன்.
   ஆசிரியர் : ஓ அப்படியா! அப்பா ஒரு டாக்டரா ?
   மாணவன் : இல்லை அப்பா விரும்பியது போலவே நானும் டாக்டராக வேண்டும் என விரும்புகின்றேன்.
2. மகன்: அப்பா! இதற்கு முன் நீங்கள் எகிப்து சென்றிருக்கிறீர்களா ?
   அப்பா: இல்லை.ஏன் இதனைக் கேட்கிறாய் ?
   மகன்: சரி.அப்படியானால் மம்மியை எங்கிருந்து வாங்கினீர்கள் ?
3. நிருபர்: இவ்வளவு பெரிய லெட்சாதிபதியா இருக்கக் காரணம் யார் சொல்லமுடியுமா ?
   மனிதர்:ஆம் என் மனைவிதான்.
   நிருபர்: உங்க மனைவியை ரொம்ப பாராட்டணும்.அப்ப திருமணத்திற்கு முன்னாடி எப்படி இருந்தீங்க ?
   மனிதர்:பெரிய கோடீஸ்வரனா இருந்தேன்.
4. பெண்மணி 1:...மனம் விட்டு அழவே முடியலே சாமி...
   பெண்மணி2: ஏன் ? என்ன ஆச்சு ?
   பெண்மணி 1:டி.வி.சீரியலே அதுக்குள்ள விளம்பரம் போட்டுடறான்,என் வீட்டுக்காரர் வேற சாப்பாடு போடுன்னு சத்தம் போடறாரு.
5. நம்ம ஆளு ஒருத்தன் திருடிவிட்டு ஜெயிலில் இருந்தான்ல அவன் இப்ப மாறிட்டான் சார்! என்றார் ஒருத்தர்.... திருந்திட்டானா ?... ன்னு கேட்டேன். ...இல்லே சார்! முன்னாடி அவன் கோயம்புத்தூர் ஜெயில்ல இருந்தான் இப்ப வேலூர் ஜெயிலுக்கு மாறிட்டான் சார்!...அப்படின்னார்.

அவரோட நிலைமை என்ன?

ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தார். அவருக்குப் பிறந்தநாள் வந்தது. அரண்மனையிலே அவர் உட்கார்ந்து இருக்கார். அரண்மனைக்கு வெளியே ஒரு பெரிய கியூ. முக்கியமானவர்களெல்லாம் அரசரைக்கண்டுகிட்டுபோறத்துக்காக காத்துக் கிட்டிருக்காங்க. அவங்க அவங்களாலே எது முடியுமோ அதை பரிசா குடுத்துட்டு அவரை வணங்கிட்டுப் போறது வழக்கம். ஆனா அந்த ராஜாவோ ஒரு மூடி டைப்!சில நேரம் சந்தோஷமா இருப்பார். சில நேரம் விபரீதமா நடந்துக்குவார். ஒரு மாதிரியான ராஜா! அன்னைக்குப் பார்த்து அவரு மூடு சரியில்லை.

வரிசையில் நின்ன ஒருத்தர் முதல்ல உள்ளே போனார்.அவரு கையில இருந்த ஒரு எலுமிச்சம் பழத்தை ராஜா கையில குடுத்தார்.ராஜாவோட மூடுதான் சரியில்லையே! அதனால அவரு அந்தப் பழத்தை வாங்கினார்.... உடனே அதை குடுத்தவர் வாயையே திறக்கச் சொன்னார்.அவரு வாயிலேயே அந்தப் பழத்தை வச்சி அடைச்சி ஒரு நாளு பூறா அப்படியே இருக்கணும்ன்னு உத்தரவு போட்டுட்டார்.

எலுமிச்சம்பழம் குடுத்தவர் அதிர்ச்சியடையணும்லே ...அடையல..அதுக்கு பதிலாக சிரிக்க ஆரம்பிச்சுட்டார். ராஜாவுக்கு இன்னமும் கோபம்....ஏன் சிரிக்கறே? ...ன்னார்....அதுக்கில்லே மன்னா.. எலுமிச்சம் பழத்தை என்னுடைய வாய்க்குள்ளே ஒரு நாள் பூறா வச்சிக்கறது எனக்கு ஒண்ணும் கஷ்டமில்லே... ஆனா அரண்மனைக்கு வெளியிலே நிக்கற கியூவுலே ஒருத்தர் ஒரு பெரிய பலாப்பழத்தை வச்சுக்கிட்டு நின்னுகிட்டிருக்கார்..அவரோட நிலைமை என்ன ஆகும்னு நினைச்சிப்பார்த்தேன். அதுதான் சிரிப்பு வந்துட்டது!... அப்படின்னார்.

இச்சொற்கள் எப்படி வந்தன?

பந்தி: திருமணம் மற்றும் பிற சுப நிகழ்ச்சிகளில் அனைவரும் இணைந்து உண்பதை ..பந்தி.. என்கிறார்கள். இப்பெயர் எப்படி வந்தது தெரியுமா? சமஸ்கிருதத்தில் ..பங்க்தி ..என்பது தமிழில் ..பந்தி.. ஆனது. பங்க்தி என்றால்.. சேர்ந்து உண்ணுதல். மனத்தூய்மையான ஒருவர், பந்தியில் அமர்ந்து சாப்பிட்டால் அங்கு பரிமாறும் உணவெல்லாம் சுத்தமாகிவிடும் என்பது ஐதீகம். அப்படிப்பட்டவரை..பங்க்தி பாவனா..என்பர். நம்மோடு சேர்ந்து சாப்பிடுபவர்களின் குணம், பக்கத்தில் அமர்ந்திருக்கும் எல்லோருக்கும் எல்லோர் உணவின்மீதும் பரவும், எனவே ,நற்குணத்தை வளர்த்துக்கொண்டால் நம் அனைவருக்கும் நல்லது. நற்குணம் என்பது உனக்கு நீயே அளித்தக்கொள்ளும் நன்மதிப்புள்ள பரிசு...

பேப்பர்: அக்காலத்தில் காகிதம்னா என்னவென்றே தெரியாது.அப்படி ஒன்று கண்டு பிடிக்கப்படவே இல்லை. ஏதாவது எழுதவேண்டுமென்றால் ஆட்டுத் தோலைப் பயன்படுத்தி யிருக்கிறார்கள். பின்னர் ..பேபைரஸ் .. எனும் கோரைப்புல்லை பயன்படுத்தியுள்ளார்கள். இதற்கென அப்புல்லை கச்சிதமாக நறுக்கிப் பதப்படுத்தி அதில் எழுதிவந்தார்கள். பேப்பர் (காகிதம்)ங்கற சொல்லே பேபைரஸ்ங்கறதிலிருந்து தான் வந்திருக்கிறது.இதனை முதன்முதலாக சீன நாட்டவர்கள்தான் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஸ்கொயர் மீல் : அடி என்றால் தமிழில் அனேக அர்த்தங்கள் உள்ளன. இது மாதிரி ஆங்கிலத்தில் square என்றால் சதுரம் என்பதைத் தவிர நேர்மையான, திருப்தியான, சம்பிரதாயமான (முறையான) போன்ற பல அர்த்தங்களில் ஒன்றாக குறிப்பிடப் படுகின்றது.

டிசம்பர் : டிசம் என்ற லத்தீன் மொழியிலிருந்து வந்தது.டிசம் என்றால் பத்து பண்டைய ரோமானிய காலண்டரில் டிசம்பர் பத்தாவது மாதமாக இருந்ததால் இந்தப்பெயர்!

மெரினா : கடற்கரைக்கு இன்னும் பெயர் வைக்கப்படவில்லை! மெரீன் என்றால் கடல் தொடர்பான என்று பொருள்.மெரீனா என்றால் படகுகள் ஒதுங்கும் இடம் என்றகாரணத்தினால் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

விடுகதை விடைகள்

1.தேங்காய் 2.நெல்லிக்காய் 3.அழுகை 4.கொம்பு 5.சல்லடை 6.நிதானம்
7.கல்கண்டு 8.முள் 9.ஈ 10.தேர்வு

அன்பும் உறவும்

– கோலாகலன்.

உறவுகள் என்பது புனிதமானது. புண்ணியம் மிக்கது. இவற்றில் உரசல்களும் விரிசல்களும் விழாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டால் வாழ்க்கைச் சக்கரம் எளிதாக, தங்குதடையின்றி இனிதாகச் சுழலும். இந்த உரசல்களையும் விரிசல்களையும் உருவாக்காமல் தடுக்கும் நெய்ப்பசை அல்லது மசகு எண்ணெய் (grease), உண்மை அன்பு மட்டுமே. இந்த அன்புக்கு உடன் நின்று உதவுவது உயிரிரக்கம். இதற்கு உறு துணையாவது பாசம். பாசத்திற்கு உடன் நின்று காப்பது பொறுப்பும் கடமையுமாம்.

அன்பு ஈன்ற குழந்தைதான் அருள். அருள் என்பது ஒளி. இது இருளை அகற்றக் கூடியது.

உள்ளத்துள் உள்ள இருளை அகற்றும் ஆற்றல் அருளுக்கு மட்டுமே உண்டு. அதனாற்றான் வள்ளலார் இதனை இறைவனாகப் பாவித்து அருட்பெருஞ்சோதி ஆண்டவர் என்கிறார்.

அருள் உள்ளம் கொண்டதால்தான் வள்ளலார் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினார்.

நீர் இன்றேல் பயிர் வாடும். உணவில்லை எனில் உயிர்வாடும். எனவே பசிப்பிணியைப் போக்க எண்ணிய வள்ளல் இராமலிங்க அடிகள் அணையா அடுப்பு அமைத்து அன்னதானக் கூடம் அமைத்து பசித்தோர்க்கு உணவளிக்கும் பணியைத் தொடங்கினார். இன்றைக்குக் கோவை சிவப்பிரகாச சுவாமிகள் மேட்டுக் குப்பத்தில் ஆசிரமம் அமைத்து அன்னதான ஆதீனமாகத் திகழ்கிறார்.

சமரச சன்மார்க்க நெறியினைப் பரப்பி, மரணமிலாப் பெருவாழ்விற்கு வழிகூறிய அருள்பிரகாச இராமலிங்க வள்ளலாரைப் பற்றிய பல நூல்களை எழுதி வெளியிட்டு தம் ஆசிரமத்தில் இருந்தே பணி செய்து வருகிறார் தவத்திரு ஊரன் அடிகள். 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து அற்புதங்கள் பல புரிந்து சன்மார்க்கத்தை வளர்த்த வள்ளல் பெருமானை வம்பிக்கிழுத்து நீதி மன்றத்திற்கு இழுத்து, பின்னர் வருந்தி பொறுத்தருள வேண்டினார் ஆறுமுகநாவலர். வெள்ளைக்கார நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

பினாகபாணி என்னும் அறிஞர் வள்ளலாரைச் சிறுமைப்படுத்த எண்ணி அவரிடம் பல வினாக்களைத் தொடுத்து திகைக்க வைத்துவிட வேண்டும் என்று வள்ளலாரிடம் வந்தார். நோக்கத்தை முன்னரே உணர்ந்த வள்ளலார் தம்மிடம் பாடம் கேட்க வந்த சிறுவர்களுள் ஒருவரைக் காட்டி உம் வினாக்களுக்கு இச்சிறுவனே விடையளிப்பான் என்றவர் சிறுவனை அவனுள் புகுந்து இயக்கினார். அச்சிறுவன் வந்தவர் கேட்க எண்ணிய வினாக்களை முதலில் கேட்டு அதற்கான விடைகளையும் அவனே சொல்ல அதிர்ந்து போனார் பினாகபாணி. பின்னர் தம் தவற்றை உணர்ந்து வள்ளல் பெருமானிடம் பணிவுடன் மன்னிப்புக் கோரினார்.

பள்ளியில் சிறுவனாகச் சேர்ந்த அன்றே 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்'' என்று சொல்லிக் கொடுத்த ஆசிரியரிடம் எதிர்மறை வாசகம் வேண்டாம்; நேர்மறை வாசகத்தில் சொல்லிக் கொடுங்கள் என்று வேண்டினார் வள்ளல் பெருமான். சற்றே சினங்கொண்ட ஆசிரியர் ''நீதான் சொல்லேன் பார்ப்போம்!''

என்ன ஒருமையுடன் நினது
மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு
கலவாமை வேண்டும்'' என்று பாடினார்.

திகைத்து அஞ்சிய ஆசிரியர் இவரை இவர் தம் தமையனார் சபாபதிப் பிள்ளையிடம் ஒப்படைத்து இத்திருவருள் பெற்ற குழந்தைக்குச் சொல்லித்தரும் தகுதி தமக்கில்லை என்று கூறிச் சென்றுவிட்டார்.

திருத்தணி முருகன் அருளால் ஓதாமல் கற்றவர் வள்ளல் பெருமான். ஆறு திருமுறைகளை அருளிச்செய்த அவர் பாடல்கள் நாற்பதினாயிரம், உரை நடைபேறு எழுதியுள்ளார். ''எல்லாமே'' சீவகாருண்ய ஒழுக்கத்தை மேம்படுத்திடவே! ''பெற்ற தாய்தனை மகன் மறந்தாலும், நமசிவாயத்தை நான் மறவேனே'' என்பது நம் ஒவ்வொருவருக்கும் வள்ளலார் உபதேசித்த ஒன்று.

திருக்குறளையும், திருமந்திரத்தையும் தலையில் சூடிக்கொண்டவர். இவ்விரு நூல்களுக்கும் பெரும் பல்கலைக்கழகம் ஒன்று காண வேண்டும் என்று எண்ணியவர். இவற்றில் சொல்லாத அறமும் நீதியும் வேறெதிலும் சொல்லப்படவே இல்லை என்று உரக்கக் கூறியவர். திருஞான சம்பந்தரைத் தம் குருவாகக் கொண்டாடியவர். 550க்கும் மேற்பட்ட மூலிகைகளைப் பற்றிக்கூறி அவற்றின் மூலம் பிணி தீர்க்கும் முறைகளைக் கூறிய குணச்சித்தர்.

கண்மூடிப்பழக்கம் யாவும் மண்மூடிப் போக வென்று சாபமிட்டவர். வெட்டிச்சாத்திரங்களும், வீண்சடங்குகளும், போலிச் சம்பிரதாயங்களும் வேண்டாம்; அதை அவசியமற்றவை என்று மன்றாடி மக்களைக் கேட்டுக்கொண்டவர். இத்தகைய பெருமை கொண்ட வள்ளலார் சிதம்பரம் அருகேயுள்ள மருதூரில் 05–10–1823–இல் அவதரித்தார். இளமையிலேயே தந்தை இராமையாப் பிள்ளையை இழந்தவர். இவருக்கு 12 வயது ஆகும்பொழுது, தமையனார் ஒரு சொற்பொழிவிற்குச் செல்ல இயலாத நிலையைச் சொல்லச் சென்ற இவர் அக்கூட்டத்தில் ஞானசம்பந்தரின் தேவாரப்பாடலுக்கு விளக்கமளித்துப் பேருரையாற்றியது யாவரையும் ஈர்த்தது. அதன் பின்னர் அவர் விருப்பம்போல் இருக்க அவர் அனுமதிக்கப்பட்டார்.

மக்கள் துயர் நீக்கும் மனத்திற்கான மருந்துகளை வழங்கக் கடை விரித்தும் வாங்கிக்கொள்ள வருவார் இலாமையால் தம் கடையைக் கட்டிக்கொண்ட வள்ளலார் 30–01–1874 ஸ்ரீமுக ஆண்டு தைத்திங்கள் பூசம் அன்றிரவு மணி 12க்கு மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் திருக்காப்பிடச் சொல்லிவிட்டுத் தம்மை மறைத்துக் கொண்டார். ஓராண்டு கழித்து கதவைத்திறந்து பார்த்தபொழுது அவ்வறையில் ஒன்றுமில்லை என்பது வரலாற்றுச் சான்று. வள்ளல் பெருமான் ''அகத்தே கருத்துப் புறத்தே வெளுத்திருந்த உலகரைத் திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்; அருளைப் பெற்றேன்'' (–6 (இ) 28 உற்ற துரைத்தல் 9) என்று தாம் வந்த நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அருட்பெருஞ்சோதி ஞானசித்தராகிய இராமலிங்க வள்ளலார் ஓர் இறைதூதர் என்பது வெட்ட வெளிச்சம்.

மனுமுறை கண்ட வாசகத்தில் கொடும் பாவங்களை நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ? எனத் தொடங்கி தெய்வமிகழ்ந்து செருக்கடைந்தேனோ? என்று 42 பாவங்களைப் பட்டியலிட்டுள்ளார். சோழ மன்னன் மனு திருவாரூரில் தன் மகன் ஓட்டிச் சென்ற தேரில் அடிபட்டு உயிர்விட்ட கன்றின் தாய்ப்பசுவின் கண்ணீரைக் கண்டு தான் செய்த பாவம் என்னவோ என்று புலம்புவது நாம் ஒவ்வொருவரும் புலம்பும் நிலையை உருவாக்குகிறது முழையூர் சதாசிவம் பாடக் கேட்பின் கண்களில் பெருகும் கண்ணீரை தடுக்கவே முடியாது. அவ்வளவு உருக்கம். இவர் சித்தியடைந்தது தைத்திங்கள் முழுநிலா பூசத்தன்று. தைப்பூசம் புன்பநாள். தமிழர்கள் கொண்டாடும் ஒரு தெய்வீகத் திருவிழா. தைப்பூசம். ''தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்'' என்று திருமயிலைப் பதிகத்தில் திருஞானசம்பந்தர் பாடுவார். அத்தகைய பூசத்தன்று சிவாலயங்கள், முருகன் ஆலயங்களில் எல்லாம் பெருவிழா நடக்கும்.

எதிர்வரும் சனவரி 18, 2022, செவ்வாய்க்கிழமையன்று தை–5–இல் முழுப்பூசமாக அமைகிறது. அன்றுதான் சோதிதரிசனம். வடலூர் சென்று அல்லது வீட்டிலேயே அவர் படத்தை வைத்து வணங்கிப் போற்றி வாழ்த்துவோம். ஞான விளக்கமும், நல்லருளும் பெறுவோம்.

உயிர் உறவுகளைப் பேணுவோம்.

நம் மண்ணுக்கானவர்; நம் மரபிற்கானவர்; நம்மொழிக்கானவர்; நம்மினத்திற்கானவர்; நம் சமயத்திற்கானவர் வள்ளலார்.

நாம் அவரைப் போற்றி செய்வோம். அருட்பெருஞ்சோதியான தனிப் பெருங்கருணையைப் பெறுவோம்

வருந்துகிறோம்

சென்னை, சிட்லபாக்கம், விளாகம் திரு. S. சுந்தரேசன் பிள்ளை மற்றும் திரு. S. சிவகுமார் அவர்களது சகோதரியும் திரு. C. ரவிக்குமார் அவர்களது துணைவியாரும் – திருமதி உமா மகேஸ்வரி செந்தில் மற்றும் அனுஷ்யாதேவி அருள் சிவமுருகன் தாயாருமான திருமதி R. லலிதா அவர்கள் 20.3.2022 அன்று சென்னை வேளச்சேரியில் இயற்கை எய்தினார்கள். அவரது பிரிவால் வாடும் அன்னாரது குடும்பத்தினருக்கு சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

इंडियन बैंक Indian Bank

इलाहाबाद ALLAHABAD

HOME LOAN

Cell : 93458 04981 / 79040 62298

➤ Housing Loan ➤ Repairs / Renovation ➤ Extension of Building ➤ Commercial Building

➤ Take over Loans from Other Banks ➤ Mortgage Loans ➤ NRI Housing Loans ➤ Car Loans

Business Loans, OD, OCC, Against Property, MSME Loans

Ln.T.RAMAMOORTHY,

Home Loan Counselor, indian Bank, Chidambaram

E.mail : matrimonycdm@gmail.com

திருவிளையாடற் புராணம் - அங்கம் வெட்டின

படலம் – 27.

"சிவகாமியின் செல்வன்"

டாக்டர். தி. பாலசுப்பிரமணியன்.

வாளாசிரியனும் நன்றி கொன்ற சித்தனும்.

குலோத்துங்க பாண்டியனின் குவலயம் போற்றும் செவ்விய செங்கோல் ஆட்சி மக்கள் வாழ்வில் மகிழ்ச்சி. எங்கும் வளத்தின் எழுச்சி. எதிலும் மனத்தின் அமைதி. அத்தகைய காலத்தில் அந்நிய தேசத்தவன் ஒருவன் வாழ வழி தேடி மதுரை வந்து குடியேறினான். வயதில் முதிர்ந்த அவன் வாட்போரில் வல்லவன். வாழ்வாதாரத்திற்காக வாள்வீச்சு கலையை வாலிபர்களுக்குக் கற்பித்தான். அதன் வழி வந்த வருவாயில் வாழ்ந்து வந்தான். வாழ்வளித்த வள்ளல் சோமசுந்தரக் கடவுளை நாளும் நன்றியுடன் சென்று வழிபட்டான்.

வாள் பயிற்சியளிப்பதில் வல்லவனான அவன் எண்ணிலா இளைஞர்களைத் தன்பால் ஈர்த்ததில் வியப்பேதுமில்லை. அத்தகைய பயிற்சி மாணவர்களுள் ஒருவன் 'சித்தன்', ஆகூழின் ஆற்றலால் அவன் வாள் வித்தையில் சிறப்பாகக் கற்றுத் தேறினான். திறமையின் காரணமாக அவன் மதிப்பு உயர்ந்தது. இதனால் அவனுள் செருக்கும் வளர்ந்தது. தனக்குக் கற்பித்த ஆசிரியனுக்குப் போட்டியாகத்தானும்ஒருவாட்பயிற்சிப் பட்டறையைத் தொடங்கினான். வாள் சிலம்பப் பயிற்சிகளைக் கற்பித்தான். வருவாய் மிகுந்தது. பேராசையும் மிகுந்தது. தனக்குக் கற்பித்த ஆசிரியரை நகரை விட்டு வெளியேற்றிவிட்டால் தன் வருவாய் இரட்டிப்பாகுமே என்று கணக்குப் போட்டான். தன் ஆசிரியரிடம் பயிலும் மாணவர்களைத் தன்பால் வருமாறு ஆசைகாட்டித் தூண்டினான். ஆசிரியருக்குத் தொடர்ந்து மறைமுகமாகப் பல இடையூறுகளை மேற்கொண்டான்.

இவ்வாறு இருக்க சித்தன் ஒரு நாள் தன் ஆசிரியன் இல்லில் இல்லாத வேளை பார்த்து அங்கு சென்றான். அவன் மனைவியாரிடம் 'இடன் உண்டோ, இடன் உண்டோ' என்று சற்றும் அச்சம் கூச்சமின்றி கேட்டுக் கேட்டு நின்றான். முற்றிலும் வெறுத்த அம் மாது ஏதும் பேசாமல் வாயடைத்து நின்றாள். ஒன்றும் நடவாது என்றெண்ணிய அவன் வெளியேறினான். பிறிதொருநாள் வந்தான். சிற்றின்பம் சிரமேறிய சித்தன் குருவின் மனைவியின் கையைப் பற்றி இழுத்தான். கற்பரசியான அவள் அவனை வெளியே தள்ளிக் கதவைத் தாழிட்டாள். இந்த நிகழ்ச்சியை அவள் தன் கணவனிடம் சொல்லவில்லை. ஆனால் ஆலவாய் அண்ணலான சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்டு அழுதாள்.

சோமசுந்தரர் சித்தனைப் போருக்கழைத்தல்.

கொன்றை அணிந்தவனும், கொல்புலித்தோல் உடுத்தியவனும் சடையனும், பக்குவிக்களுக்கு உணர்த்துபவனும், புண்ணியனும், அருள் வடிவினனாகிய சோமசுந்தரக் கடவுள் நீசனாகிய சித்தனைத் தண்டிக்கத் திருவுள்ளம் கொண்டார். சித்தனின் ஆசிரியனைப் போல் வடிவெடுத்தார். சித்தனிடம் சென்று "சித்தா ! காளையைப் போன்ற நீயும், மூப்புடைய யாமும் வாட்போர் புரிந்து நம் தம் வலிமைகளை அளந்தறிவோம். நாளை நகரின் புறத்தே வருக. நாமும் அங்கு வருவோம். மோதுவோம்!" என்றார். சித்தன் மகிழ்வுடன் அதனை ஏற்றான். நன்மை என்று உவந்தான். போரிட உடன்பட்டான்.

நன்றி கொன்ற சித்தன், உடன்பாட்டின்படி வாளையும், கேடகத்தையும் கையில் கொண்டு, சிவனின் ஆணைக்கு உட்பட்ட துர்க்கையையும், வாட்படையையும் வழிபட்டான். நகரின் புறத்தேயுள்ள போர்க்களத்தையடைந்தான். இறைவனாரும் வீரக்கழல் அணிந்து கச்சை கட்டி, திருவெண்ணீறு அணிந்து வாளையும் கேடகத்தையும் கைகளில் கொண்டு சோமசுந்தரப் பெருமான், ஆசிரியன் உருவில் களத்திற்கு வந்தான். அங்கு நின்ற கீழ்மகனாகிய சித்தன் எதிரே வந்தான்.

இறைவனும் சித்தனும் போர் புரிதல் :

அரிமா ஒன்றும் நரியும் போரிடத் தயாராவது போல் காணப்பட்டது. வெள்ளிய பிறை முக்கண், நான்கு தோள்கள், நீலகண்டம் இவற்றை மறைத்து வந்த முதிய வாளாசிரியனாகிய இறைவனும் சித்தனும் போரிடத் தொடங்கினர். இருபது நாழிகை இருவரும் போரிட்டனர். முன்னேறுதல், பின்வாங்கல், எச்சரித்தல், எக்காளமிடல், வலமும் இடமும் சுழன்று சுழன்று திரும்பல், வெகுளல், நகைத்தல், வாதம் பேசுதல் வாள்வெட்டினை மார்பில் ஏற்றல் என எண்ணிலா சாகசங்கள் தொடர்ந்தன.

சிவன் சித்தனின் அங்கங்களை வெட்டுதல் :

வாளாசிரியன் வடிவில் வந்த சிவன் உரத்த குரலில் "உன் குரு பத்தினியை விரும்பிய உள்ளத்தையும், அவளிடம் தகாத பேச்சுப் பேசிய உன்

நாவையும், தொட்ட கைகளையும், விருப்புடன் நோக்கிய கண்களையும் காத்துக் கொள்வாய் சித்தா'' என்றனர். சொல்லியவாறு சித்தனின் அங்கங்களையெல்லாம் வெட்டி வெட்டி எறிந்து இறுதியில் தலையையும் வெட்டி வீழ்த்திய சிவன் மறைந்தருளினார்.

சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலை அனைவரும் அறிதல் :

அப்போரினைக் கண்ட மாணவர்கள் தங்களின் முதிய ஆசானைக் காணாமல் வீட்டிற்குச் சென்றனர். ஆசிரியரின் மனைவியிடம் வினவினர். அவர் தம் கணவர் திருக்கோயிலுக்குச் சென்றனர் என்றார். அப்பொழுது குரவன் (ஆசிரியன்) திரும்பி வந்தான். மாணவர்கள் குரவனை நோக்கி ''குருவே! களத்தில் சித்தனுடன் போரிட்டு அவன் அங்கங்களை வெட்டி வெற்றி பெற்றீரே! அதன்பின் உம்மை நாங்கள் காணவில்லை. எங்கு சென்றீர் ? என்றனர்.

அதனைக்கேட்ட ஆசிரியன் வியந்தனன். ''நான் சித்தனை வெட்டினேனா! இல்லையே'' என்றனன். பின்னர் இதனைச் செய்தது சோமசுந்தரக் கடவுளின் திருவுளச் செயல்தான் என்றனன்.

அப்பொழுது ஆசிரியன் மனைவி வெளியே வந்தனள். ''இடன் உண்டோ'' என்றது ''தன் கையைப் பிடித்து இழுத்தது. தான் அவனை வெளியில் தள்ளித் தாழிட்டது, பெருமானிடம் முறையிட்டது என அனைத்தையும் கூறினாள். இவ்வம்மையார் சொன்னதையெல்லாம் சொல்லிச் சொல்லியே வீரர் சித்தனைக் கொன்றனர் என்றனர் மாணவர்கள்.

இவை உண்மையெனில் இந்த நிகழ்வு சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலே என்ற ஆசிரியன் தன் துணைவியுடன் திருக்கோயில் சென்று பெருமானை வணங்கினான். பெருமானே! அயன் மாலால் அறியவே முடியாத உனது திருவிளையாடலை அறிவற்றவனாகிய என்னால் எப்படி அறிய முடியும். உனது திருவிளையாடலை என்னென்பேன்'' என்று துதித்தனன்.

பாண்டியன் வாளாசிரியன் முதலானோரைச் சிறப்பித்தல் :

திங்கள் மரபில் வந்த குலோந்துங்கப் பாண்டியனும் மதுரை வாழ் மக்களும் பெருமானின் திருவிளையாடலை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். அடியவருக்கு எளியவராகிய இச் சோமசுந்தரக் கடவுள் ''பரதேசிக் காவலர்'' பரதேசி – வேற்று நாட்டவன். ஆதரவின்றி இருந்த வாளாசிரினை இறைவன் பாதுகாத்தமையால் ('பரதேசிக் காவலர்') என்றழைக்கப்பட்டார்.

மன்னனும் மற்றையோரும் வாளாசிரியனையும் அவன் மனையாளாகிய மாணிக்க மாலையையும் யானையின் மீதேற்றி நகர் வலம் செய்வித்துச் சிறப்பித்தனர்.

குலோத்துங்கன் சிவகதி அடைதல் :

குலோத்துங்க பாண்டியன் தன் மகன் அனந்தகுண பாண்டியனுக்கு முடி சூட்டினான். அரசை ஒப்படைத்தான். நிலையானது நிலையற்றது எதுவென உணர்ந்தான். பற்றினை விடுத்தான். ஐம்புலன்களின் ஆளுகையினின்றும் நீங்கினான். திருவருள் வழியே சென்றான். ஆணவமல வலி அகன்றது. சிவனின் பேரின்ப வீட்டினைச் சென்றடைந்தான்.

குருநிந்தையும், அவர் குடும்பம் நிலை குலையவும் எண்ணுதல் கொடும் பாவம், அதன் தண்டனை அதி கொடுமையானது.

ஜெய்ஸ்ரீ தகவல் மையம்

19/2 வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிக்கட்டணம் மட்டும் பெறப்படும். பதிவு செய்தவர்களுக்கு மட்டும் பதிவு கார்டு கொடுக்கப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவுக் கட்டணம் ரூ. 200/- மட்டும். எங்கள் இப்பணி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அலுவலக நேரம் சனிக் காலை 10.00 மணி முதல் 12.30 வரை, மாலை 4.30 மணி முதல் 7.30 வரை, மற்ற நாட்களில் மாலை 4.30 முதல் 7.30 வரை, ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சத்தியபால்**

கடிதத் தொடர்பு முகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை-609 001.

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

நங்கநல்லூர்

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 20–3–2022 அன்று நங்கநல்லூர் ''வாழ்க வளமுடன்:'' சிற்றரங்கில் ''மகளிர் தின'' விழாவுக்கு முன்னதாக நடைபெற்றது. சங்கத் தலைவரது வரவேற்புரையுடன் கூட்டம் துவங்கியது. திருமதி. மங்கையர்க்கரசி அம்மாள் – வயது 83, (24–2–2022) மறைவிற்கும் கன்னியாகுடி அகோரம் பிள்ளை – வயது – 82, (28–2–2022) அவர்கள் மறைவிற்கும் சங்க மேனாள் செயலாளர் R. சீனுவாசன் பிள்ளை கடந்த 19–3–2022 அன்று மரணமடைந்ததற்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. R. சீனுவாசனின் சங்கப் பணிகள் குறித்து பாராட்டி பேசியும் புகழஞ்சலியும் செலுத்தப்பட்டது.

பிப்ரவரி மாத கூட்ட அறிக்கை செயலாளர் திரு. G. தியாகராஜன் அவர்களால் வாசிக்கப்பட்டது. பொருளாளர் திரு. V. செல்வக்குமார் அளித்த நிதிநிலை அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. சென்ற மாத கூட்டத்தில் தீர்மானித்தபடி பெரும்பாக்கத்தில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்துக்கு கடந்த 13–3–2022 அன்று தலைவர், செயலர் உள்ளிட்ட ஐவர் அடங்கிய குழு நேரில் சென்று மளிகை பொருள்கள் மற்றும் துணிமணிகள் வழங்கி வந்தது ஒரு நிறைவான நிகழ்வு. உதவிக்கரம் நீட்டிய தொண்டு உள்ளங்களுக்கு சங்கத்தின் நன்றி.

17–4–2022 அன்று நடைபெற இருக்கும் ''கார்காத்தார் தொழில் முனைவோர் பேரவை'' KBF-ன் சிறப்பு கூட்டத்தில் நமது வட்டாரத்தில் உள்ள தொழில் முனைவோர் அனைவரும் பதிவு செய்து கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆன்மீக சுற்றுலா செல்வது பற்றி விவாதிக்கப்பட்டது; முடிவு எதுவும் எட்டப்படாமல் அடுத்த கூட்டத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது. 2022–ம் ஆண்டில் இதுவரையில் புதிய உறுப்பினர்களாக சங்கத்தில் இணைத்துக்கொண்ட அன்பர்களுக்கு வாழ்த்துக்கள்.

செயற்குழு உறுப்பினர் திரு. S. சம்பத்குமார் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

– க. சரவணன், தலைவர்.

நங்கநல்லூர் மகளிரணி

''மகளிர் தின விழா'' 20–3–2022 அன்று ''வாழ்க வளமுடன்'' சிற்றரங்கில் வெகு சிறப்பாக இனிதே நடைபெற்றது.

5.00 மணி அளவில் பேபி கலைமுகிழ் அவர்களது இறைவணக்கபாடலுடன் மகளிர் அணி தலைவி திருமதி. கலையரசி ராஜசேகரன் தலைமையில் சிறப்பு விருந்தினர்களுடன் மூத்த மகளிரும் மங்கல விளக்கேற்றிட விழா இனிதே துவங்கியது.

சிறப்பு விருந்தினர்களாக Dr. நிதர்சனா கண் மருத்துவர் மற்றும் திருமதி. நிர்மலா ராஜவேல், தமிழ் ஆர்வலர் ஆகியோர் கலந்து கொண்டு விழாவுக்கு சிறப்பு சேர்ந்தனர். திருமதி. கிருஷ்ணவேணி செந்தில்நாதன் வரவேற்புரை வழங்கிட அணி தலைவி கலையரசி ராஜசேகரன் தலைமை உரை ஆற்றிட அணி செயலாளர் வனஜா சரவணன் ஆண்டறிக்கை வாசித்த வகையில் விழா தொடங்கியது.

அணி தலைவி தனது தலைமை உரையில் மகளிர் அனைவரும் உடல் நலம் பேணுவதின் அவசியம் குறித்தும், சுய உதவி குழு தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கமாக உரையாற்றியது சிறப்பு. 2020, 2021 ஆண்டுகளில் மகளிரணியினரின் செயல்பாடுகள் விரிவாக குறிப்பிட்டு உரை நிகழ்த்திய மகளிரணி செயலாளர் திருமதி. வனஜா சரவணன் அவர்களுக்கு பாராட்டுகள். சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கி பொன்னாடையும் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

தொண்டுள்ளத்தை தன்னகத்தே கொண்ட திருமதி. நிரஞ்சனா கணேஷ் அவர்களது சமுதாய தொண்டினையும், சங்க மகளிர் அணி இணைச்செயலர் திருமதி. V. கிருஷ்ணகுமாரி சமுதாயப்பணியிலும் கலைப்பணியிலும் தன்னை இணைத்துக் கொண்டு ஆற்றி வரும் சமூக பணிகளுக்கு மேலும் மெருகூட்டுகின்ற வகையில் பல்வேறு அமைப்புகளால்

விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருவதை நமது சங்கமும் மகளிர் அணியும் வரவேற்று மகிழ்கின்ற வேளையில், அவர்களுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில் இத்தருணத்தில் நினைவுப்பரிசு வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

சங்க மகளிர் அணியினர் கலந்து கொண்ட Orange Book of World Records மற்றும் தமிழ் அமெரிக்க T.V. நிகழ்ச்சி, நோபல் புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்ட்ஸ், வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளுக்காக பெறப்பட்ட சான்றிதழ் மற்றும் பதக்கம் சங்க பொருப்பாளர்களால் வழங்கப்பட்டது.

குழந்தைகளதுகலைநிகழ்ச்சியும்நடைபெற்றது. குடும்பத் தலைவிகளின் குடும்ப பணிச்சுமைகளை உணர்த்துகின்ற வகையில் மகளிரணியினர் தயாரித்தளித்த 'ஔவை சண்முகியின் ஒரு நாள்'' நாடகம் ''குலுக் குலுக் குந்தளா'' நகைச்சுவை நேர்காணல் நிகழ்ச்சி இரு பாலாரும் கலந்து கொண்ட ''பாட்டுக்கு பாட்டு'' போன்ற நிகழ்ச்சிகள் வெகுவாக ரசித்து பாராட்டபெற்றது.

கலந்து கொண்ட அனைத்து மகளிருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. திருமதி. ஓவியா அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறைவுற்றது.

மகளிர் அவரவர் தம்வீட்டில் தயாரித்துகொண்டு வந்திருந்த உணவு வகைகள் அனைவருக்கும் பரிமாறப்பட்டு ருசித்து சாப்பிட்டு மகிழ்ந்து அனைவரும் பாராட்டிச் சென்றது மகளிர் அணிக்கு மேலும் வலு சேர்த்தது.

– த. வனஜா,
செயலர், மகளிரணி.

அண்ணாநகர்

மார்ச் மாத சங்க கூட்டம் 13–3–22 அன்று கொரட்டூர் சங்க குடியிருப்பில் தொடங்கி நடைபெற்றது. கூட்டத்தில் மொத்தம் 14 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்த கூட்டத்திற்கு சங்கத்தில் புதிதாக இணைந்த திரு. கோவிந்தராஜன் – உமா தம்பதியினர் அவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ள கூட்டத்திற்கு வந்திருந்த மற்ற எல்லோரும் தங்களை சுய அறிமுகம் செய்து கொண்டார்கள். மகளிரணி தலைவி திருமதி. மங்கலம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பங்குனி மாத அமாவாசை அன்று சென்னை புழலில் உள்ள திருமூலநாதர் சிவன் கோவிலுக்கு சென்று சாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து அன்னதானம் செய்து வரலாம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சங்கத்திற்கு பான்கார்டு பெறப்பட்டதற்கு தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. ஆண்டு விழாவை அக்டோபர் 2 அன்றே நடத்தலாமா அல்லது முன்கூட்டி நடத்தலாமா என ஆலோசனை செய்யப்பட்டது.

திரு. ஆர்.எஸ். பாலபிரகாஷ் அவர்கள் நன்றியுரையாற்ற கூட்டம் இனிதே முடிவு பெற்றது. நன்றி !

– என். ஆனந்த கணபதி,
செயலர்.
9094682811

பெருங்களத்தூர்

சங்க செயற்குழு கூட்டம் 24.2.22 மற்றும் 28.03.2022 தேதிகளில் சிவாலி ஹாலில் தலைவர் திரு. C. குழந்தைவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிப்ரவரி மாத கூட்டத்தில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ், பரிசு வழங்கவும், 70–வது பூர்த்தியடைந்த பெரியவர்களை கௌரவிக்கவும் விளக்கு பூஜை, மற்றும் சந்தா வசூல் பற்றி விவாதிக்கப்பட்டது. மார்ச் மாத கூட்டத்தில் 2021 மற்றும் 2022–ம் ஆண்டிற்கான சந்தா தொகையினைப் பெறவும், கே.கே. நகர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி உறுப்பினர்களிடமிருந்து 2022–ம் ஆண்டிற்கான சந்தாதொகையினை திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் வசூல் செய்தமைக்கு பாராட்டி பதிவு செய்யப்பட்டது.

விளக்கு பூஜை 2022 ஏப்ரல் 16 சனிக்கிழமை சித்ராபௌர்ணமி அன்று நடத்தவும் இதற்காக பொறுப்பாளர்களாக திருமதி. சாந்தி மற்றும் திருமதி. உமா அவர்களை நியமிக்கவும், சங்கத்தின் சார்பில் ஒரு நாள் ஆன்மீக சுற்றுலா செல்லவும், சங்கத்தின் ஆண்டு விழாவினை மே மாதம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சங்க உறுப்பினர் பாபு அவர்களின் தாயார் திருமதி. சுலோச்சனா அம்மாவின் மறைவிற்காக இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. K. மோகன்ராஜ் அவர்கள் செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு சங்க வளர்ச்சிக்காக பல கருத்துரைகளை வழங்கினார்கள். திரு. K. நெடுஞ்செழியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

- C. குழந்தைவேல்,
தலைவர்.

கடலூர் :

செயற்குழுக்கூட்டம் சங்கக் கட்டிடத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் துவங்கியது. கட்டிடக்குழுத் தலைவர் திரு. Er. பிறையோன் மற்றும் கௌரவத்தலைவர் Dr. T.S. விசுவநாதன் முன்னிலை வகித்தனர். முற்பகல் சிவநேயச் செம்மல் திரு. தங்க. சிவப்பிரகாசம் தலைமையில் திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது. திருமதி. பானுமதி ராஜதுரை அவர்கள் முற்றோதல் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்து நடத்தினார். தேநீர் மற்றும் மதிய உணவு சங்கத்தின் துணைத்தலைவர் திரு. S. இராஜதுரை – பானுமதி தம்பதியினர் முற்றோதலில் கலந்து கொண்ட அனைவருக்கும் அளித்தனர்.

கூட்டு செயற்குழு கூட்டம் பிற்பகலில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஏப்ரல் 2022– முதல் விழா நடத்துபவரிடம் பராமரிப்புதொகை பெறுவது எனவும், சங்க உறுப்பினர்களுக்கு பராமரிப்பு தொகையில் ரூ. 1000/– சலுகை வழங்கவும், சங்க கட்டிடத்தை வண்ணப்பூச்சு செய்து பராமரிக்கவும், 9–5–22 அன்று பொதுக்குழுவை கூட்டி, புதிய நிர்வாகிகளை தேர்வு செய்யவும், தமிழ் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் நடத்துவது எனவும், 2022– ஆண்டிற்கான சந்தாவசூல் செய்யவும், சங்க உறுப்பினர்கள் 9 பேருக்கு கல்வி உதவித்தொகை வழங்கிய CREW அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு நன்றியும், தெரிவித்து தீர்மானம் இயக்கப்பட்டது. சங்க திருமண அமைப்பாளர் சிவநேயச் செல்வருமான சுவாமிகள், தங்க சிவப்பிரகாசம் அவர்கள் உரைநடையில் அருள்மிகு கருந்தடற்கண்ணி உடனுறை சிவக்கொழுந்தீஸ்வரர் ஆலயத்தின் தலபுராணம் 15–4–22 அன்று தருமை, திருவாடுதுறை, சூரியனார் கோவில் ஆதீனங்கள் மற்றும் அறநிலைய துறை அலுவலர்கள் பங்குபெரும் விழாவில் வெளியிடப்படுகிறது. அந்த நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ளவும் ரூ. 70/– கட்டணம் செலுத்தி புத்தகம் பெறவும், இரவு அன்னதானம் அளிக்கப்படவும் உள்ளது என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- T. விவேகானந்தன், தலைவர்.

9942429789

காட்டுமன்னார் கோயில் ஒன்றிய சங்கம் :

06.03.2022 ஞாயிறு அன்று சங்கத்தின் செயற்குழு கூட்டம் செயற்குழு உறுப்பினர் திரு. N. செல்வரங்கம் இல்லத்தில் நடைபெற்றது. செயலர் திரு. V.R. ஞானம் அனைவரையும் வரவேற்றார். தலைவர் திரு. பத்மனாபன் கூட்டத்திற்கு வருகை புரிந்த மூத்த உதவித் தலைவர் திருமதி. S. லலிதா அம்மையாரை பாராட்டி இவரைப் போல் அனைவரும் கூட்டத்திற்கு வருகை புரிய வேண்டும். அந்த ஆர்வம் எல்லோருக்கும் வரவேண்டும் என்பதனை வலியுறுத்தினார். துணைத்தலைவர் திருமதி. S. லலிதா அம்மையார் சங்க நிகழ்வுகளை பாராட்டி பேசினார். பொருளாளர் திரு. V. இராமகிருஷ்ணன் நாகரீக உலகில் போரை தவிர்க்க வேண்டும். எந்த பிரச்சினையையும் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றார். திருமதி. S. லலிதா அம்மையாரின் முளை கட்டிய பயிர் சுண்டலும் திரு. N. செல்வரங்கம் குடும்பத்தாரின் சிற்றுண்டியும் அனைவரையும் மகிழ்ச்சி கொள்ள வைத்தது. திரு. T. குமார் அவர்களின் நன்றியுரைக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- V.R. ஞானம், செயலர்.

9444876164

சீர்காழி :

சங்க செயற்குழு கூட்டம் 05–03–2022 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர். திரு. S. முருகன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது உரையில் திரு. C. அகோரம் பிள்ளை, திரு. R. சரவணன் பிள்ளை இருவரையும் செயற்குழு உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. செயலர் திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை ஆண்டு விழா மார்ச் 20–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆண்டு விழாவை சிறப்பாக நடத்த செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை அளித்து உதவிடுமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும் நடந்து முடிந்த சீர்காழி நகராட்சி தேர்தலில் நமது சமூகத்தைச் சார்ந்த திரு. தம்பி M. சுப்பராயன் பிள்ளை மற்றும் திரு. S. ராமு பிள்ளை இருவரும் கவுன்சிலர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்கள். இதில் திரு. தம்பி. M. சுப்பராயன் பிள்ளை அவர்கள் நகராட்சி துணைத்தலைவராக (Vice Chairman) தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். இருவரையும் சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆண்டு மே மாதம் மங்கள சந்திப்பு நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பொருளாளர் திரு. S. பாலசுப்பிரமணியன் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

19-வது ஆண்டு விழா

சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் 19–வது ஆண்டு விழா கடைக்கண் விநாயக நல்லூர் எஸ்டேட் திருமண மண்டபத்தில் 20–03–2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி அளவில் C.M. டிரஸ்ட் தலைவர் திரு. M.A. சீனிவாசன் பிள்ளை அவர்கள் சங்க கொடியை ஏற்றி துவங்கி வைத்தார்கள். அடுத்து மகளிர் அணி தலைவர் திருமதி. B. விஜயலட்சுமி, செயலர் திருமதி. S. உமாதேவி பொருளாளர் திருமதி. M. லதா, திருமதி S. சுமதி, திருமதி. M. வளர்மதி ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றினார்கள். விளையாட்டுப் போட்டிகள் நடுவராக திரு. விஜய் மீனாட்சி, திரு. R. வெங்கடேசன் பிள்ளை, திரு. M.A. சீனிவாசன் பிள்ளை, திரு. T. செந்தில்குமார் பிள்ளை, திருமதி. G. ராஜேஸ்வரி, மற்றும் திரு. S. சேகர் பிள்ளை ஆகியோர் நடுவராக செயல்பட்டார்கள்.

மாலை 4.00 மணிக்கு செல்வி. A. கிருத்திகா அசோக் திருப்பங்கூர் இறைவணக்கத்துடன் தலைவர் திரு. S. முருகன்பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகளை துவங்கின. பதிவுத்துறையிலிருந்து சங்க பதிவு எண் 102/2019 என்று வழங்கப்பட்டுள்ளது. செயற்குழு உறுப்பினர் திரு. N. சோமசேகர் பிள்ளை அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். சங்க செயலர் திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் 2020 – 2021, 2021 – 2022 – ம் ஆண்டு அறிக்கையை வாசித்து பொதுக்குழுவில் ஒப்புதல் பெற்றார்கள். கொரோனா பாதிப்பால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட கார்குல குடும்பங்களுக்கு நிதி உதவி அளித்து நிவாரணம் வழங்கியது. கொரோனா பாதிப்பால் 18–வது மங்கல சந்திப்பு Online மூலம் நடத்தியது. தெய்வத்திரு. பொறிஞர். R. முத்துக்கிருஷ்ணன் பிள்ளை கல்வி உதவித்தொகை, CREW அறக்கட்டளை கல்வி உதவித்தொகை, திரு. K. பழனிவேல் பிள்ளை மகள் திருமணத்திற்கு கார்குல சொந்தங்கள் நிதி உதவி அளித்த தொகை மற்றும் C.M. டிரஸ்ட் அளித்த நிதி உதவித்தொகையை வைத்து மணமக்களுக்கு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கியது. மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்த உபகரணங்களை ஏற்பாடு செய்து கொடுத்த திரு. S. சுவாமிநாதன் பிள்ளைக்கு நன்றியினை கூறினார்கள். பொருளாளர் திரு. S. பாலசுப்பிரமணியன் பிள்ளை, சங்கத்தின் வரவு செலவு கணக்குகளை 2020 – 2021, 2021 – 2022 பேரவையில் வாசித்து ஒப்புதல் பெற்றார்கள். திரு. R. முரளிப் பிள்ளை அவர்கள் மாநில துணைத்தலைவர் திரு. ச. சண்முகம் பிள்ளை, திரு. V. அகோரமூர்த்தி பிள்ளை, திரு. D. பிரகலாதன் பிள்ளை, திரு. N. சோமசேகர் பிள்ளை அனைவரும் சங்க செயல்பாடுகள் பற்றி பாராட்டி பேசினார்கள். சிறப்பு பேச்சாளர் மதிப்பிற்குரிய திரு. பி. மணிகண்டன், தன் முனைப்பு பயிற்சியாளர் / பேச்சாளர் அவர்களுக்கு தலைவர் பொன்னாடை போர்த்தினார். செயலர் நினைவுப்பரிசை வழங்கினார். அதன் பின் விஜய் T.V. புகழ் சிறப்பு பேச்சாளர் "வாழ்வை வசந்தமாக்க" என்ற தலைப்பில் கார்குல மக்களின் பெருமைகளை எடுத்துரைத்தார்கள். அதன்பின் வெ. விஜயராகவன் – பூமா இணைந்து வழங்கிய "விஜய் மேஜிக் பேமிலி எண்டர்டைன்மெண்ட்ஸ்" ஷோவினை மிகவும் சிறப்பாக செய்தார்கள். இந்த மேஜிக் ஷோவை அறிமுகம் செய்து வைத்த சங்க செயற்குழு உறுப்பினர் திரு. A. ரவிப் பிள்ளை அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு, கண்கவர் பரிசுகளை வழங்கப்பட்டது. மாணவ மாணவிகளுக்கு குலுக்கல் முறையில் ஒருவர் தேர்வு செய்யப்பட்டு அவருக்கு (செல்வி. அன்னபூரணி பாலாஜி) பொறியாளர், திரு. T. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் வழங்கும் ஒரு கிராம் தங்க நாணயத்தை திருமதி. இந்திரா செல்வக்குமார் அவர்கள் வழங்கினார்கள். விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து கார்குல சொந்தங்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. இறுதியில் புதிய பொறுப்பாளர்களாக திரு. K. சுகுந்தவனநாதன் பிள்ளை தலைவராகவும், திரு. G. அமுதன் பிள்ளை செயலாளராகவும், திரு. C. அகோரம் பிள்ளை பொருளாளராகவும், தேர்வு செய்ததற்கு பொதுக்குழு தனது கரவொளி மூலம் ஒப்புதல் வழங்கியது. புதிய பொறுப்பாளர்கள் 01–04–2022 முதல் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வார்கள். இவர்கள் 01–04–2022 முதல் 31–03–2024 வரை இரண்டு வருடம் பதவி வகிப்பார்கள். பத்மாவதி நர்சரி மற்றும் மழலையர் பள்ளி விளையாட்டு மைதானத்தை விளையாட்டு போட்டிகள் நடத்த அனுமதி அளித்த அந்த பள்ளியின் தாளாளர் திரு. P. சரவணன் மற்றும் அதற்கு உதவிய திருமதி. பிச்சுமணி சாந்தி தம்பதியற்கு சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த ஆண்டு 'மே' மாதம் மங்கல சந்திப்பு நடத்துவது என முடிவு செய்யபட்டுள்ளது. ஆண்டு விழாவை சிறப்பாக நடத்த உறுதுணையாக இருந்த திரு. G. அமுதன் பிள்ளை, திரு. A. ரவி பிள்ளை, திரு. S. அருளரசன் பிள்ளை, திரு. R. செந்தில்சுரேஷ் பிள்ளை மற்றும் திரு. M. நடராஜன் பிள்ளை, ஆகியோருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். திரு. G. அமுதன் பிள்ளை அனைவருக்கும் நன்றி கூற விழா இனிதே நிறைவடைந்தது.

- K. சுகுந்தவனநாதன், செயலாளர்

மயிலாடுதுறை

செயற்குழு கூட்டம் சங்கக் கட்டிடத்தில் கூடியது.சங்கத்தலைவர் தலைமையேற்க மகளிர் அணி இறைவாழ்த்துப்பாட இளைஞர் அணிபொறுப்பாளர் வரவேற்பு நல்கிய பின் நகர சங்க செயலாளர் திரு. S. முருகேசன் மாதாந்திர அறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு. R. சந்திரசேகரன் அவர்கள் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்திற்கான வரவு செலவு அறிக்கையினை கூட்டத்தில் சமர்ப்பித்தார். அதற்கு செயற்குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

நகர சங்கத்தலைவர் திரு. S. அன்பழகன் பேசும் போது சங்க வளர்ச்சிக்கு மேனாள் மற்றும் இந்நாள் பொறுப்பாளர்கள் ஒத்த மனதுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார்.

மேனாள் தலைவர் திரு. R. பாலசுப்ரமணியன் அவர்கள் பேசும் போது சங்க கட்டிட வாடகை ரசீதில் "சங்க வளர்ச்சி நிதி" என்ற தலைப்பில் வசூல் செய்ய வேண்டும் என தெரிவித்தார். மேலும் மேனாள் தலைவர் திரு. சத்தியபால் அவர்கள் பேசும் போது சங்கத்தில் கூடுதல் விழா நடத்துவதற்கு செயற்குழுவின் ஒப்புதல் பெறுவது அவசியம் என வலியுறுத்திப் பேசினார். மேலும் சங்கத்தின் நிரந்தர செய்தி தொடர்பாளர் திரு. பா. சாமிநாதன் அவர்கள் பேசும்போது சங்கத்தில் உள்ள பொருட்களின் இருப்பு பட்டியல் இல்லை என்கின்ற நிலையில் புதிய பட்டியலை தயார் செய்து இருக்கும் பொருட்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள கேட்டுக்கொண்டார். மகளிர் அணியின் விழாவை (மார்ச்–8) அதனை ஒட்டி வரும் விடுமுறை நாளில் நடத்திட மேனாள் தலைவர் திரு. முருகையன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தீர்மானங்கள் :

மயிலாடுதுறை மாவட்டத்தில் சுகாதார துறையின் முதல் இணை இயக்குநராக பதவி உயர்வு பெற்ற மருத்துவர் திரு. N. சிவகுமார். M.D. அவர்களை பாராட்டியும் அடுத்து வரும் செயற்குழு கூட்டத்தில் நேரில் அழைத்து சிறப்பு செய்யவும்,

மகளிர் அணி சார்பில் வரும் ஏப்ரல் மாதம் 2–ம் தேதி நம் சங்க கட்டிடத்தில் நடத்த ஒப்புதல் வழங்கப்பட்டு அன்று வருகை தரும் நம் கார்குல சொந்தங்களுக்கு மதிய உணவு நகர சங்கத்தின் சார்பில் வழங்கவும்,

புதிய பொறுப்பாளர்களுக்கு நிர்வாகத்தில் வழிகாட்டுதலுக்காக மூன்று நபர்களை கொண்ட ஆலோசனை குழு அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பின் இளைஞரணி பொறுப்பாளர் ~~நன்றியுரை~~ கூற, ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதம் இறைவனடி சேர்ந்த நம் கார்குல உறவுகளுக்கு இரங்கல் தெரிவித்து ஒரு நிமிடம் மவுன அஞ்சலியும் செலுத்தப்பட்டு கூட்டம் நிறைவு பெற்றது.

- M.S. முருகேசன், செயலாளர்.

மயிலாடுதுறை மகளிர் அணி

குடியரசு தினத்தில் (26–01–2022) மகளிர் அணி ஏற்பாட்டில் பொருளாளர் சசிகலா தமிழ்தாய் வாழ்த்துப்பாட விழா துவங்கியது செயலாளர் காயத்ரி அனைவரையும் வரவேற்றார்.

தலைவர் பில்டெக் அருள்மொழி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றினார்கள். குடியரசு தினம் பற்றி திரு. G. முருகையன் மற்றும் தலைவர் திரு. அன்பழகன், கொடி ஏற்றும் முறை பற்றி செயலாளர் திரு. M, முருகேசன் எடுத்துக் கூறினார்கள். பள்ளி மாணவன் ஸ்ரீசாய்சரன் சுதந்திர வீரர்கள் பற்றி வீர உரை நிகழ்த்தி பரிசு பெற்றார்.

நகர சங்கம், மகளிர் அணி, இளைஞரணி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். திருமதி. வளர்மதி நன்றி கூற எல்லாரும் இணைந்து நாட்டுப்பண் இசைத்து வீர வணக்கம் செலுத்தினார்கள்.

- M. காயத்ரி, செயலாளர்.

செம்பொள்ளார்கோவில் :

சங்க கூட்டம் 06–3–22 ஞாயிற்றுக்கிழமை அன்று திரு. P. பாலசுப்ரமணியன் – வேம்பரசி ஆகியோர் இல்லத்தில் முன்னாள் மாநில துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் அவர்களது தலைமையில் நடைபெற்றது. இறைவணக்கம் திருமதி. தி. மீனலோச்சினி அவர்கள் பாடிடவும், வரவேற்புரை சி. மணிவண்ணன் ஆற்றிடவும் சங்க அறிக்கை மண்டல செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், சங்க வரவு செலவு அறிக்கை பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் வாசிக்கவும், சங்க வரவு செலவு அதனை ஏற்றது. எதிர்காலத்தில் நமது சங்க மகளிர்கள் ஒன்று கூடி பேசி மகளிரணி கூட்டம் ஏற்பாடு செய்யும்படியும், ஒன்றிய சங்க பொறுப்பாளர்கள் மற்றும் மண்டல செயலாளரும் ஒன்றாக கூடி பேசி ஒன்றிய சங்க கூட்டமும், நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும்படியும் கேட்டுக்கொண்டார்கள். மண்டல செயலாளர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒப்புரவு மாத இதழ் வரவழைத்து அந்த செய்திகளை அறிந்திட வலியுறுத்தி பேசினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக கூட்டத்திற்கு வருகை புரிந்தோர்க்கான பரிசு ஆண்களுக்கான பரிசு S. மதியழகன் மற்றும் பெண்களுக்கான பரிசு B. வேம்பரசிக்கும் குலுக்கல் முறையில் வழங்கப்பெற்றது. மேலும் சங்க சிறப்புத்தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை அவர்களது உடன்பிறந்த சகோதரர் தெய்வதிரு. மு. சிதம்பரம் பிள்ளை அவர்களது மகன் சி. விஜயகோபால் சென்னையில் 02–03–2022 அன்று அகால மரணம் அடைந்ததற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லதார் சார்பாக இரவு சிற்றுண்டி, விருந்து அளிக்க பெற்றது. கூட்டத்தில் சுமார் 35 நபர்கள் கலந்து கொண்டார்கள். திரு. P. பாலசுப்ரமணியன் அவர்கள் நன்றி கூறிட இரவு சுமார் 9.00 மணி அளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன், செயலாளர்.

பரசலூர்

06–03–2022 அன்று நக்கீரர் தெரு மூத்த உறுப்பினர் திரு. ச. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் திருமதி. பா. செந்தமிழ்ச்செல்வி இறைவணக்கம் பாட திரு. ஏ. ராமலிங்கம் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த திரு. A. ஜெயக்குமார் அவர்கள் தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் திரு. வீ. கண்ணன் பிள்ளை சென்ற மாத அறிக்கையையும் பொருளர் திரு. S.M. விஜய் பிள்ளை நிதிய அறிக்கையையும் தலைவர் உடல்நலமின்மையால் மு.அ. கார்குல நிதிய அறிக்கையை பொருளாளரும் வாசிக்க மையிருப்பு பணம், பாஸ்புத்தகம் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

CREW நிதியிலிருந்து நிதி உதவி வழங்கிய நிர்வாகத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. துணைத்தலைவர் திரு. V. சிவக்குமார் பேசுகையில் தமிழ் வருடப்பிறப்பு அன்று தன் வீட்டில் நடைபெறும் பஞ்சாங்கம் வாசிக்கும் வைபவத்தில் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

மார்ச் 6–ந் தேதி பரசலூர் வீரட்டேஸ்வரர் கோயிலில் நடைபெற்ற சைவ சமய வளர்ச்சிக்கு நடத்தப்பட்ட அஸ்தரயாகத்தில் பரசலூர் கார்குல சொந்தங்கள் பெருமளவில் கலந்துகொண்டு சிவத்தொண்டு செய்தார்கள்.

திருக்கடையூர் கும்பாபிஷேகத்திற்கு பாத யாத்திரையாகச் சென்ற தருமபுரம் ஆதீனம் 27–வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு பரசலூர் கார்காத்தார் சங்கத்தின் சார்பாக பூர்ண கும்ப மரியாதை நாதஸ்வர இன்னிசையுடன் மலர்மாலை வழங்கப்பட்டது. பரசலூர் கிராம கார்குல குடும்பங்கள் மேலையூர், கருவாழக்கரை, வல்லம், மேமாத்தூர், மடப்புரம் கிராமங்களிலிருந்தும் பெருமளவில் கார்குல சொந்தங்கள் கலந்து கொண்டனர்.

குலுக்கலில் ஆண்களுக்கான பரிசை க. வன்மீகம் பிள்ளை பெண்களுக்கான பரிசு V. ஜெயந்திக்கும் முறையே ச. பாலகிருஷ்ணன் பிள்ளை, பா. தங்கம் வழங்கினார். கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு திரு. க. வன்மீகம் பிள்ளை சால்வை அணிவித்தார்கள்.

திரு. V. சிவக்குமார் நன்றி கூற மூத்த உறுப்பினர் திரு. ச. பாலகிருஷ்ணன் பிள்ளை மழையையும் பொருட்படுத்தாமல் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- V. கண்ணன், செயலர்.

Cell : 9894960438

ஆக்கூர்

ஆக்கூர் சங்க கௌரவத்தலைவர் திரு. Dr. K. பாலக்கிருஷ்ணன் பிள்ளை மற்றும் தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை இவர்களின் ஆலோசனைப்படி, திருக்கடையூர் ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, திருக்கடையூருக்கு குரு ஆத்மலிங்க பாதயாத்திரை செல்லும் தருமபுரம் 27–வது ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளுக்கு 19–3–2022 அன்று மாலை 5–00 மணிக்கு ஆக்கூர் இரட்டைக்குளம் அருகேயுள்ள ராஜாஜி வீதியில் (பெருமாள் கீழவீதி) திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்கள் தலைமையில் ஆக்கூர் கார்காத்த வேளாளர் சங்கம் சார்பில் பூர்ண கும்ப வரவேற்பு அளித்து, பாதபூஜை செய்து ஆசி பெறப்பட்டது.

G. செல்வக்குமார். 9942480320

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு சங்க மாதாந்திர கூட்டம் 20–03–2022 அன்று சிறுவன் M.V. நித்திஸ் S/o விஜயராகவன் அவர்கள் இறைவணக்கம் பாட தலைவர் திரு.

B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் துவங்கியது. செயலாளர் R.K. ராஜசேகரன் அவர்கள் சங்க உறுப்பினர்களை வரவேற்று பேசினார்.

01–03–2022 அன்று மேலப்பெரும்பள்ளம் வடுவகிர்கன்னி சமேத வலம்புரநாத சுவாமிக்கு சிவன் ராத்திரியை முன்னிட்டு, 3, 4, மற்றும் 5–ஆம் காலத்தை வெகு சிறப்பாக நடத்தி, அன்னதானமும் செய்திட்ட நம் சங்க உறுப்பினர்களுக்கு மனமார்ந்த பாராட்டுதல் பதிவு செய்யப்பட்டது.

மேலப்பெரும்பள்ளம் வெள்ளை வினாயகர் கோவிலுக்கு புதிய மின் இணைப்பு பெற மிக சிரத்தையோடு பாடுபட்டு, புதிய மின் இணைப்பு பெற்று தந்த திரு. M. முத்து பிள்ளை அவர்களுக்கும், நிதி உதவி செய்திட்ட உறுப்பினர்களுக்கும் தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் சங்கம் சார்பாக பாராட்டுதலையும், மனமார்ந்த நன்றியையும் பதிவு செய்தப்பின் அனைவராலும் தேசியகீதம் பாட பெற்று சங்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பால. இலட்சுமணன்,
தலைவர். 9443783743

இலையமுதுகூடம் :

சங்க கூட்டம் 13–03–2022 அன்று தலைவர் திரு. A. நடனம் அவர்கள் இல்லத்தில் செம்பை ஒன்றியத்தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் தலைமையில் இறைவணக்கத்துடன் தொடங்கியது.

பொருள். திரு. சிவகடாட்சம் பிள்ளை அவர்கள் சமர்ப்பித்த சங்க வரவு செலவு கணக்கை ஏற்று கொள்ளவும்,

சங்க உறுப்பினர் தெய்வத்திரு. S. சபாநாயகம் பிள்ளை அவர்கள் துணைவியார் S. தேவகுமாரி அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தும்,

வழக்கம் போல் தமிழ் புத்தாண்டிற்கு உறுப்பினர்கள் அனைவருக்கும் பஞ்சாங்கம் வழங்குவது எனவும்,

சங்க உறுப்பினர் தெய்வத்திரு. வேலாயுதம் பிள்ளை அவர்கள் புதல்வரும் திருவெண்காடு ஹேமலதா டிரேடர்ஸ் உரிமையாளர் திரு. V. ராஜீ என்கிற அம்பலவாணன் அவர்கள் தானாக முன் வந்து பஞ்சாங்கம் வழங்க செலவாகும் முழுத்தொகையையும் தான் ஏற்றுக்கொள்வதாக அறிவித்ததை அடுத்து சங்க உறுப்பினர்கள் சார்பில் அவருக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் தேநீர் வழங்கப்பட்டு தேசிய கீதத்துடன் கூட்டம் முடித்து வைக்கப்பட்டு, செயலர் நன்றி வழங்க முடிவடைந்தது.

- G. சுப்பிரமணியன்,
செயலாளர்.

இராதா நல்லூர் :

சங்க கூட்டம் 13.2.2022 மற்றும் 20.3.2022 தேதிகளில் தலைவர் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி தலைமையில் நடைபெற்றது.

பிப்ரவரி மாத கூட்டத்தில் உறுப்பினர்களுக்கு பஞ்சாங்கம் வழங்க முடிவு செய்யப்பட்டது. செயற்குழு உறுப்பினர் G. மணிகண்டன் அவர்கள் அறுவடை செயின் வண்டி புதிதாக வாங்கி உள்ளதாகவும், சங்க உறுப்பினர்கள் அறுவடைக்கு அதை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது.

மார்ச் மாத கூட்டத்தில் துணைத்தலைவர் G. இராஜநாயகம் அவர்களின் வரவேற்புரைக்குப்பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்து, இராதாநல்லூர் நினைவில் நிற்கும் "இராசுப் பிள்ளை" குடும்பத்தினரால் சுபகிருது வருட பஞ்சாங்கம் வழங்கிய அமைப்புச் செயலர் இரா. மு.அ. செல்வம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சங்க செயற்குழு உறுப்பினர் S. இராமசாமி பிள்ளை அவர்களின் மருமகனும் ரேணுவின் கணவருமாகிய இரா. ரெங்கராஜன் அவர்கள் 06.03.2022 மறைவிற்கு (சென்னையில்) சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அமைப்புச் செயலர் இரா. மு.அ. செல்வம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– தி. முத்துக்குமரசாமி, தலைவர்.
9443645646

விசலூர் :

மாதாந்திர கூட்டம் 17–3–2022 அன்று அகஷ்த்தீஸ்வரர் ஆலய வளாகத்தில் இறைவணக்கத்துடன் செயலர். L. ராமசெல்வம் தலைமையில் பொருளர் C. கந்தசாமி பிள்ளை முன்னிலை வகிக்க செயலர், பொருளர் அறிக்கை வாசித்து பொருளாதார வரவு – செலவுகளை சொல்ல சங்கம் கூட்டம் அதனை ஏற்றுக்கொண்டது.

கீழ்கண்ட புதிய பொருப்பாளர்களை தேர்ந்தெடுத்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

கௌரவத்தலைவர் : E. லெட்சுமிகாந்தம் பிள்ளை, அமைப்பு செயலாளர் : கி. இராஜசேகர் பிள்ளை, சங்க ஒருங்கிணைப்பாளர் : கோ. பாலகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர்கள் : 1. நாகலிங்கம் பிள்ளை, 2. வேல்முருகன் பிள்ளை, துணைத்தலைவர் : க. கார்த்தி பிள்ளை, துணை செயலாளர் : கோ. மணிகண்டன் பிள்ளை, இளைஞர் அணி : தலைவர். C. பாலசந்தர்

பிள்ளை, செயலாளர் : R. மணிவாசம் பிள்ளை : பொருளாளர் : N. மணிகண்டன் பிள்ளை, மகளிர் அணி : தலைவி : B. செல்வி, செயலர் : S. சுலோக்ஷனா, பொருளர் : க. மல்லிகா, C. பாலசந்தர் பிள்ளை.

இந்த மாத உபயதாரர் C. பாலசந்தர் பிள்ளை நன்றி நவில கூட்டம் இனிதே சுபம் ஆனது.

L. பாபு (எ) ராமசெல்வம், செயலர்

நெடுங்காடு

நெடுங்காடுமையம்மாதக்கூட்டம்திரு.ராகவன் பிள்ளை (அன்னவாசல்) இல்லத்தில் 13–3–22 அன்று நடைபெற்றது. திரு. K.S. கணபதி சுப்பிரமணியன் பிள்ளை அவர்கள் இறைவணக்கம் பாடினார்.

திரு. C. பன்னீர்செல்வம் அவர்கள் சகோதரியும், திரு. பாலகிருஷ்ணன் மற்றும் திரு. கண்ணன் அவர்களின் தாயார் திருமதி. சகுந்தலா அம்மாள் மறைவிற்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. S. பத்மநாபன் பிள்ளை புதல்வி அட்சயா MBBS படிப்பிற்காக Jipmer-ல் சேர்ந்ததற்கு பாராட்டும், காளியாகுடி ஊராட்சி மன்ற தலைவி திருமதி. சரஸ்வதி பாண்டியன் அவர்களுக்கு ஏப்ரல் – 16 சித்திரை நிறைமதி விழாவில் பாராட்டவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிறப்பு பரிசுக்குலுக்கல் : முதல் பரிசு – திரு. G. செல்வகுமார் பிள்ளை – நெடுங்காடு, இரண்டாம் பரிசு – திருமதி. ஜெயந்தி – அன்னவாசல், மூன்றாம் பரிசு – திரு. K.S. கணபதி சுப்பிரமணியன் பிள்ளை – வரிச்சிக்குடி.

அடுத்த கூட்டம் ஏப்ரல் 3–ம் தேதி நடைபெறும். இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

P. பாலசுப்பிரமணியன், செயலர்.

திருவாரூர்

மாதாந்திர கூட்டம் 11–3–2022 அன்று சங்க பொதுக்குழு உறுப்பினர் திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்தை தலைவர் மருதவாணன் பிள்ளை தலைமை ஏற்றும் திரு. பனங்காடி SCS சேகர் பிள்ளை முன்னின்றும் நடத்தி வைத்தார்கள். இறைவணக்கமாக பன்னிரு திருமுறை பாராயணம் ஓதப்பட்டது. தலைவர் தனது உரையில் மறைந்த துணைத்தலைவர் திரு. தில்லைநாயகம் பிள்ளை அவர்களின் சங்கத் தொண்டுகளையும் குணநலன்களையும் வெகுவாக பாராட்டி பேசினார்கள். அவரின் இழப்பு நம் சங்கத்திற்கு மாபெரும் இழப்பு என கூறினார்கள். செயலர் சோமசுந்தரம் அவர்களும் துணைத்தலைவரின் சங்க ஈடுபாடுகளை பற்றி கூறினார்கள். சங்கத்தின் நிகழ்வுகளில் சென்ற மாதம் நடைபெற்ற பாலசுந்தரம் அவர்கள் மைந்தன் திருமண வரவேற்பில் கலந்து கொண்டு திருமண வரவேற்பு மடல் அளிக்க கலந்து கொண்டவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிற்றுண்டி, தேநீர், இனிப்பு பாக்கெட் வழங்கப்பட்டது. மறைந்த துணைத்தலைவர் திரு. தில்லைநாயகம் பிள்ளை அவர்களுக்கும், சங்க உறுப்பினர் திருசெங்காட்டாங்குடி கந்தசாமி பிள்ளை மகன் திரு. சாமிநாதன் அவர்களுக்கும் ஆத்மா சாந்தியடைய மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. பாலசுந்தரம் அனைவருக்கும் நன்றி கூறி கூட்டம் நிறைவுபெற்றது. அடுத்த கூட்டம் ஏப்ரல் 10–ம் தேதி நடத்தவும், மாதாந்திர கூட்டம் திருவாரூர் ராஜன் அறக்கட்டளையில் நடத்த ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்களை வேண்டி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளவும்,

இந்த கூட்டத்திற்கு இடம் தேநீர், சிற்றுண்டி அளித்த முத்துக்குமாரசாமி லலிதா தம்பதியர்க்கு நன்றியும், சங்கத்திற்கு திருமண நன்கொடை ரூ. 1000 மற்றும் இந்த கூட்டத்திற்கு இனிப்பு பாக்கெட் அளித்த திரு. பாலசுந்தரம் சாந்தி தம்பதியர்க்கு நன்றி கூறப்பட்டது.

– அ. சோமசுந்தரம், செயலாளர்.

கும்பகோணம் :

13–02–2022 ஞாயிற்றுக்கிழமை அன்று ராஜா ராஜேந்திரன் பேட்டை அ/மி விசாலாட்சி உடனுறை விஸ்வநாதர் ஆலய வளாக திறந்தவெளி அரங்கில் பிப்ரவரி மாத கூட்டம் திரு. M. பாலகுரு து. தலைவர் அவர்கள் தலைமையிலும் திரு. ராஜேந்திரன் குணசீலன் ஆகியோர் முன்னிலையிலும் நடைப்பெற்றது. திரு. பாலகுரு அவர்கள் இறைவணக்கம் பாடி தலைமையுரை மற்றும் வரவேற்புரையையும் வழங்கினார். திரு. A.S. பழனி து. செயலாளர் அவர்கள் முக்கிய நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். திரு. சாமிநாதன் (எ) இளங்கோ அவர்கள் சிட்டி யூனியன் வங்கி கும்பகோணம் 31–01–2022 அன்று பணி நிறைவு பெற்றதை பாராட்டும் விதமாக அவர் தம் இல்லத்தில் திரு. தி.மா. வைத்யநாதன் அவர்கள் தலைமையில் சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். அவர்தம் அன்னையார் திருமதி. கமலா முத்தையன் அவர்கள் சங்கத்திற்கு ரூ.

1000/– நிதியளித்து மகிழ்ந்தார். சென்ற ஆண்டு மாசி மகத்தன்று தொடங்கப்பட்ட பசிப்போர் புசிக்க என்ற அன்னதான திட்டம் வெகு சிறப்பாக மாதம்தோறும் சங்கடஹர சதுர்த்தி அன்று திரு. குணசீலன் அவர்களின் ஈடுபாட்டுடன் சிறப்பாக நடைப்பெற்று வருகிறது. இந்த ஆண்டும் மாசி மகத்தன்று அன்னதானம் நடைப்பெற்றது. அதுபோல் வரும் மாதங்களில் பிரதி அமாவாசையன்றும் அன்னதானம் வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. சிவகுமார் அவர்கள் சங்க நிதி அறிக்கையையும் திரு. T.S. பாலசுப்ரமணியன் புரவலர் நிதி அறிக்கையையும் அளித்தனர் அன்றைய தினம் புரவலர் நிதி, பசிப்போர் புசிக்க நிகழ்விற்கான நிதி ஆகியவற்றிற்கு நிதி வழங்கியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு நடைபெற உள்ள மங்கள சந்திப்பின் ஓர் நிகழ்வாக வரன்களின் விவரப்பட்டியலை திருப்பனந்தாள் அருகே உள்ள திருலோகி என்ற ஊரில் அமைந்துள்ள சிவாலயத்தில் வைத்து வழிபாடு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

சங்க உறுப்பினர் CA. R. கணேஷ் அவர்களின் தந்தையும் நமது சங்க து. செயலாளர் இளங்கோ அவர்களின் மாமனாரும் ஆகிய திரு. KRMSS. சம்பந்தம் @ S. ராமலிங்கம் (CUB, Retd) அவர்களின் மறைவிற்கும், சங்க உறுப்பினர் P. முத்துசாமி அவர்களின் மாமனார் திரு. கோவிந்தன் அவர்களின் மறைவிற்கும் ஓர் நிமிட மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. T.S. பாலசுப்ரமணியன் அவர்களின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– S. விஜயகுமார்.,
செயலாளர்

தஞ்சாவூர் :

சங்க கூட்டம் 26–02–2022 அன்று திருமிகு. S. திருஞானசம்பந்தம் அவர்களின் இல்லத்தில், சங்க செயலாளர் திரு. S. மதியழகன் தலைமையில் நடைப்பெற்றது.

2021–22–ஆம் ஆண்டிற்கான தஞ்சை மாவட்ட கார்குல சொந்தங்களுக்கு கல்வி உதவித்தொகையாக 8 நபர்களுக்கு ரூ. 1.20 இலட்சம் வழங்கிய அறக்கட்டளை தலைவர் திருமிகு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கும், நிர்வாக அறங்காவலர் குழுவுக்கும்,

2021–22–ஆம் ஆண்டிற்கு காமதேனு அறக்கட்டளைக்குநன்கொடையாகரூ.12,000/–ரூபாய் பன்னிரெண்டாயிரம் வழங்கிய திருமதி. சாவித்திரி பாலகிருஷ்ணன் அவர்கள் ஆண்டுதோறும் தொடர்ந்து நன்கொடை வழங்கி வருவதற்கும் பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக்கொண்டது.

திருமதி. லதா மனோகரன் அவர்களின் தாயார் மறைவிற்கும், திரு. இரவிச்சந்திரன் அவர்களின் தாயார் மறைவிற்கும் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சிற்றுண்டி வழங்கிய திரு. S. திருஞானசம்பந்தம் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

- S. மதியழகன், செயலாளர். 9443888633

திருச்சி மகளிர் அணி :

மகளிர் தினம் 11–3–2022 அன்று திருச்சி சாஸ்திரி ரோடு ''ரங்கா ஹால்'' மண்டபத்தில் நடைபெற்றது.

திருமதிகள். கௌரி ஜெகதீசன், சரஸ்வதி பாலசுப்ரமணியன், மீனா மோகன், கலா சொக்கலிங்கம் மற்றும் கலாவதி சண்முகம் ஆகியோர் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். இறைவணக்கம் முடிந்ததும் திருச்சி சங்கத்தின் மகளிர் அணியின் அமைப்பாளரும் அதன் முன்னாள் தலைவருமான திருமதி. ஜெயந்தி முத்துக்குமாரசாமி அவர்களது மறைவுக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. திருமதி. சுஜா ஷங்கர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திருமதி. சரஸ்வதி பாலசுப்பிரமணியன் தனது தலைமை உரையில் மகளிர் மாண்பையும் திருச்சியில் மகளிர் அணி செய்து வரும் சேவைகளையும் சிறப்பாக எடுத்துரைத்தார். மகளிர் அணியின் மிக முக்கிய தூணாகவும் சமூக ஆர்வலர் ''மகளிர் மாண்பின் அடையாளம்'' திருமதி. கலாவதி சண்முகம் அவர்களின் சமூகம் மற்றும் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட பணிகளை பாராட்டி திருமதி. கௌரி ஜெகதீசன் மற்றும் திரு. சிவகுருநாதன் ஆகியோர் பேசினர். அவருக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.

பிறகு தனக்கு அளிக்கப்பட்ட பாராட்டுகளை ஏற்று திருமதி. கலாவதி சண்முகம் உரையாற்றினார்கள். பின்னர் உரையாற்றிய திருச்சி சங்கத்தின் தவைலர் திரு. பாலசுப்பிரமணியன், திருமதி. முத்துக்குமாரசாமி அவர்களின் சேவைகளையும் அவரது தலைமைப் பண்பையும் பாராட்டினார்கள். திருமதி. கலா சண்முகம் திருச்சி கார்குல மகளிர் மத்தியில் ஒரு மகுடமாக திகழ்வதாக புகழ்ந்துரைத்தார்.

திருமதி. மல்லிகா சேதுராமன், திருமதி. சுந்தரி புகழேந்தி ஆகியோர் 8, 9 மற்றும் 12–ம் வகுப்பு மாணவ மணிகளுக்கு அறிவுசார் வினாடி வினா நிகழ்ச்சி நடத்தி பரிசளித்தனர். திரு. சூரியா குமார் கல்வி சம்பந்தமான பயனுள்ள பல குறிப்புகளை வழங்கி

படிக்கும் மாணவர்களை உற்சாகப்படுத்தினார். திருமதி. வள்ளி சிவக்குமார் நன்றி உரையாற்றினார். திருமதி. சுகந்தி ரவிக்குமார் நிகழ்ச்சியை சிறப்பாக நேர உணர்வுடன் தொகுத்து வழங்கினார். நாட்டுப்பண் இசைக்கப்பட்டு இரவு விருந்துடன் நிகழ்ச்சி இனிதே முடிந்தது. விழா ஏற்பாடுகளை செயலாளர் திரு. C. சுப்ரமணியன் சிறப்புடன் செய்திருந்தார்.

- M. பாலசுப்ரமணியன் தலைவர், 98424 44322

ஈரோடு :

12–3–22 சனிக்கிழமை அன்று சங்க மகளிரணி சார்பாக மகளிர் தினவிழா மண்டப வீதியிலுள்ள மரகதம் அண்ணாமலை பள்ளி கட்டிட வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட மகளிரணித் தலைவி மு. தேன்மொழி முருகானந்தம் தலைமை தாங்க, இறைவணக்கம் செல்வி. ரத்தினம் அரசி பாடினார். வரவேற்புரை செல்வி. அலமேலு மங்கை வழங்க கலை நிகழ்ச்சிகளின் துவக்கமாக செல்வி. சுஜி. பரதநாட்டியம் ஆடினார். பாட்டு, வார்த்தை விளையாட்டு, விடுகதைகள், நினைவாற்றல் திறன், Lucky Corner, Passing Ball, பாட்டுக்கு பாட்டு, குழந்தைகளுக்கு குறள் ஒப்புவித்தல், பாட்டு பாடுதல் போன்ற நிகழ்வுகள் நடத்தப்பட்டன. அனைத்து உறுப்பினர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்று கொண்டாடி மகிழ்ந்தனர். நிகழ்ச்சிகளை செண்பகவள்ளி மதியழகன் தொகுத்து வழங்கினார். வந்திருந்த அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. நினைவு பரிசுக்காக

திரு. தேவேந்திரன் ரூ. 1000/–, திருமதி. தேன்மொழி ரூ. 500/–, செல்வி அலமேலு மங்கை ரூ. 500/–, திருமதி. செண்பகவள்ளி ரூ. 500/– வழங்கினார்கள். அனைவருக்கும் ஸ்வீட், காரம் தேனீருடன் வழங்கப்பட்டது. அனைவருக்கும் திருமதி. கௌரி நன்றி கூற, நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவு பெற்றது. மொத்தம் 40 பேர் பங்கேற்றனர்.

A. மதியழகன், செயலாளர்.

ஆழ்வார்குறிச்சி :

நமது கார்குலத் தெய்வம் ஆழ்வார்குறிச்சி அருள்மிகு வடக்குவாய்ச்செல்வி அம்மன் கோவில் பத்தாம் வருட வருஷாபிஷேகம் வரும் சுபகிருது வருஷம் வைகாசி மாதம் 6–ம் தேதி (20–05–2022) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 12.00 மணிக்குள் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வந்திருந்து அம்பாளின் அருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

– திரு. சாவடி. S. சிதம்பரம். 9442064817

வருந்துகிறோம்

தியாகராஜ நகர் திரு. சம்பந்தம் பிள்ளை அவர்களின் மனைவியும் திரு. S. சதீஸ்ஆனந்த், திரு. S. கணேஷ்ஆனந்த் இவர்களின் தாயாருமான திருமதி. வசந்தா அவர்கள் (26–02–2022) மறைவிற்கும், ராஜீவ்காந்தி நகர் திரு. A. விஜயகுமார், திரு. A. செந்தில்குமார் இவர்களின் தாயார் திருமதி. சரோஜா அவர்கள் (09–03–2022) மறைவிற்கும், கன்னியாகுடியில் வசித்து வரும் திரு. L. பாஸ்கரன் பிள்ளை மற்றும் திரு. L. அசோகன் பிள்ளை இவர்களின் தாயார் பவளக்கொடி அம்மாள் அவர்கள் (16–03–22) மறைவிற்கும் சீர்காழி சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

நினைவுகள்

R. சரஸ்வதி - C. இரத்தினசபாபதி பிள்ளை

(Ex. கர்ணம், உடையார்குடி)

மறைவு : 11.06.2013 மறைவு : 27.03.2013

தெய்வமாய் வானின்று வாழ்த்திட வேண்டி வணங்கும்

R. சீனிவாசன், R. சங்கரன், R. சுப்ரமணியன், R. சண்முகம்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அறப்பணி ஆசிரியப் பெருந்தகை
இராமசாமி - விருத்தாம்பாள் அருந்தவப்புதல்வன்
சண்முகசுந்தரம் அவர்கள் மறைந்து ஓர் ஆண்டு நிறைவில்
நினைவால் போற்றுகின்றோம்...!

கண்ணீர் துளிகளை காணிக்கையாக்குகின்றோம் !
மனிதமும், மனித நேயமும் நிறை மானுட மைந்தர் இவர்
மண்வளம், மழையாற்று வளம் குறைவிலா மணப்பறவை இவர் உதித்த சிற்றூர்
உழவை மட்டுமே நம்பி உயர்ந்த அவர்தம் வாழ்க்கையில்
வான் பொய்த்தது, வற்றாத காவிரியும் வறண்ட நிலையில்
எதிர்கால வாழ்வில் ஏற்றம் எங்கே என்ற வினாக்குறியில் ?
மனையறமாய் வாழ்வினில் கரம் பிடித்த **மலர்விழியால்**
விடியலுக்கு விடை சொல்ல **ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது**
மயிலாடுதுறைக்கு இடம் பெயர்ந்து பொருள் ஈட்டும் வழி அறிந்து
உறவுகள் சூழ்ந்திருக்க, தனக்கென தனிப்பாதை தான் வகுத்து
நகை அணி வணிகத்தில் கோலோச்சும் **ஏ.ஆர்.சி.யில்** பணியேற்று
உண்மை, உழைப்பு, உயர்வு என்றே உள்ளத்தில் உரமேற்றி
பணியிலேதான் இணைந்து படிப்படியாய் தான் உயர்ந்து
நம்பிக்கை, நாண(ந்)யம் நகை வணிகத்தில் மட்டுமல்ல
தன் உள்ளத்தில், ஊனில் கலந்து உழைத்தமையால்
உரிமையாளர் உளம் கவர்ந்தார். **கல்லா பெட்டியையும்,**
அவர்தம் இல்ல கட்டுமானத்தையும் கண்காணிக்கும் திறன் பெற்றார்.
நல்ல குடும்பம் .. ஓர் பல்கலைக்கழகமாய்..
வரவு அறிந்து செலவு செய்தமையால் நிறைவான வாழ்க்கை !
இதயம் முழுதும் அன்பை சுமந்தமையால்
இதயத்தின் வால்வு சுருங்கி விரியும் தன்மைதான் குறைந்து
தானாய் நின்று போனதோ... ?
ஆம் இன்று மனிதம், மனிதநேயத்தைச் சுமந்த
அமரர் சண்முகசுந்தரம் ... அவர் மறைந்து ஓராண்டில்...
அவர்தம் **எண்ணங்களை போற்றுகின்றோம்...!**
அவரின் ஆத்மா நிறைநிலை எய்த **நினைவால் வணங்குகின்றோம்...!**

அவர்தம் எண்ணங்களை நெஞ்சில் நிறுத்தி என்றும் வழி நடப்போம் என்று உறுதிகொள்கிறோம்.

துணைவி : **ச.மலர்விழி**

மகன் : **ச.வெங்கடாஜலம்**
மருமகன் : **வெ.குமாரவேணி**

மருமகன் : **கோ.மோகன்**
மகள் : **ச.காயத்திரி**

பேரன் : **மோ. மணிபாலன்**
பேத்தி : **வெ. மித்ரா**

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் !

தோற்றம்
30.04.1953

மறைவு
20.03.2022

விளாகம் தெய்வத்திரு. சபாநாயகம் பிள்ளை – புனிதவள்ளி அம்மாள் அவர்களின் மகளும், காட்டுமன்னார்குடி தெய்வத்திரு. சிதம்பரம் பிள்ளை –அவையாம்பிகை அவர்களின் மருமகளும், எனது மனைவியுமான

திருமதி **R. லலிதா** அவர்கள்

20.03.2022 அதிகாலை 3.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்ததுடன் தெரிவித்து கொள்கிறோம்.

நினைவில் வாழும்

C. ரவிக்குமார் (கணவர்)

மகள்கள் :

S. உமாமகேஸ்வரி

R. அனுசுயா தேவி

மருமகன்கள் :

G. செந்தில்

V. அருள் சிவமுருகன்

பேரன்கள் : **S. நகுல், A. அரிஞ்சய் முருகன்**

(16/2, 2nd Floor புவனேஸ்வரி நகர் முதல் மெயின் ரோடு,
வேளச்சேரி , சென்னை –42. Ph : 9980924813.

19ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
17–4–1985

மறைவு
7–4–2003

G. குமாரவேல் 1st B.D.S

(அண்ணாமலை நகர்)

திட்டக்குடி – 606 106.

தம்பி

உன் நினைவில் வாழ்கிறோம்.

உன்னை மீண்டும் பார்க்கும் நாள் வருமா.

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்ந்தது
23.01.1951

விண்ணில் மறைந்தது
02.05.2019

திரு. க.இமயவரம்பன் பிள்ளை

சிதம்பரம் கூட்டுறவு நிலவள வங்கி (ஓய்வு)

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், நகராமலை
தெய்வத்திரு. ஆ.கல்யாணசுந்தரம் பிள்ளை – சகுந்தலா
அவர்களின் மூத்த குமாரரும் எங்களின் தந்தையுமான
க. இமயவரம்பன் பிள்ளை அவர்களின்
மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

என்றும் அவர்கள் நினைவில் வாழும் **திருமதி. சுந்தரவடிவு இமயவரம்பன்**

I.ஆனந்தன்	S.செந்தில்	B.முத்துகுமார்
A.நிரஞ்சனா	S.காயத்ரி	I.இமயவள்ளி
A.இளம்பூரணன்	S.ப்ரவின்	M.தன்யஸ்ரீ
A.இளம்பிறையன்	S.சஞ்சன்	M.பிரணவ்

மற்றும் உறவினர்களும், நண்பர்களும்

விலகாத நினைவில்
வாழ்கின்றார் தில்லை அம்மா!
8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25.08.1957

மறைவு
28.04.2014

KP. தில்லைச்செல்வி

பார்த்த திசை கண் கலங்கும்
பாதையெல்லாம் சேதி சொல்லும்
சேர்த்து வைத்த நினைவனைத்தும்
தில்லையம்மா பேர் சொல்லும்

வாழ்வு தரக் கனவு கண்டாய்
வளர்ச்சி எண்ணி உடல் தளர்ந்தாய்
சூழ்ந்து வரும் நலத்திலெல்லாம்
தோன்றுகின்றாய் நீ அம்மா!

உறவாலும் தொழிலாலும்
உயிர் தந்த **தில்லையம்மா**
பிறந்தோரால் வாழ்கின்றாய்
பிரிவேது நினைவிற்கு?

KP. விஜய்
KPV. மீனாஸ்ரீ

KPV. கவுதம்
KPV. அஜய்

S. கலியபெருமாள்
KP. ஸ்டோர்.
பெரியகடைவீதி,
மயிலாடுதுறை.
செல் : 9443651746

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்ந்த நாள்
16.1.1950

உதிர்ந்த நாள்
24.3.2010

மயிலாடுதுறை கணபதி நகர் திரு. D. சுப்ரமணியன் அவர்களின் அருமைத் துணைவியாரும் மாநில கார்காத்த வேளாளர் சங்கத்தின் மகளிர் உறுப்பினரும், மயிலாடுதுறை நகர கார்காத்தார் மகளிரணித் தலைவியும் எங்களது பாசத்திற்குரியவருமான திருமதி. **ஜெயலட்சுமி** அவர்கள் 2010 ஆம் ஆண்டு மார்ச் 24ம் தேதியன்று மறைந்தார்கள்.

12 ஆண்டுகள் உருண்டோடிவிட்டது நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து. ஆயினும் எங்களது நெஞ்சங்களில் நீங்கள் நீக்கமற நிறைந்துள்ளீர்கள். என்றென்றும் நீடிக்கும் இந்நிலை.

மகள்
திருமதி. **P. ஆண்டாள்**
மருமகன்
B. **பாரிவேந்தன்,** B.E.
பேரன்
P. கௌதமன்

மகள்
திருமதி. **R. கிருத்திகா**
மருமகன்
திரு. **S. ராஜசேகர்** M.D.S.
பேத்தி
R.K. தீபிகா

கண்ணீர் அஞ்சலி

மலர்ந்தது:
25.08.1938

உதிர்ந்தது:
24.02.2022

சு. மங்கையர்க்கரசி

தர்மநல்லூர் எங்களது தாயாரும் (லேட்) திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மனைவியும், பின்னலூர் (லேட்) திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் புதல்வியுமான திருமதி. **சு. மங்கையர்க்கரசி** அவர்கள் 24–02–2022 (மாசி மாதம் 12–ம் நாள்) இறைவன் திருவடி அடைந்தார்கள்.

எங்களது தாயார் இல்ல முகவரி :
சுபம் அப்பார்ட்மெண்ட்
கனரா வங்கி மேல்தளம்,
15, வடக்கு ரத வீதி,
சிதம்பரம் – 608001.

திருமதி. **சிவகாம சுந்தரி தில்லை கோவிந்தன்**
திருமதி. **வள்ளி நடராஜன்**

எங்களது மாமா
திரு. **பொன்னம்பலம் பிள்ளை**
திரு. **பழனிவேல் பிள்ளை** (பாலு பிள்ளை)
திரு. **சந்திரசேகரன் பிள்ளை**

எங்களது சித்தி
திருமதி. **மீனாட்சி** (லேட்) **திருவேங்கடம் பிள்ளை**
திருமதி. **கோமதி சிவப்பிரகாசம் பிள்ளை**

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
29.05.1949

மறைவு
27.01.2022

வி. தனலெட்சுமி

மயிலாடுதுறை மாவட்டம் மேலையூர் தெய்வத்திரு. **ம. விஸ்வநாதன் பிள்ளை** அவர்களின் மனைவியும் எனது தாயாருமான வி. தனலெட்சுமி, (பூம்புகார் மேலையூர் சீனிவாச மேல்நிலைப்பள்ளி பணி ஓய்வு) அவர்கள் 27.01.2022 வியாழனன்று மதியம் இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாருக்கு இறுதி மரியாதை செய்தும், பிற சடங்குகளில் பங்கேற்றும் எங்களது துயரத்திலும் பங்கேற்ற அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்களது மனமார்ந்த உணர்வுகளை உரித்தாக்குகின்றோம்.

மகன் : திரு. **வி. நடராஜன்**
மருமகள் : **தி. சுகன்யா**
பேரன் : **ந. பிரசன்னா**

மருமகன் : திரு. **எஸ்.நடராஜன்**
மகள் : திருமதி. **வி. லதா**
பேத்திகள்: **ந. காவியா**
ந. நந்திதா

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th April 2022

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**